# இந்து சமய சாரம்

(சிறுவர்க்கான சமயக் கட்டுரைகள்)

ஆக்கியோன்
இரா. கந்தையா, பி. ஏ.

வெளியீடு
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
98, வோட் பிளேஸ், கொழும்பு 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய சாரம்

(சிறுவர்க்கான சமயக் கட்டுரைகள்)

இரா. கந்தையா, பி. ஏ.

அறநெறிப் பாடசாலைகளுக்கான
இலவச வெளியீடு - 5

வெளியீடு
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
98, வோட் பிளேஸ்,
கொழும்பு 7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விளக்கக் குறிப்புக்கள்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இந்து சமய சாரம் (சிறுவர்க்கான சமயக் கட்டுரைகள்) |
| ஆசிரியர் | : | இரா. கந்தையா, பி. ஏ. |
| துறை | : | இந்து சமயம் |
| முதற் பதிப்பு | : | 1996 |
| இரண்டாம் பதிப்பு | : | 1997 செப்டெம்பர் |
| வெளியீடு | : | இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம். 98, வோட் பிளேஸ், கொழும்பு 07. |
| உரிமை | : | இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு |
| அச்சுப் பதிப்பு | : | ஸ்பாட்டன் கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட் 154, ஸ்ரீ ரட்ணஜோதி சரவனமுத்து மாவத, கொழும்பு 13. |
| பக்கங்கள் | : | 129 |
| பிரதிகள் | : | 5,000 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளரும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமாகிய திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்கள் இரண்டாம் பதிப்பிற்கு வழங்கிய வாழ்த்துச்செய்தி

நாட்டின் பல பாகங்களிலும் இந்து ஆலயங்களில் அறநெறிப்பாடசாலைகள் சிறப்பாக இயங்கிவருகின்றன. இவற்றுக்குத் தேவையான நெறிப்படுத்தலையும், வழிகாட்டலையும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடர்ந்து அளித்து வருகின்றது.

அறநெறிப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான துணை நூல்களை திணைக்களம் அவ்வப்போது அச்சிட்டு வழங்கிவருகின்றது. "இந்துசமய சாரம்" எனும் இந்த நூல் மாணவர்களுக்கு வழங்கவென அச்சிடப்பட்ட ஐந்தாவது இலவச வெளியீடாகும்.

இந்நூலின் முதற்பதிப்பு 15,000 பிரதிகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டமையால் மீண்டும் இரண்டாவது பதிப்பு அச்சிடப்படுகின்றது.

இந்நூல் அறநெறிப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு பயன் மிக்கதாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

*18. 09. 1997.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் இரண்டாம் பதிப்பிற்கு வழங்கிய வாழ்த்துச் செய்தி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப்பாடசாலைகளுக்கென அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கும் நூல் வரிசையில் "இந்துசமய சாரம்" எனும் நூல் இரண்டாவது பதிப்பாக வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

முதற் பதிப்பாக அச்சிடப்பட்ட 15,000 பிரதிகளும் விநியோகிக்கப்பட்டுவிட்டன. மாணவர் தொகை அதிகரித்து வருவதனால் மீளவும் அச்சிடவேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. இந்நூல் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு மாணவர்களுக்கு மிகவும் பயன்தரத்தக்க வகையில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலை அறநெறிப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் சிறந்த முறையில் பேணுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

18. 09. 1997.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இந்து சமய சாரம் என்னும் இந்நூலைச் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் எளிமையும் தெளிவும் மிக்க நடையில் திரு. இரா. கந்தையா அவர்கள் ஆக்கித் தந்துள்ளார்கள்.

இலங்கையில் பாடசாலைகளில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு பதினொன்று வரை கற்கும் மாணவர்கள் யாவரும் சமயத்தை ஒரு கட்டாய பாடமாகக் கற்றுவருகின்றனர். அம் மாணவர்களுக்குரிய பாடநூல்களுக்குத் துணை நூலாகவும் அவர்கள் அறிவை விருத்தி செய்ய உதவுவதாயும் அமைகிறது இந்நூல்.

இலங்கயில் வழங்கும் இந்து சமயம், சைவ சமயம் எனவும் அழைக்கப்படுகின்றது. சைவமே இங்கு பெரு வழக்காக உள்ளதால் இவ்வாறு அழைக்கப்படுதல் பொருத்தம்.

இந்து சமய சாரம் என்னும் இந்நூலில் இலங்கை வாழ் சைவ சமயிகளினால் பின்பற்றப்படும் சமய வழக்கங்கள், அவர்கள் வழிபடும் கடவுளர்கள், அவர்களிடையே வழக்கிலுள்ள புராண இதிகாசக் கதைகள், சமயப் பெரியோர் வரலாறு ஆகியன சிறுவர்க்கேற்ற முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு விடயத்தையும் சிறு, சிறு கட்டுரைகளாக நூலாசிரியர் ஆக்கித் தந்துள்ளார்.

நூலாசிரியர் திரு. கந்தையா, கலைமாணி பட்டதாரியாவார். மொண்டசோரி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். முப்பத்திரண்டு வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியவர். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து கல்வி, சமயப் பணிகளை ஆற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் பீஜீத் தீவில் சில ஆண்டுகள் வாழ்ந்தார். அங்கு சமயக் கல்வியைப் பரப்புவதில் ஊக்கத்தோடு உழைத்தார். அந்நாட்டுச் சிறார்களுக்கு சமயக் கல்வியை போதித்த அனுபவம் வழியாகவே இக் கட்டுரைகள் ஆக்கப்பட்டன.

இந்நூல் இந்து சமயக் சிறார்களுக்கு சிறந்தவோர் துணை நூலாக அமையும் என்பது நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

'இந்து சமயம்' — "மக்களை ஒழுங்காக வாழச் செய்யப் பெரியோர்கள் நன்கு வகுத்த வாழ்க்கை நெறி" எனலாம். அதன் உயிர்நாடி தர்மமாகும். மனிதன் வாழ்க்கை நலம்பெறத் தர்மம் முக்கியமென இந்துக்கள் நம்பினார்கள். ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திரசரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் மிகவும் அழகாகக் கூறுகிறார். "இந்து மதத்திற்கு உயிர்நிலை, தனிமனிதனுடைய சுயதர்மமும் சுத்தமான வாழ்க்கையுந் தான். தனி மனிதனுடைய அனுஷ்டானத்தாலும் பரிசுத்த சக்தியாலும் இந்து மதம் நிலைபெற்று நிற்கிறது. எந்த மதமும் தோற்றுவதற்கு முன்பு இருந்தும், ஏனைய மதங்கள் பல படை எடுத்து வந்ததையும் மீறி, மதமில்லாத நாஸ்திகத்தையும் சமாளித்து, இந்து மதம் ஜீவனோடிருக் கிறது" என்பதே என் அபிப்பிராயமாகும். (தெய்வத்தின் குரல் 111, 1982 பதிப்பு, பக்கம் 265) தனி மனிதன் நன்கு வாழ்ந்தால் அவன் குடும்பம், சமூகம், இனம், வாழும் தேசம் எல்லாம் மிக நன்கு சீராகும்.

இந்துக்களாகிய நாம் இந்து சமய நூல்களைப் படித்து, கூடியளவு சமயத்தை நன்கு விளங்கி அனுட்டிக்க வேண் டும். வேதங்கள் முதல் புராணங்கள் வரை பல நூல்களும் இருப்பதால், அவரவர் அறிவுக்கேற்ற நூல்களைப் படிப் பது மிக நல்லது. முற்காலத்தில் நம் திருக்கோயில்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடங்களிலும் புராண, இதிகாசங்கள் படிக்கக் கோயில் குருக்களும் அறிஞர்களும் உதவினர். யாழ்ப்பாணத்தில் " கந்தபுராண கலாசாரம் " ஒன்று வளர்ந்து மக்களை நன்கு வாழவைத்தது. இன்று அக்கதை சரித்திரமாகி விட்டது. அன்று திருக்கோயில்களில் பக்தியும், கூட்டு வாழ்வும், இறை அன்பும் பெருகின. அந்த நிலை பாடசாலைகள் மூலம் வளர்க்கப்படல் வேண்டும். " பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் " என பாரதியார் முழங்கியது இது போலும்.

இந்துக்களில் சிலர் புராண இதிகாசங்களை வெறும் கற்பனைக் கதைகள் என நினைக்கின்றனர். அதனாலேயே ஸ்ரீ ல ஸ்ரீ நாவலர் பெருமான் புராணங்களின் உட்கருத்தையும் பயன் கூறுபவர்கள் மிக விளக்க வேண்டுமென வற்புறுத்தினார். சிறுவர்கள் இளமையில் இந்து சமயத்தை நன்கு அறிந்து மேற்படிப்பாக, கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் நன்கு ஆராய்ந்து இந்து சமய உண்மைகளை அறிய வேண்டும். விஞ்ஞானங்களுடன் மெய்ஞ்ஞானமும் வளர்ந்தாலன்றி மனிதன் பூரண வளர்ச்சி பெறமுடியாது.

நாம் சிங்கப்பூர், மலேசியா, பிஜித் தீவுகள் ஆகிய நாடுகளுக்குப் போனபொழுது மேற்குறித்த இந்த எண்ணம் வலுப்பெற்றது. பிஜித் தீவில் ' சாது குப்புசாமி ' என்ற பெரியார் உருவாக்கிய ' தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம் ' அங்கு பல பாடசாலைகளை நடத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளிலும் இந்துப் பிள்ளைகள் தமிழ் படிக்கிறார்கள் . அதன் பொதுக் காரியதரிசி திரு. என். கே. நாயுடு அவர்களும், தமிழ் ஆலோசகர் திருமதி உமா நிர்க்குணம் அவர்களும் எமது துணையுடன் பாடத் திட்டம், பயிற்சி நூல்கள், கருத்தரங்குகள், ஆசிரிய புத்தூக்க வகுப்புக்கள் ஆரம்பித்து நடத்த நாமும் ஊக்கப் படுத்தினோம். அங்குள்ள சிறுவர்கள் வாசிப்பதற்கு இந்து சமய நூல்கள் ஏதும் கிடைத்தால் நலம் எனவும் அவர்கள் விரும்பினர். சிறுவர்களுக்கு ஏற்ற சிறு கட்டுரைகளாக இந்துத் தெய்வங்களையும், இந்து சமய வீர புருஷர் களையும், இந்து சமயத்தையும், புராண இதிகாசக் கதைகளையும், பெரியோர் வரலாறுகளையும் தொகுத்தால் எமது நாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் இந்து சமயத்தை அறிய விரும்பும் சிறுவர்களுக்கு மாத்திரமல்ல, யாவருக்கும் பயனளிக்குமெனக் கருதினோம். அதன் பயன் இச்சிறு நூல்.

சிறுவர் இலக்கியமாக இலங்கை அரசாங்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இப்போது இக்கட் டுரைகளை வெளியிடுகின்றது. இந்து சமயமும் கலாசார மும் வளர இது நல்ல தருணமெனக் கருதுகிறோம். இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரம ராஜா ஆகியோர் இச்சிறு நூல் வெளிவரத் துணை புரிந்தமைக்கு எமது நன்றி. எங்கள் நாட்டு இந்துச் சிறுவர்களுக்கும், கடல் கடந்த நாடுகளிலுள்ள இந்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கும், இந்து மதத்தை அறிய விரும்பும் ஏனையவர்களுக்கும் இந்நூல் பயன்பட இறைவன் கிருபை கிடைப்பதாக எனப் பணிவன்புடன் வேண்டு கிறோம்.

வணக்கம்.

இரா. கந்தையா

" அன்பகம் ",
கொக்குவில்,
1996.08.15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. இந்து சமயம் ... ... | 1 |
| 2. மும்மூர்த்திகள் ... ... | 3 |
| 3. சிவபெருமான் ... ... | 5 |
| 4. அம்பாள் வணக்கம் ... ... | 7 |
| 5. சிவனும் உமையும் ... ... | 9 |
| 6. பிள்ளையார் ... ... | 11 |
| 7. பிள்ளையார் பெருமை ... ... | 13 |
| 8. முருகக் கடவுள் ... ... | 15 |
| 9. முருகன் பெருமை ... ... | 17 |
| 10. சிவ குமாரர்கள் ... ... | 19 |
| 11. ஸ்ரீ மகா விஷ்ணு ... ... | 21 |
| 12. ஸ்ரீ கிருஷ்ண பகவான் ... ... | 23 |
| 13. மகா விஷ்ணுவும் இலக்குமியும் ... ... | 25 |
| 14. மகா விஷ்ணுவின் அவதாரங்கள் ... ... | 27 |
| 15. வேத காலத் தெய்வங்கள் ... ... | 29 |
| 16. இந்துக்களின் கோவில்கள் ... ... | 31 |
| 17. இந்துக்களின் விரதங்கள் ... ... | 33 |
| 18. இந்துக்களின் விழாக்கள் ... ... | 35 |
| 19. நவக்கிரகங்கள் ... ... | 37 |
| 20. ஸ்ரீ நாரத மகா முனிவர் ... ... | 39 |
| 21. அகத்தியர் ... ... | 41 |
| 22. இராமாயணம் ... ... | 43 |
| 23. ஸ்ரீ அனுமான் ... ... | 49 |
| 24. இராவணன் ... ... | 51 |
| 25. இராமரும் சீதையும் ... ... | 53 |
| 26. மகா பாரதம் ... ... | 56 |
| 27. பஞ்ச பாண்டவர்கள் ... ... | 62 |
| 28. வீட்டுமர் அல்லது பீஷ்மர் ... ... | 64 |
| 29. கர்ணன் ... ... | 66 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | பக்கம் |
|---|---|---|
| 30. | அர்ச்சுனன் ... ... | 69 |
| 31. | கண்ணகி அம்மை ... ... | 71 |
| 32. | சகுந்தலை ... ... | 73 |
| 33. | பிரகலாதன் ... ... | 76 |
| 34. | துருவன் ... ... | 78 |
| 35. | அரிச்சந்திரன் கதை ... ... | 80 |
| 36. | நளன் — தமயந்தி ... ... | 82 |
| 37. | சத்தியவான் சாவித்திரி ... ... | 84 |
| 38. | திருஞானசம்பந்தர் ... ... | 87 |
| 39. | அப்பர் சுவாமிகள் ... ... | 90 |
| 40. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் ... ... | 92 |
| 41. | மாணிக்கவாசக சுவாமிகள் ... ... | 94 |
| 42. | மார்க்கண்டேயர் ... ... | 96 |
| 43. | கண்ணப்பர் ... ... | 98 |
| 44. | நம்மாழ்வார் ... ... | 100 |
| 45. | ஆண்டாள் கதை ... ... | 102 |
| 46. | ஸ்ரீ ஆதிசங்கரர் ... ... | 104 |
| 47. | பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் ... ... | 106 |
| 48. | சாரதாமணி தேவியார் ... ... | 108 |
| 49. | சுவாமி விவேகானந்தர் ... ... | 110 |
| 50. | தியாகராஜ சுவாமிகள் ... ... | 112 |
| 51. | இராமலிங்க அடிகள் ... ... | 114 |
| 52. | பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி ... ... | 116 |
| 53. | ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் ... ... | 118 |
| 54. | திருவள்ளுவர் ... ... | 120 |
| 55. | ஔவையார் ... ... | 122 |
| 56. | இராசராச சோழன் ... ... | 124 |
| 57. | சுப்ரமணிய பாரதியார் ... ... | 126 |
| 58. | மகாத்மா காந்தி ... ... | 128 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1
# இந்து சமயம்

இந்து சமயத்தை ' சனாதன தர்மம் ' என்று கூறுவர். ஒரு காலத்தில் பல சமயங்கள் இருந்தன. ' ஆதிசங்கரர் ' என்ற பெரியார் ஆறு பிரிவுகளாக வகுத்தார். சிவனை வழிபடுபவர்கள், விஷ்ணுவை வழிபடுபவர்கள், பிள்ளை யாரை வழிபடுபவர்கள், முருகனை வழிபடுபவர்கள், அம்பாளை வழிபடுபவர்கள், சூரியனை வழிபடுபவர்கள் எனவும் பிரித்தார். எல்லோரும் இந்துக்கள் எனவும் கூறப்பட்டனர். அவர்களுக்கு ஒரு கடவுள்தான். காலம், இடம், பழக்க வழக்கங்கள் வித்தியாசம். அதனால் வணங்கும் முறைகளும் வேறுபட்டுள்ளன.

சிவன் கோவில், விஷ்ணு கோவில், பிள்ளையார் கோவில், முருகன் கோவில் எனப் பலவிதக் கோவில்கள் உண்டு. ' சிவ, சிவ ' எனச் சைவர்களும் ' கோவிந்தா, ஹரே கிருஷ்ணா ' என வைஷ்ணவர்களும் வணங்குவர். ' ஓம் சக்தி, அம்பாளே ' என்றும், ' பிள்ளையாரே, கணபதியே ' என்றும், ' முருகா, முருகா ' எனவும் ஒவ்வொரு கடவுளின் பெயரும் கூறி வணங்குபவர்களும் உண்டு. பூக்களால் அலங்கரித்து, தீபங்கள் ஏற்றி, கைகளைக் குவித்து வணங்குவார்கள். சிலர் பொங்கல் படைத்தும், சிலர் கரகம், காவடி, தெருக்கூத்து ஆடியும், வேறு சிலர் திருவிழா எடுத்தும் கடவுளை வணங்கு வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் பூசை செய்பவர்களைப் பூசகர், ஐயர், குருக்கள் என அழைப்பார்கள். கோயில்களில் ஒரு நேரமாவது பூசை நடப்பது நல்லது. இரண்டு நேரம், மூன்று நேரம், நாலு நேரம், ஐந்து நேரம், ஆறு நேரமெனப் பல நேரப் பூசைகள் நடக்கும் கோயில்களும் உண்டு கோயில்களுக்குப் போகும்போது, குளித்து சுத்தமாகப் போக வேண்டும். பூசைகள் நடக்கும்போது எல்லோரும் ஒழுங்காக நின்று வணங்க வேண்டும். பூசை முடிந்ததும் விபூதி, சந்தனம், தீர்த்தம் மற்றும் பிரசாதங்கள் கொடுப்பது வழக்கம். அவற்றை அன்புடன் வாங்க வேண்டும். கடவுள் வணக்கம் மிகவும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# மும்மூர்த்திகள்

கடவுள் ஒருவர் உண்டு. அவர் எங்கும் உள்ளவர். எல்லாம் அறிபவர். எல்லாம் வல்லவர். படைக்கும் கடவுளை பிரம்மா என்பர். காக்கின்ற கடவுளை விஷ்ணு என்பர். அழிக்கின்ற கடவுளை சிவன் என்பர். பிரம்மாவுக்குக் கோவில்கள் இல்லை. சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பல கோயில்கள் உண்டு. மும்மூர்த்திகளையும் இந்துக்கள் வணங்குகின்றார்கள்.

சைவர்கள் சிவனைத் தகப்பனாக வணங்குவர். உமா தேவியாரைத் தாயாக வணங்குவர். பிள்ளையாரை மூத்த பிள்ளையாகவும் முருகனை இளைய குழந்தையாகவும் வணங்குவர். வைரவர், வீரபத்திரர், ஐயப்ப சுவாமி போன்ற தெய்வங்களும் சிவனுடைய மக்களாக வணங்கப் படுவார்கள். உமை, பார்வதி, சக்தி, தேவி, அம்பாள், துர்க்கா, காளி, மாரியம்மன், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, மனோன்மணி எனப் பல பெயர்கள் கூறிப் பெண் தெய்வங்களாகவும் வணங்குவார்கள். சிவனையும் உமையையும் பல உருவங்களில் வணங்குவது நெடு நாளைய வழக்கம்.

சிவனுக்கு உமை, விஷ்ணுவுக்கு இலக்குமி, பிரம்மாவுக்கு சரஸ்வதி சக்திகளாக வணங்கப்படுவர். இலக்குமி தானியம், பொருள் எல்லாவற்றுக்கும் ; சரஸ்வதி கல்வி, அறிவு, பேச்சு, எழுத்து என்பவற்றுக்கும் ; உமை ஆற்றல், வீரம், வல்லமை போன்றவற்றுக்கும் உரியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக வணங்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு மனிதரும் தங்கள் விருப்பத்துக்கும் வல்லமைக்கும் ஏற்ப ஒவ்வொரு தெய்வத்தையும் வணங்குவார்கள். எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அந்த உருவில் நின்று கடவுள் அருள் செய்கின்றார்.

சிவனுக்கு சிவராத்திரியும் விஷ்ணுவுக்கு வைகுந்த ஏகாதசியும் முக்கிய தினங்களாகும். உமை, இலக்குமி, சரஸ்வதி மூவருக்கும் நவராத்திரி விரத நாட்களாகும். நவராத்திரியின் பத்தாம் நாளை விஜயதசமி, 'தசரா' மகா நோன்பு எனவும் கொண்டாடுவது வழக்கம். இங்ஙனம் பிள்ளையாருக்கு விநாயகர் சதுர்த்தசியும், முருகனுக்கு கந்தசஷ்டியும் முக்கிய விரதங்கள் ஆகும். இந்துக்கள் ஆண்டுதோறும் பல தினங்களைக் கொண்டாடுவார்கள்.

தைப்பொங்கல், தீபாவளி, சித்திரை வருடம் என்பனவும், தைப் பூசம், மாசி மகம், பங்குனி உத்தரம், சித்திரைப் பூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப் பிறப்பு, ஆவணி ஓணம், புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை என்பனவும் முக்கிய தினங்களாகும். ஆண்டு தோறும் இத்தினங்கள் விழாக்களாகக் கொண்டாடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3
# சிவபெருமான்

சைவர்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்வர். அவர் கைலைமலையில் இருப்பதாகக் கூறுவர். அவருக்கு நீலகண்டர், பசுபதி, நடராசர் என்ற பெயர் களும் உண்டு. அவர் அறிவு நிறைந்தவர். அவர் அன்பு உருவம்.

சிவனை ஒரு குடும்பமாக வணங்குவர். சிவனைப் போல் உமையும் வல்லமை உள்ளவர். ' சிவனின்றி உமையில்லை, உமையின்றி சிவனில்லை ' என்பர். இந்த உலகம் சிவ சக்தியால் இயங்குகின்றது. சிவ னுடைய மூத்த மகன் கணேசர். அறிவும் புத்தியும் உள்ளவர். எந்த நேரமும் சிவனுடன் இருப்பர். உமா தேவியாரின் மடியில் இருப்பவர் இளைய மகன் முருகன். அவர் அழகு, ஆற்றல், வீரம் உள்ளவர்.

சிவனுடைய வாகனம் எருது. அவர் முன்னிலையில் அது படுத்திருக்கும். ஆற்றலுள்ள சிங்கம அம்மையாருக்கு உண்டு. கணேசருக்கு நுட்பமான எலியும், முருகனுக்கு அழகான மயிலும் சொந்தமானவை. சிவனுடைய உடம் பில் பாம்பும் நெளியும். புலித்தோலும் ஆனைத்தோலும் அவருக்கு உண்டு.

சிவபெருமான் எல்லா உலகங்களையும் ஒழுங்காக நடத்துகின்றார். சிவனுடைய சடையில் கங்கை இருக் கின்றது. ஒரு கையில் நெருப்பும் இருக்கின்றது. நிலம், நீர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பு, காற்று, ஆகாயம் எல்லாம் அவருடைய கட்டுப் பாட்டில்தான். பூமி நடுக்கம், புயல், வெள்ளம், பெரு நெருப்பு சிவனுடைய கவனத்தில் நடக்கும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எல்லாம் சிவனுடைய விளையாட்டுக்கள். அவனன்றி ஒரு அணுவும் அசையாது.

தோடுடைய செவியனாக, அம்மை அப்பனாக, சுடலைப் பொடி பூசி உள்ளங் கவர் கள்வனாகப் பெரியோர்கள் சிவனைக் கண்டனர். ஆண் — பெண் உருவமாயும், அருவமாயும், அதற்கு அப்பாலாயும் இருந்து அருளுப்வர் சிவபெருமான். முக்கண்ணனாக, செம்மேனி யனாக, பிறைசூடியாகச் சிவபெருமான் வணங்கப் படுகின்றார். சைவமும் தமிழும் சிவன் புகழ்பாடும். தேவாரங்களைப் படித்து சிவனை வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## அம்பாள் வணக்கம்

"சக்தி இன்றிச் சிவன் இல்லை" என்பர். சூரியனில் ஒளி போலவும் நெருப்பில் சூடு போலவும் சிவனும் அம்பாளும் கலந்துள்ளனர். சிவன் தொடக்கம் — முடிவு இல்லாதவர். உமையும் அப்படியே. கடவுளை அம்மை, அப்பனாக வணங்கும் வழக்கம் பழைமை ஆனது. அம்பாள் வணக்கம் — தாய் வணக்கம் ஆகும். தாய் வணக்கம் இல்லாத நாடு இல்லை. தாயில் சிறந்த கோயிலும் இல்லை. தாயில் அன்பில்லாத குழந்தையும் இல்லை.

ஆகமங்கள் அம்பாளைப் பல உருவமாகக் கூறும். தக்கன் மகளாகப் பிறந்தவள் உமை. மலை அரசன் மகளாக வந்தவள் பார்வதி. இராசஇராசேஸ்வரியாகவும், மனோன்மணியாகவும், காளிதேவியாகவும், இலட்சுமி யாகவும், சரசுவதியாகவும் அவள் புராணங்களில் வருகிறாள். இந்தியாவில் ஒவ்வொரு நாட்டிலும் அவளுக்கு ஒரு பெயர் கூறுவர். அம்பா, கல்யாணி, பவானி, மீனாட்சி, காமாட்சி, சாமுண்டி, துர்க்கை எனப் பல பெயர்களும் உண்டு. மழை வளம் தரும் அன்னையை 'மாரி அம்மன்' என்பர். பசுமையை உண்டாக்கும் அம்பாளை 'பச்சை அம்மன்' என அழைப்பர். ஒவ்வொரு வல்லமைக்கும் ஒரு பெயராக அவளுக்குப் பல நாமங்கள் உண்டு. எந்தப் பெயர் கூறி வணங்கினாலும் அம்பாள் அருள் செய்வாள். தாய் அன்பு மிகவும் மேலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள உருவங்களைக் கோயில்களில் காணலாம். ஒவ்வொரு அம்பாளுக்கும் தனிக் கோயில்களும் உண்டு. ஏழு கன்னிகைகளாக ஏழு கற்களை வைத்து வணங்கு பவர்களும் உள்ளனர். அம்பிகையை ஸ்ரீ சக்கரத்தில் வைத்தும் வழிபடுவர். எப்படி வழிபட்டாலும் அன்னை யின் அருள் கிடைக்கும். அம்பாள் வழிபாட்டில் நவராத்திரி முக்கியமானது. காளியாகவும், இலட்சுமியாகவும், சரசு வதியாகவும், துர்க்கையாகவும், விஜயலட்சுமியாகவும் இக் காலத்தில் அம்பாளை வழிபடுவார்கள். ஒன்பது இரவும் அம்பாளை நினைத்து விரதம் இருப்பர். அவளுடைய அருள் இல்லாமல் உயிர்கள் வாழ முடியாது. 'பால் நினைந்து ஊட்டும் தாயான தெய்வம்' அம்பாள்.

மனிதன் நல்ல வாழ்வு வாழ அம்பாள் துணை செய்வாள். அவள் அன்பு, அறிவு, கருணை உள்ள தெய்வம். அடியார்கள் என்ன விரும்பி வணங்கினாலும் அவற்றை மகிழ்வுடன் கொடுப்பவள். பல பெயர்கள் உள்ள அன்னை கன்னியாக, நிரம்பிய வல்லமையுடன் விளங்கு கிறாள். அவளை வணங்கி வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# சிவனும் உமையும்

சிவபெருமான் உமாதேவியாருடன் திருக்கயிலாயத்தில் இருக்கிறார். சிவனும் உமையும் அப்பனும் அம்மையும் என வணங்கப்படுவர். சிவலிங்கத்திலும் அம்மை, அப்பன் சேர்ந்த வடிவம் உண்டு. உருவம் இல்லாமலும் சிவனும் உமையும் விளங்குவார்கள். நடராசராகச் சிவன் ஆடும் பொழுது உமையும் அருகில் இருப்பர். சிவனையும் உமையையும் பிள்ளைகளுடன் இந்துக்கள் வணங்கு வார்கள். உமை, பார்வதி, சரசுவதி, இலட்சுமி, துர்க்கை எல்லாம் அம்பாளின் பல நாமங்கள் ஆகும். அம்பாள் பல பெயர்களுடன் விளங்குவதற்கு நல்ல கதைகள் உண்டு. ஒவ்வொரு புராணக் கதைகளிலும் வருகின்ற ஒவ்வொரு பெயருடைய அம்பாளுடன் ஒவ்வொரு கோலங்களாகச் சிவனும் தோற்றுவார். சிவனும் உமையும் பிரிக்க முடியாதவர்கள்.

சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்வார். படைக்கும் பொழுது, பிரம்மா எனவும், காக்கும் பொழுது விஷ்ணு எனவும், அழிக்கும் பொழுது உருத்திரன் எனவும், மறைக்கும் பொழுது மகேஸ்வரன் எனவும், அருளும் பொழுது சதாசிவன் எனவும் பெயர் பெறுவர். உமையும் முறையே சிவனுக்குச் சக்தியாகச் சரசுவதி, இலட்சுமி, பார்வதி, மகேஸ்வரி, மனோன்மணி என விளங்குவதாகப் புராணங்கள் எழுதுகின்றன. சிவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையும் "என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்", என வழங்கப் படுகிறார்கள். சிவன் - உமை உருவங்களிலும், அவர் களுடைய சக்திகளிலும், சிவனடியார்களிலும் நின்று கடவுள் அருள் செய்வார். சிவனுடைய திருக்குமாரர்கள் கணபதி, முருகன், வைரவர், வீரபத்திரர், ஐயப்பன் எனப் பெயர் பெறுவர்.

சிவனையும் உமையையும் முதற் தெய்வமாகச் சைவர்கள் வணங்குகிறார்கள். பிரம்மா, விஷ்ணு, சிவன் மும் மூர்த்திகள் எனவும் அழைக்கப்படுவர். சிவபெருமானை மனத்தாலும், சொல்லாலும், உடம்பாலும் வழிபட வேண்டும். சிவபெருமானை வழிபடுபவர்கள் விபூதி, உருத்திராக்கம் தரிப்பார்கள். எந்த உருவத்தில் சிவனை வழிபட்டாலும் அந்த உருவத்தில் நின்று அவர் அருள் செய்வர். எருது வாகனத்துடன் சிவபெருமான் — உமாதேவியாரை அடியார்கள் தரிசித்ததாகப் பல கதைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6
# பிள்ளையார்

சிவபெருமான், உமாதேவியாருடைய முதற் புதல்வன் பிள்ளையார். கோயில்களில் பிள்ளையாரை முதலில் வணங்குவார்கள். ' அறிவுக் கடவுள் ' எனப் பிள்ளையாரை எல்லோரும் கூறுவர். அரைத்த மஞ்சள், பசுவின் சாணம் எடுத்து பிள்ளையார் பிடிப்பர். அறுகம் புல்லும் வைத்து, தலையில் குட்டி வணங்குவது வழக்கம்.

உலகில் பல இடங்களிலும் பிள்ளையார் கோவில்கள் உள்ளன. அரசன் முதல் ஏழைவரை எல்லோரும் பிள்ளையாரைப் போற்றுவார்கள். ஆற்றங்கரையிலும், அரச மரத்தடியிலும், முச்சந்திகளிலும், கோயில்களின் முன் பக்கங்களிலும் பிள்ளையாரை வைப்பார்கள். பழம், வெற்றிலை, பாக்கு, தேங்காய் வைத்துப் பிள்ளையாரை வணங்குவார்கள்.

பிள்ளையாருக்கு ஆனைமுகம் உண்டு. மூன்று கண்களும் உண்டு. தும்பிக்கையுடன் ஐந்து கைகளும் ஒரு தந்தமும் உண்டு. பிள்ளையாருடைய கையில் மோதகம் இருக்கும். எந்த நேரமும் அமைதியாக இருப்பார். எல்லோருக்கும் அன்பு காட்டுவார். பிள்ளையாருக்கு முன் எலி வாகனம் வைக்கப்பட்டு இருக்கும். எங்குமுள்ள பிள்ளையாருடைய கைகளில் ஆயுதங்களும் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாருக்கு ஆனைமுகன், விநாயகர், கணபதி என்ற பெயர்களும் உண்டு. அவரை வணங்கினால் கல்வி சிறப்பாகும் துன்பங்கள் நீங்கும். வாழ்வு மிகச் சிறக்கும். 'பிள்ளையாரை வணங்காமல் செய்யும் கருமம் ஒன்றும் சரி வருவது இல்லை' என்று கூறுவர். எமக்கு அவர் பெரும் கடவுள். பிள்ளையாரின் உருவங்கள் பல இருக்கின்றன என்று நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7
# பிள்ளையார் பெருமை

சைவம் ஒரு சிறந்த பழைய சமயம். சிவபெருமானை வணங்குபவர்கள் சைவர்கள். சிவனுடைய சக்தி உமா தேவியார். சிவனை ஒரு குடும்பமாகச் சைவர் வணங்குவர். 'பிள்ளையார் முருகனுடன், கைலாசத்தில் சிவன் இருப்பது வழக்கம்' என இந்துக்கள் நம்புகிறார்கள். பிள்ளையாருக்குக் கணபதி, வினாயகர் என்றும் பல பெயர்கள் உள்ளன.

ஒரு நாள் கைலாசத்துக்கு நாரதர் வந்தார். நாரதர் ஒரு முனிவர். அவர் கையில் ஒரு மாம்பழம் இருந்தது. அது ஒரு சிறந்த பழம். பிள்ளையாரும் முருகனும் பழத்தைக் கண்டனர். முருகன் சிறு பிள்ளை. அவர் நாரதரிடம் பழத்தைத் தரும்படி கேட்டார். பிள்ளையார் கையில் ஒரு மோதகம் இருந்தது. சிவனும் உமையும் புன்முறுவலுடன் இவற்றைப் பார்த்திருந்தனர். பிள்ளைகளும் நாரதரைப் பார்த்தனர். நாரதர் "பிள்ளைகளே, நீங்கள் சண்டை செய்ய வேண்டாம். மூன்று முறை உலகத்தைச் சுற்றி வாருங்கள். முதல் வரும் ஆளுக்கு மாம்பழம் தருகின்றேன்" என்றார். பிள்ளையார் மோதகத்தைச் சாப்பிட்டார். முருகன் தனது மயிலில் ஏறிப் பறந்தார். காடு, மலை, கடல் கடந்து கைலையையும் சுற்றினார். இரண்டாம் முறையும் முருகன் சுற்றிவிட்டார். அப்பொழுதுகான் பிள்ளையார் மோதகத்தைத் தின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தார். நாரதர் கூறியவற்றை எண்ணினார். அவருக்கு அம்மாவும் அப்பாவும் உலகமானது. மனத்தில் சிரித்தார்.

இரு கைகளையும் குவித்தபடி, சிவனையும் உமையையும் மூன்று முறை சுற்றி வந்தார். நாரதர் மிகவும் மகிழ்ந்தார். பிள்ளையாரை 'விநாயகரென' வணங்கினார். மாம்பழத்தையும் அவருடைய கைகளில் வைத்தார். அப்பொழுது மயில் வாகனத்தில் முருகனும் வந்து சேர்ந்தார். விநாயகர் அம்மாவையும் அப்பாவையும் வணங்கினார். முருகனும் பிள்ளையாரை வணங்கி, பழனி மலைக்குப் புறப்பட்டார். இவற்றைக் கண்டு சிவனும் உமையும் மகிழ்ந்தனர். விநாயகரை அணைத்தனர்.

கோயில்களில் பிள்ளையாரை முதல் வணங்குவார்கள். என்ன வேலைகள் செய்ய முன்பும் பிள்ளையாரை வணங்குதல் வேண்டும். அதனால் எல்லாம் நன்மையாக முடியும் என்று இந்துக்கள் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8
## முருகக் கடவுள்

தமிழர்களின் பெரும் கடவுள் முருகன். அவர் அழகு, இளமை, வீரம் எல்லாம் உள்ள உருவம் உள்ளவர். முருகன், சிவபெருமான், உமாதேவியாருடைய இளைய மகன். முருகனுடைய கையில் ஒரு வேல் உண்டு. அழகான முருகனுக்கு கந்தன், ஆறுமுகன், சுப்பிர மணியன் என்று பல பெயர்களும் உள்ளன. கண்கண்ட தெய்வம் முருகன் என்பார்கள்.

மலைகளிலே, ஆற்றங்கரைகளிலே மற்றும் அழகான இடங்களிலே ம்ருகன் இருப்பது வழக்கம். முருகனுக்கு ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் உண்டு. காவடி ஆடுதல்; கரகம் ஆடுதல், தெருக்கூத்து என்பன செய்தும் முருகனை வணங்குவார்கள். ' முருகா, முருகா ' என ஒருமுறை அழைத்தாலும் முருகன் அருள் தருவார்.

முருகனுக்கு அழகான மயில் வாகனமாகும். சேவல் முருகனுடைய கொடியாக இருக்கும். மயில் வாகனத்தில் வள்ளி, தெய்வானையுடன் முருகன் இருப்பார். ஆட்டுக் கடா வாகனத்திலும் முருகன் வருவார். கந்தசஷ்டி முருகனுக்கு உரிய விரதமாகும். வெள்ளிக்கிழமை. செவ் வாய்க்கிழமை முருகனுக்கு உரிய நாட்களாகும். கார்த் திகை முருகனுடைய பிறந்த நட்சத்திரம் ஆகும்.

தேவர்களுக்கு உதவியாகக் கெட்டவர்களை அடக்கத் தோன்றிய தலைவன் முருகன் ஆகும். முருகனை வணங்குபவர்கள் எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, அழகர் கோயில், திருத்தணிகை என்னும் ஆறு கோயில்களும் முருகனுக்கு முக்கியமானவை ஆகும். அவை மிகவும் அழகானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9
# முருகன் பெருமை

முருகன் தமிழர் விரும்பும் கடவுள். அவருக்கு கந்தன், குமரன், ஆறுமுகம், சுப்பிரமணியன் என்ற பெயர்களும் உள்ளன. அழகு, இளமை, வலிமை, அறிவு, வீரம் எல்லாம் முருகன் குணங்கள் ஆகும். முருகன் கையில் வேல் உண்டு ; அவருக்கு ஒரு மயில் உண்டு ; வள்ளி, தெய் வானையுடனும் வேலுடனும் மயில் வாகனத்தில் இருப்பர். "முருகா ! முருகா !" என்று எல்லோரும் வணங்கு வார்கள். தேவர்கள் சூரபத்மனுடைய கொடுமைகளைச் சிவனுக்குக் கூறி அழுதனர். சிவன் கண்களிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றின. நெருப்பு, காற்று அப் பொறிகளைச் சரவணப் பொய்கையில் சேர்த்தன. ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகள் ஆயின. தேவப் பெண்கள் ஆறு பேரும் அவர்களை வளர்த்தனர். அந்தப் பெண் களைக் கார்த்திகைப் பெண்கள் என்பர். உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் அணைத்தார். உடனே, ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் உள்ள ஒரு குழந்தை ஆகியது. சிவனும் உமையும் குழந்தையுடன் கயிலை சேர்ந்தனர். தேவர்கள் வழிபட்டனர்.

சூரன், சிங்கன், தாரகன் என்ற அசுரர்கள் தேவர் களை வருத்தினர். தேவர்களுடைய படைக்கு முருகன் தலைவன் ஆனான். சிவன் சிறந்த வேல் ஒன்றை முருகனுக்குக் கொடுத்தார். முருகன் இந்த வேலால் தாரகனையும் சிங்கனையும் கொன்றார். சூரன் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயங்களையும் செய்தான். பல உருவங்களையும் எடுத்துக் கொண்டு முருகனை எதிர்த்தான். மலையாகவும், பறவை யாகவும், மரமாகவும் மாறிச் சண்டை செய்தான். முருகன் வேல் அவனைக் கொன்றது. அவன் சாகும்பொழுது முருகனைப் பார்த்து வணங்கினான். முருகனும் அவனுக்கு அருள் செய்தார்.

உடனே சூரபத்மனுடைய உருவம் இரண்டாகியது. ஒரு பாதி மயில் ஆகி முருகனுக்கு வாகனம் ஆகியது. மற்றப் பாதி சேவலாகி முருகனின் கொடியில் நின்று 'கொக்கரக்கோ' எனக் கூவியது. முருகன் மயிலையும் சேவலையும் சேர்த்துக்கொண்டார். தேவர்கள் பூ மழை பொழிந்து மகிழ்ந்தனர். இந்திரன் தமது மகள் தெய் வானையை முருகனுக்கு விவாகம் செய்து கொடுத் தார். முருகன் வள்ளிநாயகியையும் மணந்தார். வள்ளி, தெய்வயானையுடன் மயிலேறி வேலுடன் விளங்கும் முருகனை வழிபட்டால் விரும்பியது எல்லாம் கிடைக்கும். ஒரு முறை நினைத்தால் இரு முறை வருவார். 'முத்தியும் தருவார்' என்று அருணகிரி சுவாமிகள் போற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## சிவ குமாரர்கள்

சிவபெருமான் முழு முதற் கடவுள். அவருடைய சக்தி உமாதேவி. சிவபெருமானுடைய குமாரர்கள் வினாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், ஐயப்பன் அல்லது அரிஹர புத்திரன் என அழைக்கப்படுகிறார்கள். பிள்ளையார் கதையும், முருகன் வரலாறும், விநாயகர் புராணமும், கந்த புராணமும் அக்கதைகளைக் கூறுகின்றன. ஏனைய குமாரர்களுக்குத் தனிப் புராணங்கள் இல்லை. ஆனால் அவர்களுடைய கதைகளும் புராணங்களில் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் உமாதேவி தக்கன் மகளாகப் பிறந்தார். சிவபெருமான் உமாதேவியை விவாகம் செய்தார். தக்கனுக்குக் கர்வம் உண்டானது. அவன் சிவனை மதிக்கவில்லை. மருமகனைத் தான் செய்த யாகத்திற்கும் அழைக்கவில்லை. அந்த யாகத்தைப் பிரம்மா நடத்தினார். தேவர்கள் அஞ்சினர். உமாதேவி யாகத்திற்குப் போக விரும்பினார். சிவனும் உமையும் அங்குபோன பொழுது, ஒருவரும் தக்கனுடைய கட்டளைப்படி அவர்களை மதிக்கவில்லை. சிவபெருமான் கோபங்கொண்டார். அவருடைய முகத்திலிருந்து தோற்றிய வைரவக் கடவுள், பிரம்மாவின் தலை ஒன்றை வெட்டினார். வீரபத்திர கடவுள், சிவனுடைய தலை மயிர் ஒன்றில் இருந்து உண்டாகி அந்த யாகத்தை அழித்தார். அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாக உமாதேவியாரால் உண்டாக்கப்பட்ட பத்திர காளியும் விளங்கினார். தக்கனும் வேள்விக்கு உதவியான வர்களும் அழிக்கப்பட்டனர்.

பகவத புராணத்தில் ஒரு கதை உண்டு. தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அங்கிருந்து அமிர்தம் உண்டானது. அசுரர்கள் அமிர்தத்தை எடுக்க முயன்றார்கள். தேவர்கள் மகாவிஷ்ணுவை வேண்டினர். அவர் அழகான ஒரு மோகினி வடிவம் எடுத்தார். அமிர்த கலசத்தைக் கவர்ந்து தேவர்களுக்கு வழங்கினார். அந்தப் பெண்ணின் அழகால் சிவனும் கவரப்பட்டார். சிவனும், விஷ்ணுவும் சம்பந்தப்பட்ட காலத்தில் தோன்றிய கும ரனை அரிகர புத்திரன் என்று கூறுவர். அவர் மகிஷி என்ற அரக்கியைக் கொன்றவராகவும், சபரிமலையில் ஐயப்பன் என்ற பெயருடன் கோயில் கொண்டுள்ள தாகவும், புராணங்கள் கூறுகின்றன. தென் இந்தியாவில் இன்று மிகவும் பிரசித்தி பெற்ற யாத்திரைமூலமாகச் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் வணங்கப்படுகிறார். வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், ஐயப்பன் மூவருக்கும் தனிக்கோயில்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

# ஸ்ரீ மகா விஷ்ணு

மகா விஷ்ணு காக்கின்ற கடவுள். சுத்த அறிவு நிலையில் பாற்கடலில் பாம்பின்மேல் படுத்திருப்பவராக விஷ்ணு வணங்கப்படுவர். நீல நிறமுடையவராகவும், தாமரைக் கண்களை உடையவராகவும், நல்ல அழகனாகவும் புலவர்கள் போற்றுகிறார்கள். அவருடைய சக்தியாக மகாலட்சுமி வணங்கப்படுகின்றார். அவர் மகாலட்சுமியை இருதயத்தில் வைத்துப்போற்றுகிறார் எனப் புராணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீ மகா விஷ்ணுவின் திருக்கரங்கள் நான்கு. ஒன்றில் தருமச்சக்கரமும், மற்றொன்றில் சங்கும், இன்னொன்றில் தாமரையும், நான்காவதில் கதாயுதமும் உண்டு. உலகத்தைத் தீமைகளில் இருந்து காக்கும் தெய்வமாக இருப்பர். நாராயணன், ஆதிமூலம், திருமால், அச்சுதன் எனவும் அழைக்கப்படுவர். 'நாராயண மந்திரம்' மிகவும் மேலானது. தினமும் ஓதுபவர்களுக்குச் சகல சித்திகளும், ஈற்றில் முத்தியும் கொடுக்கும். விஷ்ணுவை 'அரங்கநாதர்' என்றும் அழைப்பர். நீதியும், நியாயமும், அமைதியும், அழகும், பெருமையும், புகழும் கொண்டு உலகைக் காப்பவர் ; அவர் கருணைக் கடவுள்.

வேதங்கள் மகா விஷ்ணுவைப் பெரும் தலைவனாகவும், சகல வல்லமை உள்ளவராகவும், உயிர்களை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுபவராகவும் போற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் உருவமாக வேதங்களைப் பாதுகாத்தார். நீரிலும் நிலத்திலும் இருக்கும் ஆமையாக வந்து தேவர்களுக்கு உதவினார். பன்றியாக உலகை மீட்டார். நரசிம்மமாக வந்து கொடிய இரணியனைக் கொன்றார். வாமனனாக வந்து மகாபலியை அடக்கினார். பரசுராமராகப் பிறந்து கெட்ட அசுரர்களை அழித்தார். இராமராகவும் கிருஷ்ண ராகவும் வந்த கதைகளை எல்லோரும் அறிவர்.

வைஷ்ண ஆழ்வார்கள் திவ்வியப் பிரபந்தங்களால் விஷ்ணுவின் புகழைப் பாடியுள்ளார்கள். சிவன் வேறு விஷ்ணு வேறு அல்லர். அரிகரன், சங்கரநாராயணன், சிவராமன் என்ற பெயர்கள் சில உண்மைகளை உணர்த்துகின்றன. மகா விஷ்ணு ஒரு பெரும் கடவுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## ஸ்ரீ கிருஷ்ண பகவான்

"நல்லவர்களைக் காக்கவும் கெட்டவர்களை அழிக்கவும் ஒவ்வொரு காலத்திலும் நான் தோன்றுவேன்", என்று கிருஷ்ண பகவான் மகா பாரத யுத்த களத்தில் அருச்சுனனுக்குக் கூறினார். கிருஷ்ண — அர்ச்சுன சம்பாஷணை பகவத்கீதை எனப்படும். இந்துக்களுக்கு அது மிகவும் முக்கியமான ஒரு நூல். இதனை வேதங்கள், உபநிடதங்களின் சுருக்கம் எனக் கூறுகிறார்கள். கிருஷ்ண பகவான் இந்தியாவிலுள்ள துவாரகை என்ற நகருக்கு அரசன். மகாபாரதக் கதையில் பஞ்ச பாண்டவர்க்கு உதவியாக இருந்தார். அவரைக் கண்ணன் எனவும் அழைப்பார்கள். மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் கிருஷ்ண அவதாரம் முக்கியமானது.

கண்ணன் அழகுத் தெய்வம். அவருடைய தாய் பெயர் தேவகி. தகப்பன் பெயர் வசுதேவர். அவர்கள் யாதவர் குலத்தவர். அவர்களுடைய அரசன் கம்சன் எனவும், அவன் தேவகியைச் சகோதரியாக அன்பு பாராட்டினான் எனவும் கூறுவர். 'வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறக்கும் எட்டாவது பிள்ளை கம்சனைக் கொல்லும்' என சோதிடம் சொன்னதால், கம்சன் பயந்தான். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளையும் கொன்றான். அவர்களையும் சிறையில் அடைத்தான். தெய்வ சித்தம் வேறு விதமானது. கம்சனுக்குத் தப்பி, எட்டாவது குழந்தையாகக் கண்ணன் பிறந்தான். இடையர்களுடன் வளர்ந்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனைக் கொல்ல முடியவில்லை. யசோதை யுடன் இனிது வளர்ந்தான். பால், தயிர், வெண்ணெய் திருடித் தின்பான். பெண்களோடு விளையாடுவான். இடையர் குலச் சிறுவர்களுடன் கூடிப் புல்லாங்குழல் வாசிப்பான். தன்னைக் கொல்ல ஏவிய கொடியவர் களையும் கொன்றான். கொல்ல வந்த ஒரு அரக்கியின் பாலைக் குடித்து அவளைக் கொன்றார். பெருமழை பெய்தபொழுது, கோவர்த்தன மலையைக் குடையாக்கி இடையர்களைக் காத்தார். யமுனையில் இருந்த காளியன் என்ற கொடிய பாம்பை அடக்கினார். வேதங்களிலும் கலைகளிலும் யுத்த முறைகளிலும் வல்லவராக வளர்ந்தார். மாமன் கம்சனைக் கொன்று துவாரகைக்கு அதிபன் ஆனார்.

கண்ணன் ஒரு கருமயோகி. பக்தர்களுக்கு அன்பன். ஞானம் உள்ளவர் எனப் புராணங்கள் போற்றுகின்றன. மீன், ஆமை, பன்றி, நரசிம்மம், வாமனன், ஸ்ரீ பரசுராமன், இராமன் என அவதரித்த ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ கிருஷ்ணனாக வும் அவதரித்தார். மனிதனாகவும் தெய்வமாகவும் வாழ்ந்து மனிதருக்கு நல்ல வழி காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## மகா விஷ்ணுவும் இலக்குமியும்

சிவனை வணங்குபவர்கள் சைவர்கள் என்பதுபோல, விஷ்ணுவை வழிபடுபவர் வைஷ்ணவர் என அழைக்கப் படுகிறார்கள். 'வைஷ்ணவமும் சைவமும் இந் துக்கள் வழிபடும் இரு பெரும் பிரிவுகள்' என்று பெரியோர்கள் எண்ணுகிறார்கள். அங்ஙனமே முருகனை வழிபடுபவர்கள், பிள்ளையாரை வழிபடுபவர்கள், சக்தியை வழிபடுபவர்கள் எல்லோரும் இந்துக்கள் என அழைக்கப் படுவார்கள். சூரியனை வழிபடும் இந்துக்களும் உண்டு. "கடவுள் ஒருவர் உண்டு. ஞானிகள் பல பெயர்கள் கூறி வழிபடுகிறார்கள்" என்பது வேத வாக்கு.

விஷ்ணுவை 'எங்களைக் காக்கின்ற கடவுள்', என வணங்குகிறார்கள். அவர் உலகத்தைப் பாதுகாத்து, வாழ வைக்கும் பெரும் சக்தி ஆவார். விஷ்ணுவுக்கு கிருஷ்ணர், கண்ணன், வெங்கடேசர், திருமால் எனப் பல பெயர்களும் உள்ளன. 'ஆதி மூலம், சுத்த சைதன்யம்' என்றும் கூறுவர். 'நாராயணன், ஸ்ரீ ரங்கநாதன்' என்பதும் அவருக்குப் பொருத்தமான பெயர்கள் ஆகும். விஷ்ணு வினுடைய சக்தியை இலட்சுமி என அழைப்பர். விஷ்ணுவும் இலட்சுமியும் பாற் கடலில் இருப்பதாகவும் அங்கு விஷ்ணு, அனந்தன் என்ற பாம்பில் நித்திரை செய்வதாகவும் புராணங்கள் கூறுகின்றன. பிரம்மா அவருடைய நாபியில் உதித்தவராகவும் அதன் பின்பே படைத்தல் தொடங்கியதாகவும் கூறப்படுகிறது. இலட்சுமி விஷ்ணுவின் மார்பில் இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலமேகனாகவும், சங்கு சக்கரம் உடையவராகவும், அழகனாகவும் அவரை வணங்குகிறார்கள். மக்களைக் காப்பதற்கு அவர் மீனாகவும், ஆமையாகவும், பன்றியாகவும், மனிதச் சிங்கமாகவும், சிறு மனிதனாகவும், பரசு இராமராகவும், இராமராகவும், கிருஷ்ணராகவும் பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. "கெட்டவர்களை அழிக்கவும் நல்லவர்களைக் காக்கவும் அவர் காலம் தோறும் தோன்றுவதாக" பகவத்கீதை கூறுகின்றது. தேவாரங்கள் சிவனைப் போற்றுவதைப் போல பாகவதம், நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் என்பன விஷ்ணுவைப் போற்றுகின்றன. அரனும் அரியும் ஒன்று. சிவராமன், அரிகரன், சங்கர நாராயணன் என்ற பெயர்கள் இதை விளக்குகின்றன. ஸ்ரீ விஷ்ணு ஒரு பெருந் தெய்வம். ஸ்ரீ இலட்சுமி அவருடைய சக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

# மகா விஷ்ணுவின் அவதாரங்கள்

மகாவிஷ்ணு காத்தற் கடவுள். அவர் பாற் கடலில் ஆதிசேஷன் என்ற பாம்பில் அறிதுயில் கொள்கிறார். அவரிலிருந்து பிரம்மா தோன்றி உலகப் படைப்பு ஆரம்ப மானதாகவும் கூறப்படுகிறது. அவருடைய நிறம் நீலம். நான்கு கைகளிலும் சங்கு, சக்கரம், கதம், தாமரை தரித்திருப்பார். கழுத்தில் கௌஸ்துப மணியும், வைஜயந்தி மாலையும், தலையில் ஸ்ரீ வத்சமும் விளங்கு இன்றன. அவருக்குச் சக்தியாக ஸ்ரீ இலட்சுமி விளங்கு கிறார் ; மனிதர்களைக் கெட்டவர்களிலிருந்து காப்பதற் காகப் பூமியில் அவதரிப்பார். கடந்த காலங்களில் பல அவதாரங்கள் கூறப்பட்டுள்ளன. 'ஆனால் அவதாரங் களுக்கு எல்லை இல்லை' எனப் புராணங்கள் கூறுகின் றன.

மிகவும் பழைய காலத்தில் மனித குலம் வெள்ளத்தால் அழியும் நிலையில் இருந்தது. மனுவுக்கும் சப்த ரிஷி களுக்கும் உதவி செய்ய விஷ்ணு மீனாக அவதரித்தார். உலகம் பாதுகாக்கப்பட்டது. தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் எடுப்பதற்காகப் பாற் கடலைக் கடைந்தனர். பூமி அமிழ்ந்தது. விஷ்ணு ஆமையாக அவதரித்தார். இரணியாக்கன் என்ற அசுரன் பூமியைக் கடலுக்குள் அமிழ்த்தினான். விஷ்ணு பன்றியாகத் தோன்றிப் பூமியை மீட்டார். 'இரணியகசிபு' என்ற இன்னும் ஒரு கொடிய வன் தேவர்களை வருத்தினான். அவன் தன் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகலாதனையும் கொல்ல முயன்றான். சிங்க மனித னாக மகாவிஷ்ணு தோன்றித் தமது பக்தர்களைக் காப்பாற்றினார். மகாபலிச் ச்க்கரவர்த்தி மூன்று உலகங் களையும் வென்று இந்திரனையும் சிறைப் பிடித்தான். வாமன வடிவில் வந்து, மூன்று அடி மண் கேட்ட விஷ்ணு அவனை மூன்றாம் அடியால் கொன்றார். அரசர்களை அடக்க பரசுராமராகவும், அரக்கர்களை அடக்க இராம ராகவும் அவதரித்த கதைகளை உலகம் அறியும். பலராம னாக வந்து பல அரக்கர்களையும் அழித்து கலப்பையால் உலகம் வாழவும் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணராக அவதரித்து உலகை வாழ வைத்தார். 'கல்கி' வர வேண்டிய ஒரு அவதாரம் ஆகும்.

புத்தரும், தத்தாத்ரேயரும், வேதவியாசரும், மகா விஷ்ணுவின் அவதாரம் எனவும் கூறுகிறார்கள். இருபத்து மூன்று அவதாரங்கள் கூறுபவர்களும் உண்டு. பாகவதம் மகாவிஷ்ணுவினுடைய பெருமைகளைப் பலவாறு புகழ் கிறது. பரம்பொருளாகவும், காட்சிப் பொருளாகவும், அவதா ரங்களாகவும், மூர்த்தியாகவும் விளங்கும் மகாவிஷ்ணு பலவகைகளில் வணங்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15
# வேத காலத் தெய்வங்கள்

உலக வரலாற்றில் வேத காலம் மிகவும் பழையது. இந்து சமயம் வேத காலத்தை முதலாகக் கொண்டது. வேத காலக் கடவுள் ஒன்றுதான். இந்துக்கள் உருவமில்லாமலும் உருவங்களாகவும் கடவுளை வணங்கினார்கள். மும்மூர்த்தி களாகவும், சிவகுமாரர்களாகவும், லோக பாலகர்களாகவும், கிராம தேவதைகளாகவும் அவதாரங்களாகவும் இறை வனைப் போற்றி வணங்கினார்கள். பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணர் கூறுவது முக்கியமான கருத்தாகும். "பக்தர்கள் எந்த உருவத்தில் என்ன முறையில் என்னை வழிபட்டாலும் அந்த உருவத்திலும் அந்த முறையிலும் அவர்களுக்கு அருள் செய்கிறேன்" என்பது கீதை.

வேதங்களில் இருக்கு வேதம் முதலாம் பாடல் அக்கினியை வணங்குகிறது. வேத காலங்களில் முப்பத்து மூன்று தேவர்கள் வணங்கப்பட்டதாகத் தெரிகிறது. அக்கினி மிகவும் மேலான தெய்வம். பல பாடல்கள் அவரைப் போற்றும். முதற் தெய்வம், படைத்த தெய்வம், காத்த தெய்வம் எனப் புகழப்படுகிறார். இரட்டையர் களான அசுவினி தேவர்கள் பின்பு புகழப்படுகிறார்கள். இவர்கள் ஆகாயம், பூமி எனவும், சூரியன், சந்திரன் எனவும், இரவு, பகல் எனவும் கூறப்படுவதும் உண்டு. இந்திரன் இருக்கு வேதத்தில் வலிமையான தெய்வம். அசுரர்களைக் கொன்றவர் ; தேவர்களுக்குத் தலைவன் ; மின்னல், இடிமுழக்கம் அவருடைய பார்வையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவை. உருத்திரன் பயங்கரமானவர். மிகவும் புத்தியும் அறிவும் உடையவர். நல்ல வைத்தியன். உருத்திரர்கள் என அழைக்கப்படும்பொழுது, பதினொருவராகவும் எண்ம ராகவும் கூறப்படுபவர். இவருக்கு அடுத்ததாக சோமன் வணங்கப்படுவார். வாக்கு அதிபதியாகவும் இன்பம் கொடுப்பவராகவும் கருதப்பட்டார். இவருக்குப் பின்பு சூரியன் வருகிறார். அவரை ஆதித்தன், சவிதார், பூசன் எனவும் வணங்கினர். அவருக்கு உரிய மந்திரம் " காயத்திரி " எனப்படும். வருணனும் அடுத்த பெரும் தெய்வம். சமுத்திரங்கள் எல்லாம் அவருடைய தலைமை யில் இயங்குவன. வசுக்கள் எட்டாக வணங்கப்படுவதும் வழக்கம். இயற்கை அன்னையே வசுக்கள் எனக் கூறப் பட்டிருக்கலாம். வாயு பகவான் காற்று, ஆகாயம் எல்லாவற்றுக்கும் தெய்வம். விஷ்ணுவும் ஒரு அழகான, இளம் தேவனாக வணங்கப்பட்டார். முன்பெயர் கூறாத எல்லாவற்றையும் விஸ்வதேவர்கள் என்றனர். மரணத்துக்குப் பொறுப்பாக யமனும் விளங்கினார்.

வேத காலங்களில் விளங்கிய மேலே குறிப்பிடப்பட்ட தெய்வங்கள் இன்றும் இந்துக்களால் சில பெயர் மாற்றங் களுடன் வணங்கப்படுகின்றன. வேத காலத் தொடர்ச்சி தான் இன்று இந்து சமயமாக வளர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16

# இந்துக்களின் கோயில்கள்

'கடவுள் ஒருவர் உண்டு. அவருக்கு உருவம் இல்லை' என்பதில் இந்துக்கள் நம்பிக்கை உள்ளவர்கள். கடவுள் அன்பை வளர்ப்பதற்கு உதவியாக அவர்கள் பல உருவங்களை வகுத்து வணங்குகிறார்கள். இந்துக்கள் மிகவும் பழைய காலங்களில் அமைத்து வணங்கிய தெய்வங்கள் கோயில்களில் வணங்கப்பட்டு வருகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் கோயில்கள் இருந்திருக் கின்றன. வடக்கே இமயம் முதல் தெற்கில் கன்னியாகுமரி வரையில் முக்கியமான இந்துக் கோயில்களைக் காணலாம்.

இமய மலையில் சிவபெருமான் உமாதேவியாருடன் இருப்பதான கதை மிகவும் பழையது. பனியாலான சிவலிங்கத்தைக் கண்டு வணங்க இன்றும் இந்துக்கள் செல்லுகிறார்கள். நேபாளத்திலுள்ள பசுபதீஸ்வரர் ஆலயமும், பத்திரிநாத், கேதார்நாத் போன்ற புண்ணிய ஸ்தலங்களும், காசி விஸ்வநாதர், பூரி ஜகந்நாதர் ஆலயங்களும் இன்னும் பல கோயில்களும் வட இந்தியா வைப் புனிதப்படுத்துகின்றன. தென்னிந்தியாவில் கி. மு. முதல் நூற்றாண்டில் சிவன், திருமால், முருகன் கோயில்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள். பல்லவர்கள் கற்கோயில் எடுத்தார்கள். மூவேந்தர்களும் பல கோயில்களைக் கட்டினர். கற்களில் கலை வண்ணங் கண்டார்கள். கோயில்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ விக்கிரகங்களிலும் அவை இன்றும் பொலிந்து விளங்குகின்றன. சிற்பங்கள், ஓவியங்கள் நிறைந்த தூண் களும், உயர்ந்த பல கோபுரங்களும், பொன்னால் வேயப் பட்ட கூரைகளும், யாரும் பார்த்து அதிசயித்து வணங்கும் தெய்வ உருவங்களும், தெப்பக் குளங்களும் நிரம்பிய பல கோயில்களும் இன்றும் இந்தியாவில் இருக்கின்றன. மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில், சிதம்பரம் நடேசர் கோவில், காஞ்சி காமாட்சி கோவில், திருத்தணிகை முருகன் கோவில், திருப்பரங்குன்றம், பழனி, திருச்செந்தூர் கோயில்கள், ஸ்ரீ ரங்கம், திருப்பதி, இராமேஸ்வரம் போன்றன குறிப்பிடத்தக்க சிலவாகும்.

பல்லவர்களும், சோழர்களும், பாண்டியர்களும், சேரர் களும் தங்கள் ஆட்சிக் காலங்களில் கோயில்கள் கட்டி யுள்ளார்கள். திருச்சிராப்பள்ளியில் மகேந்திரவர்மர் கற் களைக் குடைந்து கட்டிய பெருங்கோயிலும், தஞ்சாவூரில் இராசராசன் அமைத்த சிவன் கோயிலும், மதுரையிலும், திருவரங்கத்திலும் பாண்டிய மன்னர் காட்டிய சிற்பத் திறமைகளும் இன்றும் சிறப்பாக இருக்கின்றன. இந்துக் கள் வாழும் இடங்கள் கோயில் நிறைந்து சிறக்கும். ' கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் ', ' திருக்கோயில் கட்டப்படாத ஊர் சுடுகாடு ', என்பன பழமொழிகள். இந்துக்களின் கோயில்கள் அன்றுபோல இன்றும் அவர்களுடைய பண்பாட்டுச் சின்னங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## இந்துக்களின் விரதங்கள்

இந்துக்கள் விழாக்களாலும் விரதங்களாலும் கடவுளை வழிபடுவார்கள். விரதங்கள் மன உறுதிப்பாட்டுடன் செய்யப்படுகின்றன. விழாக்கள் வேறு, விரதங்கள் வேறு. இறைவனை வழிபடுவதற்கு விரதங்கள் நல்லதாகப் பல இந்துக்கள் கருதுகின்றார்கள். நாள் முழுவதும் உணவு இல்லாமல் இருத்தல், ஒரு நேரம் உணவு கொள்ளுதல், நீரைப் பகலில் பருகி, இரவில் பால், பழம் எடுத்தல் எனப் பல வகைகளாக விரதங்கள் இருக்கும். வாரம் ஒரு முறை, மாதம் ஒரு முறை, வருடத்தில் சில நாட்கள் எனவும் விரதங்கள் இருப்பார்கள். கடவுளை வணங்குதல், கோயிலை உருண்டு வலம் வருதல், தீச்சட்டி, காவடி, கரகம் கொண்டு வணங்குதல், பாடல்கள் படித்தல், தீ மிதித்தல், முள்ளு மிதியடியில் நடத்தல் எனப் பல முறைகளிலும் அடியார்கள் தங்கள் கடவுள் பக்தியை வெளிப்படுத்துவார்கள்.

ஒவ்வொரு ஆண்டிலும் பல நாட்கள் விரத நாட்களாகும். தைப்பூசம், மாசி சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைப் பூரணை, வைகாசி விசாகம், வைகுண்ட ஏகாதசி, ஆடிப் பூரம், ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, கந்தசஷ்டி, கார்த்திகைத் தீபம், மார்கழி நோன்பு என்பன சில முக்கிய விரதங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசை, பூரணை, கார்த்திகை, வெள்ளிக்கிழமை, திங்கள், பிரதோஷம் போன்ற நாட்களும் இந்துக்களுக்கு முக்கிய நாட்களாகும். ஒவ்வொரு விழாக்கள் போல ஒவ்வொரு விரத நாட்களும் புராணங்களில் விசேடமாகக் கூறப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18

# இந்துக்களின் விழாக்கள்

இந்துக்கள் மிகவும் பழைய நாகரீகம் உள்ளவர்கள். அவர்கள் கடவுள் ஒருவர் என்றும் கூறுவர். கடவுளை உருவமில்லாமலும் பல உருவங்களாகவும் போற்றுவர். ஒவ்வொரு கோயிலிலும் தாம் விரும்பிய தெய்வங்களை வைத்து வணங்குவர். கோயில்களில் விழாக்களும் கொண்டாடுவார்கள். தினமும் பூசைகள் நடந்தாலும் ஒவ்வொரு மாதமும் சில விழாக்களும் உண்டு. விழாக் காலங்களில் விரதம் இருப்பர். கரகம் ஆடுதல், தீச்சட்டி எடுத்தல், தீ மிதிப்பு, காவடி ஆட்டம், கோயிலைச் சுற்றி உருளுதல், பாட்டுப் பாடுதல், அடி அளத்தல், சுற்றி வருதல் முதலிய பல வணக்க முறைகளும் செய்வார்கள். கோயில் விழாக்களில் சுவாமியை அலங்கரித்து வெளி யிலும் கொண்டாடுவார்கள். சில விழாக்களை வீடுகளிலும் நன்கு கொண்டாடி மகிழ்வர். தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, ஐப்பசித் தீபாவளி அவ்விதமான சில பொது விழாக்களாகும்.

தைப்பொங்கல் மிகவும் சிறப்பான விழாவாகும். சூரிய பொங்கல் என்றும் அழைப்பர். தை மாதப் பிறப்பு அன்று இந்த விழா ஆரம்பமாகும். வீட்டு முன் பாகத்தைச் சுத்தம் செய்து அழகான கோலங்கள் போடுவார்கள். புதுப் பானையை மாவிலை, இஞ்சி, மஞ்சள் இலைகளால் அலங்கரித்து அடுப்பில் வைத்து, பால் நிறைத்து புதிய அரிசியைப் பானையில் போடுவார்கள். பயறு, சர்க்கரை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன், கருப்பஞ்சாறு, ஏலம், கறுவா எல்லாம் சேர்த்து பொங்கல் செய்வார்கள். எல்லோரும் கூடிப் பொங்கி, பழங்கள், வேறும் பிரசாதங்களும் வைத்துக் கடவுளை வணங்குவர் சிலர் வெடி கொளுத்தி மகிழ்வர்.

சித்திரை முதல் நாள் சூரியன் மேட இராசியில் நிற்கும் காலம் வருடப் பிறப்பாகும். அன்று மருத்து நீர் வைத்துக் குளித்து கடவுளை வணங்குவார்கள். தொழில் தொடங்குபவர்களும் நல்ல நாளில் தொடங்குவார்கள். விருந்து உண்ணல், விருந்தினரை உபசரித்தல் எல்லாம் சிறப்பாக நடக்கும். ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசையை அடுத்ததாக வரும் விழா தீபாவளி எனப்படும். வீடுகளிலும் கோயில்களிலும் தீபங்களை வரிசையாக வைத்து வணங்குவர். எண்ணெய் வைத்து, நீரில் மூழ்கிப் புது உடை தரிப்பார்கள். கெட்ட அசுரன் ஒருவன் இறந்த தினம் எனவும் கூறுவர். கோயில் களுக்கும் சென்று வணங்கி மகிழ்வார்கள். வருடப் பிறப்பு, தீபாவளித் தினங்களை மிக வேடிக்கையாகவும் கொண்டாடுவார்கள். இந்துக்கள் விழாக்கள் மூலமாகக் கடவுளை வணங்குவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19
# நவக்கிரகங்கள்

இந்துக்கள் நவக்கிரகங்கள் மனிதருடைய வாழ்க்கையை நடத்துவதாக நம்புகின்றனர். 'ஒவ்வொரு மனிதனும் இந்த உலகில் தோன்றும் பொழுதும், ஒவ்வொரு கருமமும் இந்த உலகில் நடக்கும் பொழுதும் நவக்கிரகங்கள் சில ஒழுங்குகளை உண்டாக்குகின்றன' எனக் கூறப்படு கிறது. மனிதனுடைய வாழ்வுக் கதையும் உலக வரலாறும் நவக்கிரகங்களால் வழி நடத்தப்படுவதாக இந்துக்கள் நம்புகின்றனர்.

நவக்கிரக நாயகனாக சூரியன் வணங்கப்படுகிறார். கோயில்களில் நடு இடத்தில் கிழக்கு நோக்கி சூரியன் இடம் பெறுகிறார். சந்திரனும் சூரியனும் கையில் தாமரை மலர்களுடன் விளங்குகின்றனர். செவ்வாய்க் கிரகத்தை குசன் என்றும் கூறுவர். புதனும் செவ்வாயும் நாலு கைகளுடனும் ஆயுதங்களுடனும் காணப்படுகின்றனர். வியாழன் தேவர்களுடைய குரு. பிரகஸ்பதி என அழைக்கப்படுகிறார். அவருடைய கைகளில் ஜப மாலையும் புத்தகமும் விளங்குகின்றன. சுக்கிரனை வெள்ளி எனவும் அசுரர் குரு எனவும் குறிக்கிறார்கள். அவருடைய ஒரு கையில் புத்தகமும் மறு கையில் நிதியும் இருக்கின்றன. நாலு கைகளுடனும் அவர் விளங்குகிறார். சனி பகவான் சனீஸ்வரன் என அழைக்கப்படுபவர். ஆயுதங்களுடன் காணப்படுகிறார். நாலு கைகளில் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமும் கொடுக்கும். ராகு, கேது பாம்புகளாகப் பல வகைகளில் காட்டப்படுகின்றன. எல்லாக் கிரகங்களும் சூரியனைப் பார்த்தபடியே கோயில்களில் வைக்கப் படுகின்றன.

ஆலயங்களில் நவக்கிரகங்கள் வைக்கப்பட்டு வணங் கப்படுகின்றன. ஒவ்வொரு கிரகங்களுக்கும் ஒவ்வொரு நிறமும் அவர்களுக்கு என வாகனமும் கூறப்படுகின்றன. அவர்கள் ஒரு ஒழுங்கின்படி மனித வாழ்க்கையையும் உலகப் போக்குகளையும் ஆட்சி செய்வதாகவும் நூல்கள் விளக்குகின்றன. உலகம் மிகவும் திகைப்புடன் சோதிட சாஸ்திரங்களை நோக்குகிறது. " சிவனடியார்களுக்கு அவை நல்லவை " என்பது திருஞானசம்பந்த சுவாமி களது வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

# ஸ்ரீ நாரத மகா முனிவர்

'வீரர்களும், முனிவர்களும், ரிஷிகளும் நிறைந்த நாடு இந்தியா' என அறிகிறோம். பல ஆயிரம் வருடங்களாக வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங் களும் அவர்களுடைய கதைகளைக் கூறுகின்றன. 'வசிட்டர், விசுவாமித்திரர், நாரதர்' என்ற பெரியார்கள் முனிவர் களாக விளங்கி உள்ளார்கள். ஸ்ரீ நாரத மகா முனிவர் இல்லாத புராணக் கதைகள் மிகவும் குறைவு. மிகவும் அழகான உருவமாய், பட்டுப் பீதாம்பரங்களுடனும் கையில் வீணையுடனும் காணப்படுவார். முகமலர்ச்சி யுடன் சதா புன்முறுவல் பூத்து ' நாராயணா, சிவ, சிவா ' எனக் கூறிய நாரதரை எல்லோரும் வரவேற்பதுண்டு. மூன்று உலகங்களுக்கும் சுற்றுவார். உலகப் புதினங் களையும் கூறுவார். கலகங்களும் அவருடைய கதைகளால் உண்டாக்கப்படும். " எல்லாம் உலக நன்மைக்காக நடக்கும் " எனப் பலரும் கூறுவார்கள். அவருக்கு அவ்வளவு பெருமைகள்.

தேவ சபைகளிலும் இராச சபைகளிலும் காணப்படும் ஸ்ரீ நாரதர், பிரம்மாவின் மகன் எனக் கூறப்படுகிறார். தாய் ஒரு வேலைக்காரப் பெண் என்பர். பல முனிவர் மத்தியில் தாயும் மகனும் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் இறைவன் நாமங்களைக் கூறுவார்கள். நாரதருக்கு இறை நாமங்களல்லாமல் வேறு ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. நாம கீர்த்தனைகளால் உள்ளம் பூரித்தார். எல்லாம் வல்ல பெருமான் அவர் மனதில் பதிந்து கொண்டார். ஒரு நாள் முனிவர்கள் அவருக்கு ஞான வாழ்வின் உபதேசம் செய்தனர். அறியாமை அகன்றது. தன்னையும் அறிந்தார். தன் தலைவனையும் உணர்ந் தார். வாழ்க்கையில் எல்லாவிதத் துன்பங்களும் நீங்க மருந்தும் கண்டார். எல்லாக் கருமங்களையும் இறை வனுக்கு வழங்கி மகிழ்ச்சியாக வாழ்ந்தார். அன்பும், இறைபக்தியும், அவன் தியானமும், அவனை வாயார வாழ்த்துவதும் அவருக்கு வேலையாகின. அழியாத பேரின்பம் கண்டார்.

ஸ்ரீ நாரத முனிவருடைய பெயரால் சில நூல்கள் வழங்கப்ப்டுகின்றன. அவற்றுள் 'பக்தி சூத்திரங்கள்' மிகவும் முக்கியமானவை. இது இறைவன் சனற்குமாரராக நாரதருக்குக் கூறிய கதை. 'தனிய இருந்து தியானித்தபொழுது இறைவனும் தானும் ஒன்று'. எனவும் நாரதர் கூறினாராம். ஸ்ரீ நாரதர் பெரும் முனிவர். கடவுள் அன்பில் மூழ்கி வாழ்ந்து இன்பம் கண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

## அகத்தியர்

தமிழ் மொழியைக் கடவுள் அகத்தியருக்குச் சொல்லிக் கொடுத்தார். சிவபெருமான் பார்வதி கலியாணம் நடந்த பொழுது எல்லோரும் இமயம் சென்றனர். வட பகுதி சமனிலை குறைந்தது. சிவபெருமான் அகத்தியரைத் தென் பகுதிக்கு அனுப்பினார். அவர் தென் பகுதிக்கு வந்து தமிழை வளர்த்தார் எனக் கதைகள் உள்ளன. 'அகத்தியம்' என்று ஒரு இலக்கண நூல் இருந்தது. அந்நூல் வழிவந்த நூல் 'தொல்காப்பியம்' என அறிகிறோம். தொல்காப்பியம் இன்று உள்ள தமிழ் நூல்களில் மிகவும் பழையது. அந்த நூலை இயற்றிய தொல்காப்பியர் அகத்தியருடைய மாணாக்கர்களில் சிறந்தவர். அகத்தியர் மிகவும் அறிவும் ஆற்றல்களும் நிறைந்தவர்.

அகத்தியர் பல காலம் விவாகம் செய்யவில்லை. ஒருமுறை காட்டில் சில உருவங்கள் கஷ்டப்படுவதைக் கண்டார். அவர்கள் தமது முன்னோர்களென்றும் தாம் விவாகம் செய்யாததினால், அவர்களுக்குப் பின் குடும்பத் தொடர்பு இல்லாமையினால் கஷ்டம் அடைவதாகவும் அறிந்தார். அகத்தியர் விவாகம் செய்ய விரும்பினார். நல்ல பெண் கிடைக்கவில்லை. சகல இலட்சணங்களும் உள்ள ஒரு பெண்ணை உண்டாக்கினார். விதர்ப்ப நாட்டு அரசனிடத்தில் வளரச் செய்தார். லோபாமுத்திரை எனப் பெயரிட்டு அரசனும் அரசியும் வளர்த்தனர். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான இளவரசியாக வளர்ந்தாள். அகத்தியர் அவளை மனைவியாக்க விரும்பினார். அரசனும் அரசியும் முனி வருக்குப் பெண்ணைக் கொடுக்க விரும்பவில்லை. லோபா முத்திரை அகத்தியரை விரும்பி முனிபத்தினி ஆகினள்.

இருவரும் பல அரசர்களையும் சந்தித்தார்கள். வழி யில் வில்லவன், வாதாபி என இரு அசுரர்கள் இருந் தார்கள். வாதாபியை ஒரு ஆட்டுக் கடாவாக்கி அகத்தி யருக்குக் கொடுத்துக் கொல்ல வில்லவன் ஒழுங்கு செய்திருந்தான். அகத்தியரும் சம்மதித்து வாதாபி இறைச்சியைச் சாப்பிட்டு அவனைக் கொன்றார். லோபா முத்திரையுடன் இல்லறம் நடத்தி ஒரு மகனையும் பெற்றார். விந்திய மலை மிகச் செருக்குக் கொண்டு வளர்ந்தது. அந்த மலையையும் அடக்கினார். தென் நாட்டில் வந்து அகத்தியர் வசித்து வந்தார். ' காலகேயர் ' என்ற பொல்லாத அசுரர்கள் சமுத்திரத்தில் ஒளித்தார்கள். தேவர்கள் வேண்டக் கடலைக் குடித்தனர். காலகேயர்கள் கொல்லப்பட்டார்கள். இங்ஙனம் பல கதைகள் உள்ளன. இந்தியாவில் மிகவும் பழைய மொழிகளில் தமிழும் ஒன்று. ' அந்தத் தமிழை அகத்தியருக்கும், சமஸ்கிருதத்தைப் பாணினிக்கும் இறைவன் வழங்கினார் ' என்பதும் ஒரு கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22

# இராமாயணம்

இந்தியாவிலே பல வளங்களும் கொண்டது கோசல நாடு. அதற்குத் தலைநகரம் அயோத்தி. அயோத்திக்கு அரசன் தசரதர். அவருக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவிகள் இருந்தனர். அரசனுக்கு வெகு காலம் பிள்ளைகள் இல்லை. அவர் பெரிய யாகஞ் செய்தார். கடவுள் அருளால் கோசலைக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இலட்சு மணன், சத்துருக்கன் என இருவரும் பிறந்தார்கள். தசரதர் பிள்ளைகளுக்கு அரசருக்குரிய நல்ல கல்வியைக் கற்பித்தார். பலரும் போற்றப் பிள்ளைகளை அன்பாக வளர்த்தார். இராமனிடத்தில் மிக அன்பாகவும் இருந்தார்.

ஒரு நாள் அரச சபைக்கு விசுவாமித்திரர் என்ற முனிவர் வந்தார். தசரதர் எழுந்து முனிவரை வணங்கி வரவேற்றார். அவருக்கு வேண்டியது எல்லாம் கொடுப் பதாகவும் கூறினார். முனிவர் அரசனை நோக்கி " அரசனே ! அரக்கர்களுடைய கொடுமைகள் அதிகம். நான் ஒரு வேள்வி செய்யப் போகிறேன். அரக்கர்களால் இடையூறு வராது காக்க இராமனை என்னுடன் அனுப்பு வாயாக " என்றார். அரசன் திடுக்குற்றான். சிறியவன் இராமனைக் கொடிய அரக்கருடன் போர்புரிய அனுப்ப அவர் விரும்பவில்லை. முனிவரும் கோபித்துக்கொண்டு எழுந்தார். குலகுரு வசிட்ட முனிவர் விசுவாமித்திரரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்த்தி இராமரை அனுப்பும்படி அரசனுக்குக் கூறினார். இராமருடன் இலட்சுமணனும் அரசனால் முனிவருடன் அனுப்பப்பட்டனர்.

மூவரும் போகும் வழியில் தாடகை என்னும் கொடிய அரக்கி அவர்களை எதிர்த்தாள். முனிவர் கூறியபடி இராமன் அரக்கியைக் கொன்றார். விசுவாமித்திரர் மகிழ்ந்தார். வேள்வியும் இனிது நிறைவேறியது. முனிவர் சந்தோஷமடைந்து பலவித ஆயுதங்களையும் கொடுத்து அவைகளை உபயோகிக்க மந்திரங்களையும் சொல்லிக் கொடுத்தார். விசுவாமித்திரருடன் இராம, இலட்சுமணர் மிதிலை சென்றனர். வழியில் இராமன் ஒரு கல்லின் மேல் கால் வைத்தார். அக்கல், 'அகலிகை' என்ற பெண் உருவமானது. கௌதம முனிவரது மனைவி அகலிகை கல்லான கதையை முனிவர், அரச குமாரர்களுக்குக் கூறினார். மிதிலையில் சனக மகாராஜா ஒரு வேள்வி செய்தார். அவருடைய மகள் சீதையுடன் சிவனுடைய ஒரு வளைக்க முடியாத வில்லும் இருந்தது. முனிவருடைய கட்டளைப்படி இராமன் வில்லை முறித்தான். சீதையும் இராமனைக் கண்டு மகிழ்ந்தாள். சனகன் மகள் சீதை இராமனுக்கு மாலை இட்டாள். சனகன் தசரதனையும் அழைத்து வெகு சிறப்பாகச் 'சீதாகல்யாணம்' நடந்தது. இராமரும் சீதையும் அயோத்திக்குப் புறப்பட்டனர். வழியில் அரச குலங்களை அழித்துவரும் பரசுராமர் இராமரை எதிர்த்தார். பரசுராமருடைய வில்லையும் அழித்து இராமன் சீதையுடன் அயோத்தி சென்றார்.

தசரதர் பழைய அரசர்களின் வழக்கப்படி இராமருக்கு முடிசூட்டத் தீர்மானித்தார். வசிட்ட முனிவருடனும், மந்திரி பிரதானிகளுடனும் கலந்து ஆலோசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமருக்கும் தெரிவித்து நல்ல நாளும் நிச்சயமாயிற்று. நகர மக்கள் மகிழ்ந்தனர். இராமரது பட்டாபிஷேகம் கைகேயியின் தோழி மந்தரை என்ற கூனிக்குத் தெரிந்தது. அவள் கோபப்பட்டாள். கைகேயியிடம் சென்றாள். இராமனிடம் உள்ள அன்பை மறக்கச் செய்தாள். கைகேயியிடம் தசரதர் நல்ல அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். போரில் தனக்குச் சாரதியாக இருந்த கைகேயிக்கு இரு வரங்கள் தருவதாக முன் கூறி இருந்தார். கைகேயி அரண்மனையில் தலைவிரி கோலமாக அழுது புலம்பினாள். முன் கூறிய வரங்களை இப்போது தரும்படி மன்றாடினாள். தசரதரும் சம்மதித்து வரங்களைக் கூறும்படி கேட்டார். 'ஒன்று இராமன் பதினான்கு வருடம் காட்டில் வசிப்பது. மற்றது பரதன் அயோத்தியை அரசாள்வது' என்று கைகேயி கூறியதும், தசரதர் மயங்கி விழுந்தார். விழித்து எழுந்து, வேறு வரங்களைக் கேட்கும்படி மனைவியை மன்றாடினார். கைகேயி கேட்டாளில்லை. " வரங்களைத் தருகிறேன் ; இராமனைப் பிரிந்து நான் வாழேன் " என்று கூறித் தசரதர் மூச்சு இழந்தார். உடனே கைகேயி இராமனை அழைத்து தசரதருடைய வரங்களைக் கூறினாள். "அரசை ஏற்கச் சொன்னபொழுது இருந்ததிலும் கூடிய முகமலர்ச்சியாகக் காட்டுக்குப் போகும்படி கைகேயி கூறியபொழுதும் இராமர் இருந்தார். இராமரும், சீதையும், இலட்சுமணன் பின் தொடரக் காட்டுக்குப் போனார்கள். அயோத்தி மக்கள் வருந்தினர். சிலர் அழுதுகொண்டு பின்சென்றனர். இராமர் காடு போனதை அறிந்து தசரதர் இறந்தார். அரண்மனையில் அழுகைக் குரல் கேட்டு வசிட்டர் வந்தார். ' புத்திரசோகத்தால் இறப்பாய் ' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் ஒரு முனிவர் தசரதனுக்கு இட்ட சாபத்தை நினைவு படுத்தினார். பரதனைக் கேகய நாட்டிலிருந்து வர வழைத்தார்.

பரதன் முடிசூட மறுத்தான். தசரதன் மரணக் கிரியைகள் முடிந்தன. பரதன் இராமரைத் தேடிக் காட்டுக்குச் சென்றான். இராமன் குகனுடைய நட்பைக் கொண்டான். அவனுடைய உதவியோடு கங்கையைக் கடந்து ஒரு இடத்தில் குடிசை அமைத்தனர். குடிசையில் இராமரும் சீதையும் இருந்தனர். இலட்சுமணன் காவல் காத்தான். பரதனைக் கண்டதும் குகனும் இலட்சுமண னும் ஆத்திரம் அடைந்தனர். ஆனால் தலைமேல் கைகளைக் குவித்து, இராமனை வணங்கிய தம்பி பரதனைக் கண்டு எல்லோரும் கண் கலங்கினர். " தந்தையின் சொல்லை நான் மீறமாட்டேன். பரதா, நீ சென்று, அயோத்தியை ஆளுக " என்று இராமன் கூறினார். அண்ணன் கட்டளையை மீறாமல், " உங்கள் மிதியடிக்கு முடிசூடி வாழ்கிறேன். நீங்கள் பதினாறு வருடங்கள் கழித்து வராவிட்டால் நெருப்பில் விழுந்து உயிர் விடுவேன் " என்று கூறிப் பரதன் விடைபெற்றுச் சென்றான். அயோத்திக்குப் போகாமல், நந்திக் கிராமத் தில் மிதியடிகளை மேலே வைத்து, கீழிருந்து அரசு செய்தான். இராமர், சீதை, இலட்சுமணன் தண்டகவனம் வந்து சேர்ந்தனர். அங்கு சடாயு என்ற கழுகு அரசனும் இருந்தார். இராவணனுடைய தங்கை சூர்ப்பனகை இராமரை விவாகஞ் செய்ய விரும்பினாள். இராமன் விரும்பவில்லை எனக் கண்டவள் சீதையைப் பிடிக்க முயன்றாள். இலட்சுமணனால் அவள் அவமானம் அடைந் தாள். இராவணனிடம் சென்று அழுதாள். சீதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகையும் கூறினாள். இராவணன் மாரீசன் என்ற மாய மானை அனுப்பினான். மானைச் சீதை விரும்பினாள். இராமன் மானைத் தொடர, இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றான். இலங்கையில் சிறை வைத்தான். சீதையைக் காணாது, இராமன் கலங்கினார். சுக்கிரீவனுக்காக வாலியைக் கொன்றார். அதன் பின் குரங்குப் படைகளின் உதவியுடன் சீதையைப் பல இடங்களிலும் தேடினார்கள். அனுமான் இலங்கை சென்று இராவணனுடைய அரண்மனைகளிலெல்லாம் சீதையைத் தேடினான். அசோக வனத்தில் சீதையைக் கண்டான். இராமன் கொடுத்துவிட்ட மோதிரத்தைக் காட்டினான். இராமருடைய நிலைமைகளை எல்லாம் சீதைக்கு விளக்கினான். ஊர் நிலைமைகளையும் அறிவித்தான். இராமருடைய தூதுவனாக இராவணனுடனும் பேசினான். ஈற்றில் இலங்காபுரியை எரித்து, இராமனிடம் திரும்பினான். அனுமார் மூலம் நிலைமைகளை அறிந்த இராமர், சுக்கிரீவன், அனுமன், அங்கதன் முதலிய வானரவீரர்களுடன் இலங்கை மேல் படை எடுத்தான். இராவணனுடைய தம்பி விபீஷணன், இராமர் பக்கம் சேர்ந்து கொண்டான். பெரிய யுத்தம் நடந்தது. இராவணனுடைய தம்பி கும்பகர்ணன், மகன் இந்திரசித்தன், பல சேனைத் தலைவர்கள் எல்லோரும் மாண்டனர். இராமரும் இலட்சுமணரும் பல நாட்கள் வீரத்துடன் போர்புரிந்தனர். ஈற்றில் இராம பாணத்தால் இராவணனும் இறந்தான். அரக்கர்கள் எல்லோரும் இறந்தனர். இராமர் சீதையைச் சிறைமீட்டார். இலங்காபுரிக்கு அரசனாக விபீஷணனைப் பட்டங்கட்டி, ஸ்ரீ இராமர் சீதையுடனும் இலட்சுமணனுடனும் அயோத்திக்குத் திரும்பினார். பதினான்கு வருடங்கள் கழிந்தன. பரதனுடைய கட்டளைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தி விழாக்கோலம் கொண்டது. ஒரு நல்ல சுப தினத்தில் வசிட்டரால் முடிசூட்டப்பட்டு இராமருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. அனுமான் சிங்காசனம் தாங்கினான். அங்கதன் உடைவாள் ஏந்தினான். பரதன் வெண்குடை பிடித்தான். இலக்குமணனும் சத்துருக்கனும் சாமரை வீசினர். இராமரும் சீதையும் சிங்காசனத்தில் வீற்றிருந்தனரென 'இராமாயணம்' கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23

## ஸ்ரீ அனுமான்

"இராமாயணம் படிக்கும் இடங்களில் அனுமான் கட்டாயமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்" என்பது ஒரு புராண நம்பிக்கையாகும். ஸ்ரீ இராம தூதன், வாயு புத்திரன், அஞ்சனை மைந்தன், வானர வீரன் என அனுமாரைப் பலவாறு அழைப்பார்கள். அவர் மிகவும் அறிவும் ஆற்றலும் உடையவர். அஞ்சா நெஞ்சம் கொண்டவர். இராமபிரானிடத்தில் நல்ல பக்தி நிறைந் தவர். அவர் ஒரு பிரமச்சாரி. சிவபிரானுடைய அம்ச முள்ளவர். பார்வைக்குக் குரங்குபோல இருந்தாலும் எல்லோராலும் பெரிதும் மதிக்கப்படுகிறார். அவருக்குப் பல இடங்களிலும் கோயில் உண்டு.

இராமரும் இலக்குமணரும் சீதையை இராவணன் தூக்கிச் சென்றபின் மிகவும் சோர்வடைந் திருந்தனர். பம்பா நதியைக் கடந்து இருஷ்யமுக மலையில் இருந்தார்கள். அனுமார் அவர்களைச் சந்தித்து உரையாடுகிறார். வானர அரசனுக்கும் அறிவிக்கிறார். இராமர் — சுக்கிரீவன் நட்பு அனுமாருடைய அரசியல் தந்திரமாகும். "தேவ கந்தர்வர்களுடைய புத்திரர்கள் மிகவும் புத்தியுள்ளவர்கள். விரும்பிய உருவங்களை எடுப் பார்கள்" என்பதுதான் 'வானரர்' தன்மை," என வால்மீகி கூறுவதைக் கம்பரும் ஒப்புக்கொள்ளுகிறார். இராமர், இலக்குமணரிடம் அனுமானைப் புகழ்கிறார். "எவ்வளவு அழகாகப் பேசுகிறார். அயோத்தியிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையான புலவர்களும் இவருக்கு நிகரல்ல, " என்ற இராமருடைய சொற்களில் அனுமாருடைய திறமைகளை ஒவ்வொன்றாகக் காணலாம்.

சுக்கிரீவனை வானரங்களுக்கு அரசனாக்கி சுக்கிரீவனுடைய தமையன் வாலியை இராமர் மூலமாகக் கொல்லுவித்தார். சுக்கிரீவனை இராமர் கோபிக்காமல் இருக்கப் பல முறை சமாதானம் செய்தார். சீதையைத் தேட நான்கு திசைகளும் வானரர்கள் சென்றார்கள். இராமருடைய மோதிரத்தையும் கொண்டு அனுமான் இராவணன் இருக்கும் தெற்குப் பக்கம் போனார். சீதையை அசோக வனத்தில் கண்டார். பல ஆறுதல்கள் கூறினார். இராவணனிடம் தூது போனார். அவனுடைய இலங்கையை எரி ஊட்டினார். பெரிய வானர சேனையுடன் இராமரும் இலக்குமணரும் இலங்கை வர உதவினார். இராம — இராவண யுத்தம் நடந்தது. அனுமார் ஆற்றிய தொண்டுகள் பல. இறந்தவர்களை எழுப்ப சஞ்சீவி மருந்துகளைக் கொண்டு வந்தார் ; இரு வீரர்களையும் தோளில் சுமந்தார் ; இராமர் புகழ்பாடிக் கொண்டு அவருடைய பாதங்களில் என்றும் இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

# இராவணன்

முன் காலத்தில் இலங்கையை ஆண்ட இராவணன் என்னும் அரசன் மிகவும் கடவுள் பக்தி உள்ளவன். சங்கீதத்தில் வல்லவன். நல்ல வீரமும் வலிமையும் உடையவன். அரக்கர்களுக்கு ஒரு தலைவன். அவனுக்குப் பத்துத் தலைகளும் இருபது கைகளும் இருந்தன. கும்பகர்ணன், விபீஷணன் என தம்பிமார் இருவரும், சூர்ப்பனகை என ஒரு தங்கையும் இருந்தனர். அவனிடம் புஷ்பக விமானம் ஒன்றும் இருந்தது. ஒருமுறை அந்த விமானத்தில் பறந்தான். வழியில் ஒரு பெரிய மலை வளர்ந்து இருந்ததைக் கவனித்தான். அந்த மலையைத் தூக்கி அப்பால் வைக்க எண்ணினான். கீழே இறங்கித் தோள்களினால் முட்டி உயர்த்தினான். அந்த மலை சிவபெருமான் இருக்கும் இடம் " கைலை " என்பதை அவன் உணரவில்லை. சிவனும் உமையும் அங்கு இருந்தனர். அரக்கன் மலையின் கீழ் நசுங்கினான். மிகவும் வருந்தினான். அவனுக்கு அறிவு வந்தது. துணிச்சலுடன் ஒரு தலையை வெட்டினான். ஒரு கையையும் வெட்டினான். வீணை போலப் பிடித்து யாழ் வாசித்தான். இறைவனையும் இறைவியையும் புகழ்ந்து சாமகீதம் பாடினான். அவனுடைய இசைக்கு இறைவன் மகிழ்ந்தார். பல வரங்களையும் கொடுத்தார்.

இராவணனும், கும்பகர்ணனும், விபீஷணனும் சிவனை எண்ணி மேலும் தவம் செய்தனர். இராவணன் மூன்று உலகங்களையும் பல காலம் ஆளும் வரத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றான். பல ஆயுதங்களையும் பெற்று மகிழ்ந்தான். கும்பகர்ணன் மிகப்பெரிய தேகம் உள்ளவன். தவத்தால் களைத்திருந்தரன். வாய் தடுமாறி ' நித்திரை வரம் ' கேட்டான். இராவணன் அதை உணர்ந்தான். தம்பிக்காக இறைவனை மன்றாடினான். " ஆறு மாதத்துக்கு ஒரு முறை நித்திரை விட்டு எழும்புவான். இடையில் எழுப்பினால் அவன் உயிருக்கு ஆபத்தாகும் " என்று சிவபெருமான் கூறி மறைந்தார். விபீஷணன் நல்ல வரங்களைக் கேட்டுப் பெற்றான். பின்னர் இராவணனும் சகோதரர்களும் மூன்று உலகங்களையும் நன்கு அடக்கி ஆட்சி செய்தார்கள். தேவர்களை வருத்தினர். தேவர்கள் இறைவனிடம் முறை இட்டனர். மகா விஷ்ணு ஸ்ரீ இராமராக அவதரித்தார். இராமர் சீதையுடன் காட் டில் வசித்த பொழுது இராவணன் சீதையில் ஆசை வைத்தான். அவளைத் தூக்கி வந்து இலங்கையில் சிறை வைத்தான். தம்பிமார் சொல்லியும் கேட்கவில்லை. இராமர் குரங்குப் படையுடன் இலங்கை வந்து அரக்கர் களை அழித்தார். கும்பகர்ணன், இராவணன் இறந்தனர். இராமர் விபீஷணனை இலங்கைக்கு அரசனாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25
# இராமரும் சீதையும்

அயோத்திக்கு அரசன் தசரதன். அவனுக்கு நாலு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவன் பெயர் இராமன். சகோதரர்கள் பரதன், இலட்சுமணன், சத்துருக்கன். அவர்கள் நால்வரும் அன்பு, அறிவு, ஒழுக்கம் உள்ள வர்கள். வில் வித்தையிலும் வாள் வித்தையிலும் சிறந் தவர்கள். தசரதன் அவர்களை மிகவும் அன்போடு வளர்த்தான். இராமன் எல்லோரிலும் நல்லவன். வில் வித்தையிலும் வல்லவன். சகோதரர்களிடத்திலும் மிகவும் அன்பு உள்ளவன். நால்வரும் சேர்ந்து விளையாடுவர்.

ஒருமுறை விசுவாமித்திரர் என்ற முனிவர் அரசனி டம் வந்தார். தமக்கு யாகம் செய்ய உதவியாக இராமரை அனுப்பும்படி கேட்டார். தசரதருக்கு விருப்பமில்லை. பொல்லாத காட்டில் முனிவர் யாகம் செய்யும் இடத்துக்கு சிறுவர்களை அனுப்புவதா ? என்று பயந்தார். முனிவர் கோவிப்பாரெனப் பயந்து இராமருடன் இலட்சுமணனை யும் அனுப்பினார். சிறுவர்கள் காட்டில் கொடிய அரக் கர்களைக் கொன்றார்கள். விசுவாமித்திரரின் யாகம் இனிது நடந்தது. முனிவர் மகிழ்ந்தார். இராம இலட்சு மணருக்கு அநேக ஆயுதங்களைக் கொடுத்தார். அவர் களையும் கூட்டிக்கொண்டு மிதிலைக்குப் போனார். மிதிலை அரசன் ஜனகன் மகள் சீதை மிகவும் அழகு உள்ளவள். அங்குள்ள வில்லை இராமர் முறித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையும் இராமரை விரும்பினாள். தசரதர் மிதிலைக்கு அழைக்கப்பட்டார். இராமர் — சீதை கலியாணம் சிறப்பாக நடந்தது. எல்லோரும் அயோத்தி சென்றனர்.

இராமருக்கு முடிசூட்ட தசரதர் ஆயத்தங்கள் செய்தார். பரதனுடைய தாய் கைகேயிக்கு அது விருப்பமில்லை. இராமரைக் காட்டுக்கு அனுப்பவும், மகன் அரசாளவும் அரசனை நெருக்கினாள். தசரதர் மனைவிக்கு மறுக்க முடியவில்லை. இராமரும் சீதையும் இலட்சுமணனுடன் காட்டுக்குப் புறப்பட்டனர். தந்தையுடைய மரியாதையைக் காப்பாற்றினர். இதை அறிந்த தசரதர் இறந்தார். பரதன் முடிசூட மறுத்தான். தமையன் இராமருடைய மிதியடிகளைச் சிங்காசனத்தில் வைத்துக் கீழ் இருந்து நாட்டை ஆண்டான். பதினான்கு வருடம் முடிய இராமர் திரும்ப வேண்டுமெனவும் கூறினான். இராமரும் சீதையும் இலட்சுமணனுடன் காட்டில் இருந்தனர். அரக்கர்களும் அந்தக் காட்டில் திரிந்தனர்.

இராவணன் அரக்கர்களுடைய அரசன். அவனுக்குக் கும்பகர்ணன், விபீஷணன் என இரு தம்பிமார் உண்டு. சூர்ப்பனகை என்ற ஒரு சகோதரியும் இருந்தாள். அவள் மிகவும் கொடியவள். அழகும் அடக்கமும் இல்லாதவள். சூர்ப்பனகை இராமரும் சீதையும் அழகாக இருப்பதைப் பார்த்தாள். இராமரை விவாகம் செய்ய யோசித்தாள். இலட்சுமணன் அவளை வெருட்டிக் கலைத்தான். அவள் ஓடிப்போனாள். தமையன் இராவணனிடம் சீதையின் அழகைக் கூறினாள். இராவணன் காட்டுக்கு வந்தான். ஒரு அழகிய மானைச் சீதை முன் போகச் செய்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதை, மானைப் பிடித்துத் தரும்படி இராமரைக் கேட்டாள். இராமர் மானைப் பிடிக்கச் சென்றார். இராமரைத் தொடர்ந்து அவரைத் தேடி இலட்சுமணனும் சென்றான். சீதை தனியாக காட்டில் இருந்தாள். இராவணன் வந்து சீதையைத் தூக்கிச் சென்றான். தனது இலங்காபுரியில் சிறை வைத்தான். தன்னை விவாகம் செய்யும்படி வேண்டினான். சீதை மறுத்துவிட்டாள்.

இராமரும் இலட்சுமணரும் காட்டில் அலைந்தனர். சீதையைத் தேடினர். குரங்குத் தலைவன் அநுமான் சந்தித்தார். அநுமான் சீதையை இலங்கையில் கண்டார். இராமனுக்குக் கூறினார். இராமனும் இலட்சுமணரும் பெரிய குரங்குச் சேனையுடன் இலங்கை வந்தனர். பெரிய யுத்தம் நடந்தது. கும்பகர்ணன், இராவணன் இறந்தனர். இராமர் சீதையைச் சிறை மீட்டார். இராமரும் சீதையும் அயோத்திக்குப் போனார்கள். அங்கு அவர்கள் முடிசூடி இனிது வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## மகா பாரதம்

மகா பாரதம் ஒரு பெரிய கதை. ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் வடமொழிப் பாடல்களை உடையது. வேதவியாசர் என்ற முனிவர் சொல்ல, வினாயகப் பெருமானால் எழுதப்பட்டது. 'ஐந்தாம் வேதம்' என்று இந்துக்களால் போற்றப்படுவது. இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவது. உலக இதிகாசங்களில் ஒன்றாக வைத்து எண்ணப்படுவது. இந்திய மக்களை பல வகைகளிலும் அறிந்துகொள்ளக்கூடிய உப கதைகளின் தொகுப்பு ' மகா பாரதம் ' எனலாம். இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளிலும் வேறு பல உலக மொழிகளிலும் எழுதப்பட்ட நூல்களில் மகாபாரதம் மிகவும் சிறந்ததாகும். பல ஆண்டுகளாக இந்தியாவுக்கு ' பாரத நாடு 'என்னும் பெயருண்டு. பழைய காலத்திலே இந்தியா பல பிரதேசங் களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது என்றாலும், பரத வம்சத்து அரசருடைய கதையைக் கூறும் நூல் ' மகா பாரதம் ' எனப் பெரியோரால் வழங்கப்பட்டது.

பரத வம்சத்திலே சந்தனு என்ற மகாராசா இருந்தார். அவருடைய தலைநகரம் அஸ்தினாபுரம். அவருக்கு ' கங்கா ' என்ற தேவப் பெண்ணிடத்தில் பிறந்தவர் வீட்டுமர் ஆவார். சந்தனுவின் இரண்டாவது மனைவி சத்தியவதி. அவளுடைய் பிள்ளைகள் அரசர்களா வதற்காக, வீட்டுமர் விவாகஞ் செய்யவில்லை. சத்திய வதியின் பிள்ளைகள் சித்திராங்கதன், விசித்திரவீரியன் ஆகியோர். காசி அரசன் புதல்விகளான அம்பா, அம்பிகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாலிகை, வீட்டுமரால் விசித்திரவீரியனுக்கு மனைவிகளாவதற்குக் கொண்டுவரப்பட்டனர். அம்பா வீட்டுமருடன் முரண்பட்டு அவரைக் கொல்வதாகச் சபதம் செய்து பிரிந்துபோய் விட்டாள். அம்பிகையிடத்து திருதராட்டினனும் அம்பாலிகையிடத்தில் பாண்டுவும் பிறந்தார்கள். திருதராட்டினனும், பாண்டுவும் இளவரசர்களாக வீட்டுமரால் வளர்க்கப்பட்டனர். அவர்களுடைய இளைய தம்பியாக விதுரர் வளர்ந்தார்.

திருதராட்டினருக்கு கண்கள் தெரியாது. பாண்டு சந்திர வம்சத்துக்கு அரசனானான். திருதராட்டினன் மனைவி காந்தாரி. பாண்டுவின் முதல் மனைவி குந்தி தேவி. இரண்டாவது மனைவி மாத்திராதேவி. காந்தாரி நூற்றொரு பிள்ளைகளைப் பெற்றாள். இளமையில் குந்தி பாண்டுவை விவாகம் செய்ய முன், கர்ணனைப் பெற்றாள். கர்ணன் தேர்ப்பாகனால் வளர்க்கப்பட்டான். குந்திக்கு தருமர், வீமன், அர்ச்சுனனும், மாத்திராவுக்கு நகுலன், சகாதேவனும் பிறந்தார்கள். இவர்கள் ஐவரும் ' பஞ்ச பாண்டவர்கள் ' என அழைக்கப்பட்டனர். நூற்றொருவருக்கு மூத்தவன் துரியோதனன். அவனுடைய ஒரு தம்பியின் பெயர் துச்சாதனன். கடைசித் தம்பியின் பெயர் விகர்ணன். பஞ்சபாண்டவர்களும் துரியோதனனுடைய நூற்றொருவரும் வீட்டுமராலும் விதுரராலும் நன்கு வளர்க்கப்பட்டனர். பாண்டு அரசன் இறந்ததனாலும், திருதராட்டினருக்கு கண் குருடானதாலும் அவர்களுடைய பிள்ளைகள் அரண்மனையில் இளவரசர்களாக வாழ்ந்து வந்தார்கள். கிருபாச்சாரியார், துரோணாச்சாரியார் என்ற இரு ஆசிரியர்கள் அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வில் வித்தை, வாள் வித்தை முதலியன கற்பித்து வந்தார்கள். அவர்களுடன் துரோணருடைய மகன் அசுவத்தாமனும் படித்து வந்தான்.

இளவரசர்களுடைய அரங்கேற்றம் நடந்தபொழுது அர்ச்சுனன் வீரனாக விளங்கினான். அவனுக்குப் போட்டியாக அங்கு கர்ணன் தோற்றினான். துரியோதனன் கர்ணனைத் தனது தோழனாக்கினான். பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனன் ஆகியோருக்கும் பகைமை உணர்ச்சி வளர்ந்தது. துரியோதனன் வீமனைக் கொல்ல முயற்சிகள் செய்தான். கர்ணனை அர்ச்சுனனுடன் பகைமை கொள்ளச் செய்தான். தகப்பன் திருதராட்டினனுக்குப் பல கதைகள் கூறித் தன் பக்கம் சேர்த்துக் கொண்டான். தனது தாய் மாமனான சகுனியின் ஆலோசனைகளைக் கேட்டு, பாண்டவர்களுக்குப் பல கெடுதிகள் செய்தான். வீட்டுமர், விதுரர், திருதராட்டினன் ஆகியோர் கூடி ஆலோசித்து, தருமருக்கு முடிசூட்ட எண்ணினர். துரியோதனன் மிகவும் ஆத்திரம் அடைந்தான். தகப்பன் திருதராட்டினருக்கு தருமனான உதிஷ்டிரனிடத்தில் அன்பும் நம்பிக்கையும் இருப்பதையும் அறிந்தான். சகுனியின் உதவியுடன் ஊர் நிலைமைகளைத் திருதராட்டினனுக்கு விளக்கினான். வீட்டுமர் அரசு ஏற்க விரும்பார். நடுநிலை வகிப்பார். கிருபர், துரோணர், அசுவத்தாமன், கர்ணன் முதலிய பெரிய போர் வீரர்கள் தனது பக்கம் சேருவார்கள். விதுரர் வெளிப்படையாக எதிர்க்கமாட்டார். ஆகையால் பாண்டவர்களை நகரத்துக்கு வெளியே உள்ள ' வாரணாவதம் ' என்ற இடத்துக்கு அனுப்புவோம். அவர்கள் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குபோது, "நாங்கள் எங்களைப் பலப்படுத்திக் கொள்ளலாம்" என துரியோதனன் பலவும் தகப்பனாரிடம் கூறினான். அவரும் ஒருப்பட்டார்.

வாரணா வதத்தில் மெழுகு, வைக்கோல் போன்ற எரியக்கூடிய பொருள்களால் ஒரு மாளிகை கட்டி, பஞ்ச பாண்டவரை அங்கு போய் வசிக்கவும் செய்தனர். குந்தியும் மைந்தர் ஐவரும் அங்கு இருந்தபோது, வீமன் ஒரு மந்திரி மூலமாகத் துரியோதனனின் சூழ்ச்சியை அறிந்தான். அன்று இரவு மாளிகைக்கு நெருப்பு வைத்து விட்டு, இரகசிய வழியாகத் தாயையும் சகோதரர்களையும் மீட்டுவந்தான். பாண்டவர்கள் உருவம் மாறி பிராமணர் போல, வாழ்ந்தார்கள். அப்பகுதி மக்களுக்குத் துன்பம் செய்த பகாசுரனை வீமன் கொன்றான். பாஞ்சால நாட்டு இளவரசி திரௌபதியின் சுயம்வரத்துக்குப் போனபோது, அர்ச்சுனன் வில்லை வளைத்து, அவளை வென்றான். குந்திதேவியின் புத்திமதியின்படி, திரௌபதி பஞ்ச பாண்டவரின் மனைவியாகினாள். கிருஷ்ணரும் பலராமரும் அவர்களை ஆசீர்வதித்தனர்.

பெரியவர்களுடைய புத்திமதிப்படி திருதராட்டினன் பஞ்ச பாண்டவர்களை அழைத்து அத்தினாபுரத்தில் உதிட்டிரனுக்கு முடி சூட்டி, அரைப் பங்கு இராச்சியத்தையும் கொடுத்தான். பழைய இராசதானியையும் புதுப்பித்து, இந்திரப் பிரஸ்தம் எனப் பெயர் சூட்டி இனிது ஆண்டனர். சில ஆண்டுகள் கழிந்தன. பலருடைய வேண்டுகோளின்படி உதிட்டிரன் அங்கு இராசசூய யாகம் ஒன்று செய்தான். கிருஷ்ணருடைய துணையுடன் சரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனையும், பகை அரசர்களையும் அடக்கி, யாகம் இனிது நடந்தது. துவாரகை மன்னன் கிருஷ்ணருக்கு இங்கு முதல் மரியாதை கொடுக்கப்பட்டதைச் சில மன்னர்கள் விரும்பவில்லை. அவர்களுள் ஒருவனாகிய சிசுபாலன் என்ற அரசனும் கொல்லப்பட்டு, யாகம் சிறப்பாக முடிந்தது. உதிட்டிரன் பேரரசனானான். துரியோதனனுடைய பொறாமை பல மடங்காகியது.

சகுனியின் புத்திமதிப்படி, அவர்கள் சூதாட்டம் ஆடத் தூண்டப்பட்டனர். திருதராட்டினனும் சம்மதித்தான். விதுரன் பல நல்ல எண்ணங்களைக் கூறியும் ஒருவரும் கேட்கவில்லை. உதிட்டிரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அரச வழமையாகையாலும், சூதில் விருப்பமிருந்தமையாலும், கால வித்தியாசங்களாலும், தருமரும் சம்மதித்தார். துரியோதனனுக்காகச் சகுனி விளையாடினான். வீட்டுமர், விதுரர்,கிருபர், துரோணர், திருதராட்டினன் முதலிய பலரும் அங்கு இருந்தனர். உதிட்டிரன் சூதாட்டத்தில் தோற்றான். திரௌபதியையும் தோற்றான். பஞ்சபாண்டவர்களும் திரௌபதியும் பன்னிரண்டு வருடங்கள் காட்டில் கழித்தார்கள். ஒரு ஆண்டு விராட தேசத்திலும் மறைந்து வாழ்ந்தார்கள். பல விதமான கஷ்டங்களையும் அனுபவித்தார்கள். வீமன் தேவலோக மலர் பெற்று வந்தான். அர்ச்சுனன் சிவனுடன் யுத்தஞ் செய்து 'பாசுபதம்' பெற்றான். நன்மைகளும் தீமைகளும் பல ஏற்பட்டன. கிருஷ்ணருடைய உதவிகள் ஒவ்வொரு நேரமும் கிடைத்தது. கிருஷ்ணர் பாண்டவர்க்காகத் தூதுபோய் வந்தார். ஈற்றில் பெரும் போர் மூண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத கண்டத்தில் இந்தப் பெரிய போர் நடந்த இடம் " குருசேத்திரம் " எனப்பட்டது. கோடிக் கணக்கான மக்களும், படைகளும், அரசர்களும் இந்த மகா யுத்தத்தில் பதினெட்டு நாள் பங்குபற்றினர். முதல் நாள் அர்ச்சுனன் சோர்வு அடைந்தான். கிருஷ்ணர் அவனைத் தேற்றிக் கூறிய வார்த்தைகள், இன்றும் ' பகவத் கீதை ', என விளங்குகிறது. வீட்டுமர், துரோணர், அசுவத்தாமன், கர்ணன் முதலிய வீரர்களும் இறந்தனர். கர்ணனை அர்ச்சுனனும், துரியோதனனை வீமனும், வீட்டுமரை சிகண்டியும் கொன்ற கதைகள், சிந்தனைக்குரியவை. கிருஷ்ணருடைய சகாயத்தால் பஞ்சபாண்டவர்கள் வென்றார்கள். பேரரசனாகியும், தருமர் அதிக காலம் ஆளவில்லை. இமயமலைச் சாரலுக்குச் சென்று தவஞ் செய்தனர். மகாபாரதக் கதை மக்களுக்கு நல்ல அறிவு வழங்கும் கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27
## பஞ்ச பாண்டவர்கள்

குரு வம்சத்தில் பாண்டுவும் திருதராட்டினனும் இளம் அரசர்கள். திருதராட்டினன் குருடானதால் பாண்டு அரசனானார். சில காலத்தில் பாண்டு இறந்துவிட்டார். அவருடைய பிள்ளைகள் பஞ்சபாண்டவர்கள் எனப் படுவர். பாண்டுவிற்கு குந்திதேவி, மாத்திராதேவி என இரு மனைவிகள். அவர்களுடைய பிள்ளைகள் தருமர், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என அழைக்கப் பட்டனர். திருதராட்டினனும் மனைவி காந்தாரியும் நூறு பிள்ளைகளைப் பெற்றனர். மூத்தவன் பெயர் துரியோதனன். பஞ்சபாண்டவர்களும் துரியோதனன் முதலான நூற்றுவரும் துரோணர் நடத்திய குருகுலம் சென்றனர். பலவிதக் கல்வியுடன் அரசருக்குரிய வில் வித்தையும் கற்றனர்.

சிறு வயதிலேயே பஞ்சபாண்டவர்க்கும் துரியோதனன் சகோதரர்களுக்கும் பகைமை வளர்ந்தது. அர்ச்சுனன் சிறந்த வில் வீரனாக வந்தான். வீமன் மல்யுத்தத்தில் வல்லவன். துரியோதனனுக்கு இவர்களில் பொறாமை ஏற்பட்டது. அவன் கர்ணன் என்ற வீரனைத் தன் தோழ னாக்கிக் கொண்டான். துரியோதனன் தன் நண்பர் களுடனும் மாமன் சகுனியுடனும் ஆலோசித்து பஞ்ச பாண்டவர்களைக் கஷ்டப்படுத்தினான். வீட்டுமர், விதுரர், கிருபர், துரோணர் முதலிய முதியவர்கள் தருமரை இளவரசராக்க முயன்றனர். திருதராட்டினனின் உதவி யால், துரியோதனன் பஞ்சபாண்டவர்களை ஒரு புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்துக்கு அனுப்பினான். அங்கு அவர்களைக் கொல்லவும் சூழ்ச்சிகள் செய்தான். அங்கு கட்டப்பட்ட மெழுகினாலான மாளிகையை எரித்து, வீமன் தாயையும் சகோதரரையும் காப்பாற்றினான். அதன் பிறகு பாண்டவர்கள் பிராமண வேடத்தில் வாழ்ந்தனர். அப்பொழுது அர்ச்சுனன் திரௌபதியை மணந்தான்.

அத்தினாபுரம் என்ற பழைய நகரத்தை துரியோதனனும் இந்திரப்பிரஸ்த நகரத்தை பஞ்சபாண்டவர்களும் அரசாண்டனர். மாமன் சகுனியுடன் ஆலோசித்து, துரியோதனன் பஞ்சபாண்டவர்களுடன் சூதாடினான். சூதில் தோற்ற பஞ்சபாண்டவர்கள் திரௌபதியுடன் பன்னிரண்டு வருடங்கள் காட்டில் வசிக்கவும் ஒரு வருடம் மறைந்து வாழவும் பெரியவர்கள் ஆலோசனை கூறினர். இந்தப் பதின்மூன்று வருடங்கள் கழிந்த பின்னரும் துரியோதனன் நாடு கொடுக்க விரும்பவில்லை. அதனால் இரு பகுதியாருக்கும் யுத்தம் மூண்டது. குருக்ஷேத்திரத்தில் நடந்த இந்த மகாபாரதப் போரில் துரியோதனன் கூட்டத்தினர் இறந்தனர். கண்ணபிரான் தேர் செலுத்த யுத்தகளம் சென்ற அர்ச்சுனன் வெற்றி வீரனானான். தருமருடைய தலைமையில் பஞ்சபாண்டவர் அரசாண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28
## வீட்டுமர் அல்லது பீஷ்மர்

மகா பாரதக் கதையில் ஒரு பெரியவர் வீட்டுமர். மனுவின் குலத்தில் ' சந்தனு ' அரசனாயினன். சந்தனு அழகும், குணமும், அறிவும் உள்ளவன். அவனுடைய ஆட்சியில் மக்கள் மகிழ்ந்தனர். மிகவும் ஒற்றுமையுடன் ஒரு வித பயமுமின்றி வாழ்ந்தனர்.

ஒரு நாள் சந்தனு கங்கைக் கரையில் ஒரு அழகிய பெண்ணைக் கண்டான். அரசன் அவளை மணக்க விரும்பினான். அப்பெண் அரசனை மணப்பதற்கு முன் ஒரு வரம் கேட்டாள். தான் செய்யும் எந்தக் காரியத்தையும் அரசன் ஏற்க வேண்டும். எதற்கேனும் அரசன் காரணம் கேட்டால், தான் பிரிந்து விடுவதாகவுங் கூறினாள். அரசனும் சம்மதித்தான். இருவரும் மிகவும் இன்பமாக வாழ்ந்தனர். அப்பெண், ஒவ்வொரு குழந்தையும் பிறந்ததும் கங்கையில் எறிந்தாள். அரசன் ஆச்சரியம் அடைந்தாலும், ஒன்றும் கேட்டானில்லை. எட்டாவது குழந்தை பிறந்த பொழுது, சந்தனு தான் கொடுத்த வரத்தை மறந்தான். " பெண்ணே ! என் குலம் விளங்க இந்தக் குழந்தையை எறியாதே " என்றான். அப்பெண் சிரித்து ' இப்பிள்ளையை வளர்த்துத் தருகிறேன் ' எனக் கூறிப் போய்விட்டாள். சில காலத்தின் பின் அந்தப் பிள்ளையை அரசனிடம் கொடுத்தாள். சிறுவனை இளவரசன் ஆக்கி அரசன் மகிழ்ந்தான்.

மகாராசா சந்தனு இன்னொரு நாள் யமுனைக் கரையில் ஒரு அழகிய பெண் ' ஓடம் ' ஓட்டக் கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை மணக்க விரும்பினான். அவள் ஒரு செம்படவன் மகள். சத்தியவதி எனப் பெயர். அரசன் மனம் குழம்பிய நிலையில் இருந்தான். தேவவிரதன் தகப்பனாரின் மன நிலைமையை உணர்ந்தான். யமுனைக் கரைக்குச் சென்று செம்படவனையும் சத்தியவதியையும் கண்டான். செம்படவன் நிபந்தனைகளை ஏற்றான். " என் தகப்பன் சந்தனுவுக்கும், சத்தியவதிக்கும் பிறக்கும் பிள்ளைக்கு சிம்மாசனம் உரியது. நான் இளவரசனாக இருப்பதால், எனது பிள்ளைகள் உரிமை கொண்டாடாமல் இருப்பதற்காக, நான் விவாகஞ் செய்யமாட்டேன். இது சத்தியம்," எனக் கூறி வீரசபதம் செய்தான். சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் விவாகம் நடந்தது.

இளவரசனுடைய வீரத்தை எல்லோரும் மெச்சினர். ' பீஷ்மர் ' எனவும் போற்றினர். அவர் பிரமச்சாரியாகவே இருந்து, குருகுலத்தை வளர்த்தார். மகா பாரதப் போரில் குருகுலச் சேனைக்குத் தலைவர் ஆனார். தகப்பனாரின் ஆசியால், அவர் விரும்பினாலன்றி இறக்கமாட்டார். பஞ்ச பாண்டவருக்குத் தான் இறப்பதற்குரிய உபாயம் கூறி வீரத்துடன் இறந்தார். இவருக்கு கங்கா புத்திரன், தேவ விரதன் எனப் பெயர்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29

# கர்ணன்

'கொடைக்குக் கர்ணன்' என்பது ஒரு பழ மொழி. கர்ணன் கதையும் வீரம் நிறைந்தது. ஆனால் மிகவும் துக்கமானது. மகா பாரதக் கதை படிப்பவர்கள், கர்ணனை மறக்க முடியாது. அவனுடைய வீரதீரச் செயல்களை எல்லோரும் மெச்சுவது உண்டு. அவனுடைய மனத்தையும் போற்றுவார்கள். அவனுக்காக இரக்கம் காட்டுவார்கள். குருக்ஷேத்திர யுத்த களத்தில் அவன் இறக்கும் பொழுது எல்லோரும் அழுதனர். தாய் குந்தி மாத்திரமல்ல, பஞ்சபாண்டவர்களும் கண்ணீர் விட்டனர். துரியோதனனும் தம்பிமாரும் கதறினார்கள். இருபுறமும் நின்ற சேனைகளும் ஏங்கி நின்றன. சூரியனும் இவற்றைப் பார்க்க முடியாமல் மறைந்தான். உலகமே இருளில் மூழ்கியது.

இந்த வீரன் கர்ணன் யாரென்பது பல நாட்கள் ஒருவருக்கும் தெரியவில்லை. கர்ணனுக்கும் 'தான் யார்'? எனத் தெரியாது. தாய் தந்தையரை அறியப் பல நாட்கள் துடித்தான். தினமும் காலையில் சூரியனை வணங்கும் கர்ணன் தனது வரலாற்றை அறியவில்லை. எல்லோரும் கர்ணனைத் 'தேர்ப்பாகன்' மகன் என்றனர். பாண்டவர்களுக்கும் துரியோதனன் சகோதரர்களுக்கும் குருகுலத்தில் வில்வித்தை நடந்தது. துரோணர் ஆசிரியராக இருந்தார். அர்ச்சுனனின் அறிவும் திறமையும் ஆசிரியரை நன்கு கவர்ந்தது. பஞ்சபாண்டவர்களிடத்தில் பொறாமை கொண்டு வளர்ந்த துரியோதனனுக்கு இது பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அவன் மிகவும் கவலை கொண்டான். குருகுல வாசப் பயிற்சி முடிந்ததை வீட்டுமர், கிருபர், விதுரர் முதலியோர் இருந்த சபையில் துரோணர் சொன்னார். அவர்களின் திறமையைக் காட்டிட விரும்பினார். அத்தினாபுரத்தில் பெருவிழா எடுக்கப்பட்டது.

அரச குமாரர்கள் தங்கள் வீரங்களைக் காட்டினர். எல்லோரும் ஒரு மனதாக அர்ச்சுனனைச் 'சிறந்தவன்' என்றனர். அப்பொழுது கவச குண்டலம் அணிந்த ஒரு இளைஞன் வில்லுடன் தோன்றினான். அர்ச்சுனனுக்கும் மேலான வித்தைகளைக் காட்டினான். துரியோதனன் சந்தோஷம் அடைந்தான். கர்ணன்தான் அந்த வீரன் என்பதை அறிந்த அரச சபையில், " தேர்ப் பாகன் மகன் அரச குமாரர்களின் விளையாட்டுகளில் வீரம் பேச முடியாது " எனப் பேரரசர்கள் கதைத்தனர். துரியோதனன் உடனே கர்ணனை அங்கத நாட்டுக்கு அரசனாக்கி அவனது நெருங்கிய நண்பனும் ஆகினான். அரச குலத்தில் மணம் செய்தும் வைத்தான். பஞ்சபாண்டவர்க்கும் துரியோதனன் கூட்டத்துக்கும் பகை வளர, வளர, கர்ணன் மிகவும் முக்கியம் ஆயினன். இரு பகுதியாருக்கும் சமாதானம் ஏற்படுத்த கிருஷ்ணர் தூது வந்தார். அவருடைய தூதும் தோற்றது. கண்ணபிரான் விதுரன் வீட்டில் தங்கி இருந்தபொழுது, கர்ணனின் பிறப்பைக் குந்திதேவிக்கு ஞாபகப்படுத்தி அவளைக் கர்ணனிடம் போய்வரும்படி அனுப்பினார்.

பஞ்சபாண்டவர்களின் தாயைக் கண்டு கர்ணன் வணங்கினான். குந்தியும் கர்ணனிடம், 'அவன் தனது மகன் ', என்பதை விபரமாகக் கூறினாள். இளம் வயதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கன்னியாய் இருந்தபொழுது, சில மந்திரங்களைக் கூறிச் சூரியனை வணங்கியதாகவும், அவன் அருளால் கர்ணன் பிறந்ததாகவும் கூறினாள். ஊருக்குப் பயந்து, குழந்தையைப் பெட்டியில் வைத்து, ஆற்றில் விட்டதை யும் சொன்னாள். குந்திதேவி 'தனது தாய்' என அறிந்ததும் கர்ணன் மிகவும் மகிழ்ந்தான். தாயை அன்போடு கட்டி அணைத்தான். அவளுக்கு என்ன வேண்டுமென இரந்து கேட்டான். குந்திதேவி தன்னுடன் வந்து பாண்ட வர்களுடன் சேரும்படி கேட்டாள். கர்ணனுக்குத் துரி யோதனுடைய அன்பை மறக்கமுடியவில்லை. தாயாரை வணங்கினான். அவளுடன் போக மறுத்து விட்டான். அப்பொழுது குந்திதேவி இரண்டு வரங்கள் கேட்டாள்.

" அர்ச்சுனனைவிட ஏனைய சகோதரர்களுடன் சண்டை செய்ய வேண்டாமென்றும் நாகாஸ்திரத்தை அர்ச்சுனன் மேல் ஒருமுறை உபயோகிக்க வேண்டு மென்றும் ", தாயார் வேண்டியதை கர்ணன் ஏற்றுக் கொண்டான். யுத்தகளத்தில் இந்திரன் கேட்ட பொழுது, கவச குண்டலத்தையும் இறக்கும் நேரத்தில், கிருஷ்ண பகவான் நேரில் வந்து இரந்தபொழுது தான் செய்த தருமங்களையும் கொடுத்துப் புகழ் பெற்றான். அர்ச்சுனன் விட்ட பாணத்தால் வீர மரணம் அடைந்தான். தாய்க்குக் கொடுத்த வாக்குறுதிகளைத் தன் உயிர்போகும் வரை பாதுகாத்தான். குந்திதேவி மகன் கர்ணனை மடியில் வைத்து அழுதபொழுது, இரு படையினரும் அழுதனர். தாயன்பும் சகோதர பாசமும் கர்ணனை ஏமாற்றவில்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உள்ள வீரனாகவும் கொடை வள்ளலாகவும் கர்ணன் மறைந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30
## அர்ச்சுனன்

பஞ்சபாண்டவர்களுள் 'அர்ச்சுனன்' சிறந்தவன். மகா பாரதக் கதையில் அர்ச்சுனன் ஒரு வீரனாக விளங் கினான். குந்திதேவி பாண்டுவை மணந்தபின், இந் திரனை வணங்கி அர்ச்சுனனைப் பெற்றாள். அர்ச் சுனன் நல்ல அழகும், நல்ல குணங்களும் உடையவன். "குரு குலத்தை வாழச்செய்த உத்தமன்" என்றும் அவனைச் சரித்திரம் புகழும்.

பாண்டு மகாராசா இளம் வயதில் இறந்தார். திருத ராட்டினரை அரசராக வைத்து வீட்டுமர், விதுரர் முதலிய பெரியோர்கள் அத்தினாபுரத்தை ஆண்டனர். பஞ்ச பாண்டவர்களும் தாயாருடன் அங்கு வளர்ந்தார்கள். திருதராட்டினனுடைய நூறு பிள்ளைகளும் அவர்களுடன் இருந்தார்கள். வீட்டுமர் அரச குமாரர்களை வில்வித்தைகள் பழக ஒப்படைத்தார். 'பயிற்சிகள் முடிந்ததும் தனது விருப்பத்தை யார் நிறைவேற்றுவார்', எனத் துரோணர் கேட்டார். அர்ச்சுனன் குரு விரும்புவதைச் செய்வதாக வாக்களித்தான். பாஞ்சாலதேசத்து அரசன் துருபதனும் துரோணரும் குருகுலத்தில் மிகவும் நண்பர்கள். நல்ல அன்பாக இருந்தனர். பின் துரோணர் வறுமை அடைந் தார். அப்பொழுது துருபதன் அவரை மதிக்கவில்லை. அவனை யுத்தஞ் செய்து வெல்லும்படி துரோணர் அர்ச்சுனனிடம் கேட்டார். அர்ச்சுனனும் அவ்விதமே செய்தான். துருபதனின் மகள் திரௌபதியாகும். அவ ளுடன் பிறந்த வில்லை சுயம்வர காலத்தில் முறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அர்ச்சுனன் மனைவி ஆக்கினான். குந்திதேவி யின் விருப்பப்படி திரௌபதி பஞ்சபாண்டவர்க்கு மனைவி ஆகினாள்.

பஞ்சபாண்டவர்கள், கண்ணபிரானின் துணையுடன் இந்திரப் பிரஸ்தம் என்ற நகரில் வாழ்ந்தனர். யமுனை ஆற்றங் கரையில் இருந்த காண்டாவனத்தில் வசித்த பாம்புகளைக் கிருஷ்ணரும் அர்ச்சுனனும் எரித்தனர். தேவர்கள் மகிழ்ந்தனர். இமய மலைச் சாரலில் சிவனை நோக்கி அர்ச்சுனன் தவம் செய்தான். பாசுபதம் முதல் பல ஆயுதங்களைத் தேவர்கள் கொடுத்தனர். அங்கு இருந்த 'நிவாத கவசர்கள்' என்ற மூன்று கோடி அரக்கர்களையும் கொன்றான். மூன்று உலகங்களையும் வென்ற வீரனானான். மகாபாரத யுத்தத்தில் கண்ண பிரான் செலுத்திய தேரில் யுத்தகளம் சென்றான். இருபக்கச் சேனைகளுக்கும் நடுவில் அவன் போன பொழுது மனத் தயக்கம் அடைந்தான். யுத்தஞ்செய்ய அவன் விரும்பவில்லை. அந்த நேரத்தில்தான், பகவான் கிருஷ்ணர் கீதையை உபதேசித்தார். மனம் தெளிந்த அர்ச்சுனன், யுத்தஞ் செய்து வெற்றி வீரனானான். குருகுலம் அவனால் சிறப்படைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

## கண்ணகி அம்மை

'கண்ணகி கதை' கூறும் நூல் 'சிலப்பதிகாரம்'. இளங்கோ அடிகளால் சிலப்பதிகாரம் பாடப்பட்டது. இந்த நூல் 'ஐம்பெரும் காப்பியங்களுள் சிறந்தது' என்றும், 'முத் தமிழ்க் காப்பியம்' என்றும் கூறப்படும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உள்ள நூல், சிலப்பதிகாரம். தமிழ் நாட்டில் முன் நடந்த உண்மையான கதை. மனிதப் பெண் சிறந்த வாழ்வால் தெய்வம் ஆன கதை. தமிழ்ப் பெண் குலம் பெருமைப்படக்கூடிய கண்ணகியை தெய்வ மாக்கி, இந்தியாவிலும் இலங்கையிலும் அரசர்கள் கோயில்கள் கட்டினார்கள். மூவேந்தர்களும் மக்களும் கண்ணகியைத் தெய்வமாக வணங்கினார்கள். இன்றும் வணங்குகின்றார்கள்.

தென் இந்தியாவில் சிறந்த நகரம் காவிரிப்பூம் பட்டினம். 'பூம்புகார்' என்றும் கூறுவர். அங்கு கோவலன் என்ற சிறந்த வணிகன் இருந்தான். இலட்சுமி போன்ற அழகும், அருந்ததி எனக் கூறக்கூடிய ஒழுக்கமும், கொண்ட கண்ணகியை மணந்தான். கோவலனும் கண்ண கியும் சிறந்த செல்வத்துடனும் பலவித வசதிகளுடனும் இன்பமாகப் பெரும் மாளிகையில் வசித்தனர். ஆடல், பாடல், அபிநயங்களில் வல்ல அழகி மாதவியினுடைய அரங்கேற்றத்துக்குக் கோவலனும் போயிருந்தான். அவள் அணிந்த மாலையை விலை கூறியபொழுது, கோவலன் அதை வாங்கினான். கோவலன், மாதவி காதலர்கள் ஆயினர். கண்ணகியைப் பிரிந்தான். மாதவியுடன் இன்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக வாழ்ந்தான். பொருள் எல்லாம் செலவு செய்து வறியவன் ஆனான். கண்ணகியும் தனிவாழ்க்கை நடத்தி வந்தாள்.

ஒரு நாள் பூம்புகாரில் இந்திர விழா நடந்தது. கோவலனும் மாதவியும் ஆடல் பாடல்களில் இருந்தனர். மாதவியின் பாடல் கோவலனுக்குப் பிடிக்கவில்லை. அவன் அவளைப் பிரிந்து கண்ணகியிடம் வந்தான். கண்ணகியும் கோவலனை அன்புடன் வரவேற்றாள். கணவன் பணக்கஷ்டங்களைக் கூறினான். கண்ணகி காற்சிலம்பை விற்கும்படி கூறினாள். இருவருமாக மதுரைக்குப் போனார்கள். வழியில் கவுந்தி அடிகளைச் சந்தித்து, நல்ல அறிவும் பெற்றார்கள். மதுரையில் பாண்டிய அரசனுடைய மனைவியின் சிலம்பைக் காணவில்லை. கோவலன் கண்ணகியின் காற் சிலம்பை விற்கச் சென்றபோது அரசனால் பிடிக்கப்பட்டான். கள்வனெனக் கொல்லப்பட்டான். கண்ணகி இதை அறிந்து அரசனுடன் வாதாடி மதுரையையும் எரித்தாள். அரசனும் தேவியும் இறந்தனர். கண்ணகி கணவனுடன் வானுலகம் புகுந்தாள். இதை அறிந்த சேர மன்னன் கண்ணகிக்குக் கோயில் கட்டிப் பெருவிழா எடுத்தான். கண்ணகி தெய்வமானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32

# சகுந்தலை

மநுவின் குடும்ப வழி பெரியது. அவருடைய பரம்பரையில் துஷ்யந்தன் பிறந்தான். அவன் ஒரு நாள் வேட்டை ஆடப்போனான். களைத்த அரசன் குதிரையை விட்டு இறங்கினான். கண்ணுவ மகரிஷியின் ஆச்சிரமம் அருகில் இருப்பதை அறிந்தான். தனிமையில் முனிவரைக்காண விரும்பினான். ஆச்சிரமம் அமைதியாக இருந்தது. மான்கள் விளையாடின ; பறவைகள் சத்தமிட்டன. ஒருவரும் இருப்பதுபோலத் தெரியவில்லை. அவருடைய வளர்ப்பு மகள் சகுந்தலை அங்கு இருந்தாள். மன்னனைக் கண்டாள். வரவேற்றாள். துஷ்யந்தன் அவளுடைய அழகிலும் நடத்தையிலும் மயங்கினான். தன்னுடைய காதலைக் கூறினான். 'மன்னா ! என் தந்தை வரட்டும். அவர் என்னை உங்களுக்கு வழங்குவார்' என்று கூறினாள். அரசனோ, சகுந்தலை விரும்பினால், 'மணப்பது பிழை இல்லை' என்று சொன்னான். சகுந்தலை அரசனிடம் ஒரு வாக்குறுதி கேட்டாள். 'இருவருக்கும் பிறக்கும் மகன் அரசாள வேண்டும்', என்பது தான் வாக்குறுதி. துஷ்யந்தன் சகுந்தலையின் கணவனானான்.

அரசன் பரிவாரங்களுடன் நாடு திரும்பினான். போக முன் அவளுக்கு ஒரு மோதிரம் கொடுத்தான். அவளைத் தமது ஊருக்கு அழைப்பதாகவும் கூறினான். மன்னன் போன பின், கண்ணுவ முனிவர் அங்கு வந்து நடந்தவற்றை அறிந்தார். சகுந்தலைக்குப் பிறக்கும் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்து விளங்குவான் என வாழ்த்தினார். சில மாதங்களில் சகுந்தலை ஒரு மகனைப் பெற்றாள். குழந்தை சிறு வயதிலேயே வீரனாக விளங்கினான். சிங்கக் குட்டிகளையும், புலிக் குட்டிகளையும் பிடித்து விளையாடினான். கண்ணுவரும் சகுந்தலையும் மகிழ்ந் தனர். முனிவர் சகுந்தலையையும் மகனையும் அரசனிடம் அனுப்பினார். துருவாச முனிவரின் சாபத்தால் மனைவியை மறந்த துஷ்யந்தன் மனைவியை ஏற்றா னில்லை. சகுந்தலையையும் மகனையும் தனக்குத் தெரியாது என்றான். சகுந்தலை மிகவும் வருத்தம் அடைந்தாள். அவளது கண்கள் சிவந்தன. கோபம் மேலிட்டது. “ அரசனுக்கு உரிய முறையில் என்னை விவாகம் செய்த நீங்கள், அரசன் போல நீதியாகவும் நடக்க வேண்டும் ” என வலியுறுத்தினாள். “ விரும் பினால், என்னை விடுங்கள், உங்கள் மகனை ஏற்றுக்கொள்ளுங்கள், நான் கண்ணுவ முனிவரிடம் போகிறேன் ” எனக் கூறிப் புறப்பட்டாள்.

அப்பொழுது அரசன் காதில் ஒரு வார்த்தை கேட்டது. “ துஷ்யந்தா, சகுந்தலை கூறுவது முழுவதும் உண்மை, நீ கொடுத்த மோதிரத்தைப் பார், உன் மனைவியையும் மகனையும் ஏற்றுக்கொள் ” எனக் கேட்ட மனுவின் குலமன்னன் ஏங்கினான். அவன், “ உண்மையும் வென்றது. இவன் என் மகன், ” என்பதை உலகம் அறிய வேண்டும். சகுந்தலை நான் காட்டில் கண்ணுவ மகரிஷியின் ஆச்சிரமத்தில் கண்டு காதலித்த என் மனைவிதான் என்பதை உணர்கிறேன். இங்கு சபையில் நிற்கும் என் மனைவி சகுந்தலையை நான் அறிய முடியவில்லை. அவளுடைய வார்த்தைகளை நானே நம்பவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எங்ஙனம் அவளுடைய வார்த்தைகளைக் கேட்டு, அவளுடைய மகன், உங்களுடைய வருங்கால மன்னனை நம்புவீர்கள். அதனாலேயே நான் அவளையும் மகனையும் ஒப்பவில்லை" என்று துஷ்யந்தன் கூறினான். அரசன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, எல்லோரும் மகிழ்ந்தனர். 'சகுந்தலை அரசனுடைய பட்டத்தரசி; மகன் அரச னுடைய மகன்; பட்டத்து இளவரசன்,' என அறிந்தனர். அரசன் கூறிய வார்த்தைகளின் உண்மைகளையும் உணர்ந்தனர்.

சகுந்தலை மோதிரத்தையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தாள். அவளுடைய கண்கள் கலங்கின. துஷ்யந்தன் சகுந்தலையை அணைத்தான். மகனையும் தூக்கினான். காட்டில் கண்ட இதய ராணியை நாடறிய அரசியாக்கி மகிழ்ந்தான். மகனுக்குப் பரதன் எனப் பெயர் சூட்டினான். மநுவின் குலமுதல்வனாகப் பரதன் விளங்கினான். அவனுடைய பெயரால் நாடும் 'பாரத நாடு' எனப் பெயர் பெற்றது. துஷ்யந்தன் — சகுந்தலை அரசாண்ட பின் னர் பரதன் முடிசூடினான். அவன் பின்னர் பாரத நாடு பல சிறப்புகளும் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33

## பிரகலாதன்

முன் ஒரு காலத்தில் இரணியன் என்று ஒரு அரக்கன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். சிவபெருமானை வணங்கித் தவம் செய்தான். ஏராளமான வரங்களைப் பெற்றான். தேவர்களை மிகக் கேவலமாக நடத்தினான். பல நல்லவர்களைச் சிறைவைத்தான். பெண்களையும் குழந்தைகளையும் துன்புறுத்தினான். கொடிய சட்டங்களை விதித்தான். தனது எண்ணங்களை மீறுபவர்களைத் தண்டித்தான். பலருக்கு மரண தண்டனையும் விதிக்கப் பட்டது. தேவர்கள் பயந்து பல இடங்களுக்கும் ஓடி ஒளித்தனர். சிலர் பிரம்மதேவரிடம் நேரில் சென்று முறை இட்டனர். இரணியன் பெற்ற வரங்களையும், செய்கின்ற தீமைகளையும், தாங்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் கூறி அழுதனர். விஷ்ணுவும் புன்முறுவல் கொண்டார்.

இரணியனுக்கு ஒரு குறை இருந்தது. அவனுக்குக் குழந்தை இல்லை. சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். ஒரு நல்ல தெய்வீகமான குழந்தை பிறந்தது. குழந்தைக்குப் ' பிரகலாதன் ' எனப் பெயர் வைத்தான். மிகவும் சீராட்டித் தாலாட்டி, அருமையாக வளர்த்து வந்தான். அவனுடைய பால் வடியும் முகம் பார்த்து இரணியன் மகிழ்ந்தான். பிரகலாதன் நல்ல அழகான குழந்தையாகத் தொட்டிலில் சூரியனைப் போல் பிரகாசித்தான். அழகு பொலியச் சிரித்து விளையாடி மகிழ்ந்தான். குறுநடை நடந்து, பின் ஓடி ஆடிச் சிறுவனாகி வளர்ந்தான். கல்வி கற்கும் பருவம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பிரகலாதன் அழகுபடுத்தப்பட்டு, அரச சபைக்கு கொண்டு வரப்பட்டான். " இரணியாய நம " என்று வணங்கும்படி இரணியன் கூறினான். குருவும் திகைத்தார். பிரகலாதனும் விழித்தான். இரணியன் குருவிடம் 'சிவனையோ, விஷ்ணுவையோ வணங்க வேண்டாம்,' என்றான். அரசன் எல்லோருக்கும் கடவுள். " இரணியாய நம " என்று தொடங்கும்படி கட்டளை இட்டான். பிரகலாதன் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாய் இருந்தான். இரணியன் சொல்லும்படி மன் றாடினான். பின் கோபித்தான். பிரகலாதன் கண்களை மூடி ' ஹரி ஹரி ' என்றான். இரணியன் கோபம் எல்லை மீறியது. " எங்கேயடா ? உன் ஹரி " என்றான். பிரகலாதன் வணங்கியபடி ' ஹரி எங்கும் இருப்பார் ' என்றான். இரணியன் மூர்க்கமாக மகனை நெருக்கி ' இங்குமா ' ? என்று குழறி அங்குள்ள தூணில் உதைத்தான். ஒரு உருவம் தோன்றி இரணியனைக் கொன்றது. பிரகலாதன் " ஹரி ஹரி " என வணங்கினான். மனித உருவமான சிங்கம் விஷ்ணுவினுடைய ஒரு அவதாரம் என அங்கிருந்தோரும் வணங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34

# துருவன்

மிகப் பழைய காலத்தில் உத்தமபாதன் என்று ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். ஒருவர் பெயர் சுநீதி. இரண்டாவது மனைவி பெயர் சுருசி. இளையவள் மிகவும் அழகு உள்ளவள். அரசனும் அவளிடத்தில் மிகவும் பிரியமாய் இருந்தான். சுநீதி பட்டத்து இராணி. அவளுடைய மகன் பெயர் துருவன். சுருசிக்கும் ஒரு மகன் இருந்தான். சுருசி மிகவும் ஆசை உள்ளவள். தனது மகன் அரசனாக வேண்டும் என்பது அவளுடைய விருப்பம். அவளுக்குத் துருவன் இடத்தில் வெறுப்பும் இருந்தது.

ஒரு நாள் உத்தமபாதன் சுருசியுடன் ஆறுதலாக இருந்தான். அவளுடைய மகனும் அங்கு ஓடி வந்தான். ' அம்மா ! நான் அப்பாவின் மடியில் இருக்க விரும்புகிறேன்', என்று சிறுவன் கூறினான். " நீ அரசனாக வரவேண்டியவன் அல்லவா ? அப்பாவின் மடியில் ஏறி இரு " என்று சுருசி கூறினாள். அரசனும் மகனை மடியில் வைத்து விளையாடினார். அந்த நேரத்தில் துருவன் அங்கே வந்தான். சிறுவன் ஆசையால் அப்பாவின் மடியில் தானும் இருக்க விரும்பினான். " நீ என் பிள்ளையாக வரக் கடவுளை வணங்கு " எனக் கூறி சுருசி தடுத்து விட்டாள். அரசனும் அதை அவதானிக்கவில்லை. துருவன் அழுது கொண்டு தாயிடம் ஓடினான். ' அம்மா நான் எங்கு போவேன் ' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதான். " நாங்கள் கடவுளிடம் முறை இடுவோம், " என்று சுநீதி ஆறுதல் கூறினாள். சிறுவன் ஆலோசித்தான்.

சுருசியும் கடவுளிடம் தன் பிள்ளையாகப் பிறக்க வரம் கேட்கும்படி கூறினாள். அன்னையும் கடவுளிடம் முறை இடும்படி கூறுகிறாள். ' நான் கடவுளைத் தேடிக் காண்பேன் ' என்றான். நாரதர் துருவனைக் கண்டார். காட்டில் அலையாமல் தாய் இடம் போகும்படி துருவனுக்குச் சொன்னார். " நான் அரசகுமாரன். நான் கடவுளைக் காணப் புத்திமதி கூறுங்கள் " என்றான். " வேறு ஆலோசனைகள் வேண்டாம் " எனச் சிறுவன் சொன்னான். நாரதர் துருவனை மெச்சி, ' நாராயணா ! நாராயணா !! ' என்று உச்சரித்துக்கொண்டு புறப்பட்டார்.

சிறுவனும் " நாராயணா " என்று உச்சரித்தபடி தியானத்தில் அமர்ந்தான். உணவை, உறக்கத்தை, தாயை மறந்தான். நாராயண மந்திரத்தால் காடு நிறைந்தது. சங்கு, சக்கரத்துடன் பகவான் தோற்றினார். துருவன் விரும்பிய எல்லாம் கொடுத்தார். சுநீதியும் உத்தம பாதனும் அவனை வரவேற்றனர். அரசன் இறந்த பின் துருவன் அரசன் ஆனான். துருவ நட்சத்திரம் என்ற பெயருடன் ஆகாயத்தில் இன்றும் விளங்குகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35
## அரிச்சந்திரன் கதை

தேவர்களுக்கு அரசன் இந்திரன். தேவேந்திரன் சபையில் வசிட்டர், விசுவாமித்திரர் முதலிய முனிவர்கள் இருந்தனர். ஒரு நாள் அங்கு நாரதர் வந்தார். "பூலோ கத்தில் அயோத்தி நகர அரசன் அரிச்சந்திரன் சத்தியம் தவறாதவன். அவன் புகழ் மூவுலகிலும் விளங்குகிறது" என்று கூறினார். இந்திரனுக்கு இக்கதை பிடிக்கவில்லை. நாரதர் கூறியவற்றைக் கேட்டு விசுவாமித்திரர் ஆத்திர மடைந்தார். "அரிச்சந்திரனைப் பொய் சொல்லச் செய்ய என்னால் முடியும்" எனவும் கூறினார். இவற்றைக் கேட்டு தேவேந்திரனும் மகிழ்ச்சி அடைந்தான்.

விசுவாமித்திரர் தமது தவ வலிமையால் அரிச்சந் திரனைக் கனவு காணச் செய்தார். அந்தக் கனவில் அரிச்சந்திரன் விசுவாமித்திர முனிவருக்குத் தனது அரசைக் கொடுப்பதாக இருந்தது. அரிச்சந்திரன் மகிழ்ச் சியுடன் இருக்கும்போது, விசுவாமித்திரர் அவனுடைய சபைக்கு வந்தார். "எனக்கு உன் அரசைத் தானம் கொடுத்தது ஞாபகம் இருக்கிறதா" என்று கேட்டார். கனவிலும் பொய் சொல்லாத அரிச்சந்திரன் 'ஆம்' என்றான், உடனே விசுவாமித்திரர் 'எனது அரசைத் தருவாயாக' என்று கூறினார். அரிச்சந்திரன் அரசைத் தானம் செய்தான். "தானம் கொடுப்பவர்கள் தட்சணை யையும் கொடுக்க வேண்டும். இன்னும் ஆயிரம் பொன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடு, அல்லாவிட்டால் கனவு காணவில்லை என்று கூறு ” என்று முனிவர் சொன்னார். அரிச்சந்திரன் தயக்கம் அடைந்தான்.

‘ ஒரு மாதத்தில் ஆயிரம் பொன்னும் தருகிறேன் ’ என்றான். விசுவாமித்திர முனிவர் அயோத்திக்கு அரச னானார். அரிச்சந்திரன், மனைவி சந்திரமதி உடனும் மகன் லோகதாசனுடனும் நாட்டை விட்டுப் புறப்பட்டான். காசிநகர்த் தெருவில் மனைவியையும் மகனையும் விற் றான். ஆயிரம் பொன் சேரவில்லை. தன்னையும் ஒரு புலைஞனுக்கு விற்று முனிவருக்குப் பொன்னைக் கொடுத் தான். சந்திரமதியும் லோகதாசனும் அவர்களை விலைக்கு வாங்கிய பிராமண வீட்டில் வேலை செய்தார்கள். அரிச்சந்திரன் சுடலை காத்தான். கனவிலும் பொய்கூறத் தெரியாத அரசன் மிக வருந்தினான். ஒரு நாள் லோக தாசன் தர்ப்பை வெட்டக் காட்டுக்குப் போனபொழுது பாம்பு கடித்து இறந்தான். சந்திரமதி மகனைத் தேடிக் காடு சென்றாள், புலம்பினாள். பின் இறந்து கிடந்த மகனைத் தூக்கிக்கொண்டு சுடலைக்குச் சென்றாள். அரிச்சந்திரனுக்கு இரவில் சந்திரமதியையும் மகனையும் தெரியவில்லை. ‘ சுடலைக்குரிய பணத்தைக் கொடுக் காமல் பிணம் சுட முடியாது ’ என்று தடுத்தான். அந்த நேரத்தில் மின்னல் ஒன்று தெரிந்தது. அரிச்சந்திரன் சந்திரமதியைக் கண்டான். இறந்தது தன் பிள்ளை என அறிந்தும் பிணம் சுட விடவில்லை. சத்தியம் தவறாத அரிச்சந்திரனைத் தேவர்கள் போற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36

## நளன் — தமயந்தி

நிடத நாட்டை ஆண்ட அரசன் பெயர் நள மகாராசன். ஒருநாள் அவன் பூந்தோட்டத்தில் இருந்தான். அங்கு ஓர் அன்னம் வந்தது. அரசன் அந்த அன்னத்தை அன்புடன் நோக்கினான். அவனுக்குத் தகுதியான ஒரு அரச குமாரி தமயந்தி என்ற பெயருடன் இருப்பதாக அன்னம் கூறியது. " அவள், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு உடையவள். சந்திரனைப் போன்ற முகம் உள்ள அந்த அரசி உனக்கும் ஏற்றவள் " எனக் கூற, அரசனும் கேட்டு மகிழ்ந்தான். அன்னம் திரும்பிப் பறந்து போய்த் தமயந்தியிடமும் நளனைப் புகழ்ந்தது.

தமயந்தி மங்கைப் பருவம் அடைந்ததும் தகப்பன் சுயம்வரம் வைத்தார். அவளை மணக்கப் பல அரசர்களும் வந்தனர். இந்திரன் முதலிய தேவர்களும் வந்தனர். அந்தச் சபையிலே தமயந்தி மாலையுடன் வந்தாள். அவள் அழகைக் கண்டு அவளை அடைய எல்லோரும் விரும்பினர். நளனைப் போல் உருவம் மாறித் தேவர் களும் வந்தார்கள். தேவர்கள் கண்கள் இமைக்காமல், நிலத்தில் கால் படாமல், மாலைகள் வாடாமல் இருந் ததைத் தமயந்தி கவனித்தாள். அன்னம் கூறிய நள மகாராசனுக்கு மணமாலையைச் சூட்டினாள். தேவர்களும் அரசர்களும் வெட்கித் தலை குனிந்தனர். நளனும் தமயந்தியும் இனிது வாழ்ந்தனர். குழந்தைகளையும் பெற்று அரசையும் இனிது நடாத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் மனம் நொந்தனர். அவர்களைச் சனீஸ்வரன் சந்தித்தார். நளனிடம் ஏழரை வருடங்கள் தமது ஆட்சியை நடத்தலாம் எனவும் கூறினார். தேவர்கள் புட்கரன் என்ற அரசனை நளனுடன் சூதாடத் தூண்டினர். தமயந்தி தடுத்தும் கேளாமல் நளன் சூதாடினான். நாடு, நகரம், அரசு எல்லாம் இழந்தான். பிள்ளைகளைத் தமயந்தியின் தகப்பனாரிடம் அனுப்பிவிட்டு, இருவரும் காடு சென்றனர். சனி பகவானின் சூழ்ச்சியால், இருவரும் பிரிந்தனர். பல கஷ்டங்களையும் அனுபவித்த பின், தமயந்தி தகப்பனாரின் நாட்டுக்குப் போனாள். நளனும் உருவம் மாறி இருதுபன்ன மன்னன் உடைய தேர்ச் சாரதி ஆனான். நளனைத் தேடுவதற்கு தமயந்தி முயற்சிகள் செய்தாள். தனக்கு இரண்டாவது சுயம் வரமென அரசர்க்குத் தெரிவித்தாள்.

ஏழரை வருடங்கள் முடிந்தன. தமயந்தியின் சுயம் வரத்திற்கு பல மன்னர்களுடன் இருதுபன்ன மன்னனும் வந்தான். நளனும் தேர்ச் சாரதியாக அங்கு வந்தான். நளனை அடையாளம் கண்ட தமயந்தி பிள்ளைகளை அவனிடம் அனுப்பினாள். நளன் அவர்களைக் கண்டதும், தூக்கி முத்தமிட்டான். தமயந்தி சுயம்வரம் வைத்த கதையை விளக்கி நளனை வரவேற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37

# சத்தியவான் சாவித்திரி

இந்தியாவில் மாத்திரா தேசத்தின் அரசன் அசுவபதி. அவனுக்குக் குழந்தைகள் இல்லை. கடவுளை வேண்டினான். " சவிதார் " என்ற கடவுளின் அருளால் ஒரு அழகான பெண் குழந்தை பிறந்தது. அதற்குச் சாவித்திரி எனப் பெயர் இட்டான். சாவித்திரி அழகான மங்கை. சங்கீதம், நடனம் முதலிய பல கலைகளையும் கற்றுச் சிறந்து விளங்கினாள். ஒரு நாள் சாவித்திரி பூந் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். ஒரு பொல்லாத வண்டு அவளைத் துரத்தியது. அந்த நேரத்தில் அங்கு ஒரு அழகான வாலிபன் வந்தான். வண்டைக் கொன்றான். அரச குமாரியும் அவனும் ஒருவரை ஒருவர் மாறிப் பார்த்தனர். சிறிது நேரம் சென்றதும் வாலிபன் சாவித்திரியுடன் கதை கொடுத்தான். ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொண்டனர். சாலுவ தேச மன்னன் தியுமத் சேனனுடைய புதல்வன் சத்தியவான் என்பதை அந்த வாலிபன் கதையில் இருந்து அறிந்து மகிழ்ந்தாள். அவர்களுடைய அன்பும் மலர்ந்தது.

சாவித்திரி அரண்மனை திரும்பினாள். தகப்பனாரிடம் தான் சத்தியவானை மணக்க விரும்புவதாகக் கூறினாள். அரச சபைக்கு நாரதர் வந்தார். அரசன் சாலுவதேச அரசனுடைய நிலைமைகளையும் சத்தியவானையும் பற்றி அறிய முயன்றார். நாரதர் சத்தியவானையும் தகப்பனாரையும் புகழ்ந்தார். தியுமத்சேனனும் மனைவியும் கண்களையும்; இராச்சியத்தையும் இழந்து காட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதையும் கூறினார். " சத்தியவான் இன்னும் ஓர் ஆண்டு வாழ்வான் " எனச் சோதிடா கூறியதை நாரதர் ஒளிக்கவில்லை. சாவித்திரி மனம் பதறியது. அசுவதி மகளைப் பார்த்து சத்தியவானை மறக்கும்படி மன்றாடினார். சாவித்திரி தங்கள் காதலைக் கூறினாள். இன்னும் ஒரு ஆடவனைத் தன்னால் நினைக்கவும் முடியாது என்று தகப்பனுக்குச் சொன்னாள். நாரதர் இந்த அரச குமாரியின் தைரியப் பேச்சை மெச்சினார். தகப்பனாருக்கும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் விவாகம் நடந்தது. மகளும் மணமகனும் அசுவதியிடம் விடைபெற்று காடு சேர்ந்தனர். சத்தியவானுடைய தாய், தந்தையரைத் தொழுதனர். சத்தியவானைப் போல் சாவித்திரியும் மரவுரி உடுத்தனள். மாமன், மாமிக்கும் கணவருக்கும் பணிவிடை செய்தாள். ஓர் ஆண்டு கழிந்தது. சாவித்திரி நாரதர் கூறியவற்றை மறக்கவில்லை. கடவுளை நினைந்து தினமும் வணங்கி வந்தாள். சாவித்திரி உபவாசம் இருந்தாள். தன் கணவன் நிலைமைகளை எண்ணி வருந்தினாள். கணவனைப் பிரியாமல் எங்கு சென்றாலும் தானும் போய் வந்தாள்.

ஒருநாள் சத்தியவான் மரம் வெட்டப் போனான். சாவித்திரியும் கூடப்போனாள். அவன் மரம் வெட்டும் பொழுது களைத்து விழுந்தான். சாவித்திரி ஓடிச் சென்றாள். அங்கு இருண்ட தோற்றம் உடைய இயமனையும் கண்டாள். அவனைப் பின் தொடர்ந்து போனாள். இயமன் அவளுக்குப் பல வரங்கள் கொடுத்தார். மாமன், மாமி, கண்கள் தெரியவும், அவர்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' இராச்சியம் ' மீளப்பெறவும் வரங்கள் கேட்டாள். சாவித்திரி பின்பும் அன்புடன் வற்புறுத்தி தனக்கு புத்திர வரந் தரும்படி மன்றாடினாள். இயமன் நிலை தடுமாறினான். அவளுடைய கடவுள் பக்தியை மெச்சினான். கேட்ட வரங்களைக் கொடுத்தான். பின்பு இயமன் மறைந்து விட்டான். சாவித்திரி தன் கணவனுடன் சென்று மந்திர தேசத்தை அடைந்தாள். காட்டில் இருந்த மாமன், மாமி கண்கள் பெற்றுத் தங்கள் சாலுவ நாட்டை அடைந்தனர். சாவித்திரியைப் போற்றி மகிழ்ந்தனர். சத்தியவான், சாவித்திரி இரு நாடுகளையும் அரசு செய்து இனிமையாகப் பல காலம் வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38

# திருஞானசம்பந்தர்

தென் இந்தியாவில் தஞ்சாவூரில் சீர்காழி என்ற ஓர் இடம் இருக்கிறது. சீர்காழியைப் பிரமபுரம் என்றும் கூறுவது உண்டு. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அங்கு ஒரு பிராமணக் குடும்பத்தில் சிவபாதவிருதயருக்கும் பகவதி யாருக்கும் ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு ஆளுடையபிள்ளையார் எனப் பெயர் இட்டனர். குழந்தையும் அம்மா, அப்பாவின் செல்வக் குழந்தையாக வளர்ந்தது. சிறு வயதிலேயே குழந்தைக்கு கோயில் போவதில் பெரும் விருப்பம் இருந்தது. மூன்று வயதாக இருக்கும்பொழுது ஒரு நாள் தகப்பனாருடன் தோணியப்பருடைய கோயிலுக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

தகப்பனார் குளத்தில் இறங்கி நீராடினார். குழந்தை அருகில் இருந்தது. நீரில் அமிழ்ந்த சிவபாதவிருதயர் சிறிது தியானித்தார். குழந்தை தகப்பனாரைக் காண வில்லை என அழுதது. கோயில் திருக்கோபுரத்தை நோக்கி 'அம்மா, அப்பா' என்று கதறியது. உலக மாதாவாகிய உமாதேவியார் தோணி அப்பருடன் எழுந் தருளினார். திருமுலைப் பாலை ஞானத்துடன் கலந்து, பொற் கிண்ணத்தில் வழங்கினார். குழந்தை அழுகை நீங்கிப் பால் வடிய நின்றது. பால் கொடுத்தவர் யார் எனத் தகப்பன் பயமுறுத்தினார். குழந்தை கோபுர வாயிலைப் பார்த்துக் கைவிரலால் காட்டியபடி "தோடுடைய செவியன்" எனப் பாடியது. தோணிஅப்பரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையம்மையையும் இடப வாகனத்தில் எல்லோரும் பார்த்து வணங்கினர். திருஞானசம்பந்தரைப் போற்றி மகிழ்ந்தனர்.

திருஞானசம்பந்தர் தகப்பனாரின் தோளில் பல கோயில்களுக்கும் சென்றார். தாளம் போட்டுப் பாடல் களையும் படித்தார். சிறுகைகள் சிவந்தன. சிவபெருமான் அருளால் பொன் தாளங்களும், கோயில்களுக்குப் போக முத்துச் சிவிகையும், வெயில் பிடிக்காமல் நடக்க முத்துக் குடையும், அவர் புகழ் பாட முத்துச் சின்னங்களும் கிடைத்தன. தென் இந்தியாவில் உள்ள சிதம்பரம், மதுரை, முதலிய கோயில்களுக்கும் சிவனடியார்கள் சூழச் சென்று வணங்கினார். திருநீலகண்டர் என்ற இசை வல்லவர் குழந்தையினுடைய பாடல்களுக்கு யாழ் வாசித்து மகிழ்ந்தார். திருநாவுக்கரசு நாயனார் என்ற அப்பர் சுவாமிகளும் சம்பந்தரும் சந்தித்து மகிழ்ந்தனர். பல கோயில்களுக்கும் சென்று வணங்கினார்கள். பாண்டியன் நாடு சென்று திருஞானசம்பந்தர் சமணர் களைச் சைவசமயம் சேரச் செய்தார். அரசன் கூன்பாண்டியன் வெப்பு நோயைத் தீர்க்க " மந்திரமாவது நீறு " எனப் பாடினார். சமணர்களுடைய வாதங்களையும் வென்றார். " வாழ்க அந்தணர் " என்று பாடி வைகையில் விட்ட ஏடும் எதிர் நீந்தியது. தென் இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள கோயில்களுக்கு அவர் பாடிய தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகள் என அழைக்கப் படுகின்றன.

பல அற்புதங்களைச் செய்து, சைவ சமயத்தையும் வளர்த்தார். சமணம், புத்தம் என்ற சமயங்களைப் ' பொய்ச் சமயங்கள் ' என மக்களை நம்பச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆண் பனைகளைப் பெண் பனைகள் ஆக்கியது, இறந்தவர்களை உயிர்ப்பித்தது, இறைவனிடம் காசு வாங்கித் தருமம் செய்தது " போன்ற பல கதைகள் மூலமாகத் திருஞானசம்பந்த சுவாமிகளின் சரித்திரம் அறியலாம். தகப்பனார் சிவபாதவிருதயருடைய விருப்பப் படி விவாகம் செய்ய இசைந்தார். நம்பியாண்டார் என்பவருடைய பெண்ணுடனும் சிவனடியார்களுடனும் திருமணப் பந்தலுடன் " நல்லூர்ப் பெருமணம் " என்ற தேவாரங்களைப் பாடிக்கொண்டு பதினாறாவது வயதில் சோதியில் கலந்து மறைந்தார். இப்பெருமான், ' தென் இந்தியாவில் சைவம் வளர்த்த பெரியார் ' என இன்றும் போற்றப்படுகிறார். தேவாரங்களை முதல் பாடிய குழந்தையாகவும் அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39

# அப்பர் சுவாமிகள்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் காலத்தில் வாழ்ந்த பெரியார் அப்பர் சுவாமிகள். திருநாவுக்கரசு நாயனார் என்று புராணங்கள் கூறும். அவருடைய தேவாரங்கள் 4 ஆம் 5 ஆம்,6 ஆம் திருமுறைகள் எனப்படும். அவர் மிகவும் வயது கூடிய காலம்வரை வாழ்ந்தார். அதனால் அப்பர் என எல்லோராலும் அழைக்கப்பட்டார். அவர் கையில் ஒரு உழவாரம் இருக்கும். கோயில்களுக்குப் போய் அங்குள்ள புல், பூண்டுகளைச் செதுக்கி, கோயில்களைச் சுத்தமாக வைப்பதே அவருடைய எண்ணம். சுவாமியைப் பார்த்து அழுது, அழுது பாடுவார். அவர் பாடல்கள் மிக உருக்கமுள்ளவை. ' அவர் நாவில் மேலான இனிய சொற்கள் வருவதால் ' அவரை ' நாவுக்கு அரசு ' என்றனர்.

அப்பர் சுவாமிகளுக்குச் சிறு வயதில் இட்ட பெயர் மருணீக்கியார். தகப்பனார் புகழனாரும் தாய் மாதினியாரும் வேளாள வகுப்பினர். தென் இந்தியாவில் திருவாமுனை நாட்டிலே திருவாமூரில் இருந்தவர்கள். மருணீக்கியாரின் அக்கா திலகவதி எல்லோரும் நிரம்பிய கடவுள் பக்தி உள்ளவர்கள். திலகவதியாருக்கும் கலிப்பகையாருக்கும் விவாகம் நிச்சயித்திருந்த வேளையில் கலிப்பகையார் யுத்தம் ஒன்றில் இறந்தார். தாய், தந்தையரும் சிவபதம் அடைந்தனர். திலகவதியார் விவாகஞ் செய்ய விரும்பவில்லை. தம்பியாருக்காக உயிர் வாழ்ந்தார். மருணீக்கியார் நன்கு கற்று, சமய சாத்திரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் வல்லவரானார். அந்நாட்களில் சமண சமயம் மேலோங்கி இருந்தது. அவரும் அச்சமயத்தைச் சேர்ந்து ' தர்மசேனர் ' என்ற குருவானார்.

திருவதிகை வீரட்டானக் கோயிலில் திலகவதியார் இருந்தனர். மருணீக்கியார் சமணப்பள்ளியில் வாழ்ந்தார். தமக்கையார் மருணீக்கியாரை நினைத்து வருந்தினார். சிவபெருமானிடம் முறையிட்டார். மருணீக்கியார் சூலை நோயால் வருந்துவதாகவும் அறிந்தார். கவலை கொண்டார். மருணீக்கியாருக்குச் சமணர்கள் நோய் தீர்க்க உதவவில்லை. அவர் தமக்கையாரிடம் ஓடிவந்தார். 'திருவதிகை அப்பனைக் கும்பிட்டால் நோய் மாறும்' எனத் திலகவதியார் கூறினார். சூலை நோய் வருத்த இறைவனை நோக்கி " கூற்றாயினவாறு விலக்ககலீர் " என்று பாடினார். பாட்டு முடிய சூலை நோயும் சுகமானது. திலகவதியாரும் கடவுளை வணங்கி மகிழ்ந்தார்.

சிவ சின்னங்களுடன் திருநாவுக்கரசராக விளங்கிய தருமசேனருடைய செய்கைகள் சமண அரசருக்குத் தெரிந்தது. அரசன் அழைத்தார். அப்பொழுது " நாமார்க்கும் குடியல்லோம் " எனப் பாடினார். பல்லவ அரசன் கோபித்து சுண்ணாம்புக் கிடங்கில் அடைத்தான். " மாசில் வீணையும் மாலை மதியமும் " என்று பாடி மகிழ்ந்திருந்த பெரியாரை நஞ்சூட்டவும், யானையால் மிதிக்கப்படவும், அரசன் கட்டளையிட்டான். திருநாவுக்கரசர் இவற்றாலும் தப்பிவிட்டதைக் கண்ட சமணர், கல்லோடு கட்டி கடலில் போட்டனர். " சொற்றுணை வேதியன் " என்ற தேவாரம் பாடி மறு கரையை அடைந்தார். பின் பல கோயில்களையும் வணங்கி இறைவன் அடி சேர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40
# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பெரிய புராணக் கதாநாயகன் சுந்தரமூர்த்தி சுவாமிகள். தேவாரங்கள் பல பாடி இறைவனை வணங்கினார். அவை ஏழாந் திருமுறைக்குள் அடங்குவன. ஆலால சுந்தரர் என்ற பெயருடன் சிவபெருமானுக்குக் கைலாயத்தில் தொண்டுகள் செய்தார். அங்கு உமாதேவியின் தோழிகள் அநிந்ததை, கமலினியைக் கண்டார். காதல் கொண்டார். கைலாயபதி இதைக் கண்டு பூமியில் பிறந்து அவர்களுடன் வாழுமாறு கட்டளை இட்டார். ஆலால சுந்தரர், தான் " பூமியில் பிறந்து மயங்கும் பொழுது தடுத்து ஆட்கொள்ளுதல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார் " எனப் புராணங்கள் கூறுகின்றன.

தென் இந்தியாவிலே திருநாவலூரில் பிராமண குலத்தில் பிறந்தார். அரசனால் வளர்க்கப்பட்டுப் பின் விவாகம் நடந்தது. திருமண நாளில் இறைவனால் தடுக்கப்பட்டார். அப்பொழுது " பித்தா பிறைசூடி " என்ற தேவாரத்தைப் பாடினார். அங்கிருந்து பல கோயில்களுக்கும் சென்று தேவாரங்கள் பாடி மகிழ்ந்தார். திருவாரூர் எனுமூரில் பரவையாரைக் கண்டார். அவரை மணந்து பல காலம் நெல், பொன் எல்லாம் பெற்று இன்புற்று வாழ்ந்தார். சோழ நாட்டிலும், கொங்கு நாட்டிலும் உள்ள கோயில்கள் எல்லாம் சென்று வணங்கினார். தான் சென்ற பல கோயில்களை வணங்கித் தேவாரங்கள் பாடி உள்ளார். திருவொற்றியூரில், சங்கிலியாரைக் கண்டு விரும்பினார். இறைவன் முன்னிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சங்கிலியாரைப் பிரியேன் " என வாக்குறுதி கொடுத்து அவரை மணந்தார். திருவாரூரில் வசந்த விழா நடந்த பொழுது பரவையாரைக் காணவும், சுவாமி தரிசனம் செய்யவும் விரும்பி, கொடுத்த வாக்குறுதியை மீறினார். அதனால் கண்கள் தெரியவில்லை. சிவபெருமானிடம் வருந்திப் பிழைகளைப் பொறுத்தருளும்படி வேண்டினார். கண்கள் திரும்பப் பார்வை பெற்றன. திருவாரூரில் பரவையார் கோபம் கொண்டார். இறைவனையே தூது விட்டுச் சமாதானம் செய்து கொண்டார். பல காலம் சந்தோஷமாக வாழ்ந்தார்.

பரவையார், சங்கிலியார் இருவருடனும், பல அடியார் களுடனும் சிவத்தொண்டுகள் செய்து வாழ்ந்தார். சேர, சோழ, பாண்டிய நாட்டுக் கோயில்களெல்லாம் சென்று பாடியுள்ளார். முதலை விழுங்கிய குழந்தையை மீட்டது, ஆற்றை வழி விடச்செய்தது, செங்கற்களை பொன்னாக் கியது போன்ற பல அற்புதங்களையும் செய்தார். இறை வனை நினைந்து அழுத பொழுது வெள்ளை யானையில் ஏறித் திருக்கையிலாயம் சேர்ந்தார். 'தம்பிரான் தோழர், வன்தொண்டர்', என்ற பெயர்களுடன் மணக் கோலத்தில் வாழ்ந்து முத்தி அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41

## மாணிக்கவாசக சுவாமிகள்

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. திருவாசகத்தைத் தேனுக்கு ஒப்பாகக் கூறுவார்கள். அண்மைக் காலத்தில் வாழ்ந்த இராமலிங்க அடிகள் திருவாசகத்தைப் புகழ்ந்துள்ளார் " வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித்தீஞ்சுவை கலந்து, என் ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே ", என்பது அந்தப் பெரியாருடைய அருட்பாவாகும். மாணிக்கவாசக சுவாமிகள் கி. பி. 9 ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று ஆராய்வுகள் கூறும். திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறைக்குள் அடங்குவன. சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் அவை மக்களுக்குக் கிடைத்தன.

மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரில் அமாத்தியப் பிராமண குலத்தில் பிறந்தவர். சிறு வயதில் பல கலைகளும் கற்று வல்லவராயினர். மதுரை அரசர் அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரை முதல் மந்திரியாக்கினார். பிரமராயர் என்ற பட்டமும் கொடுத்தார். திருவாலூர் அரசன் கட்டளைப்படி ஏராளமான பொன்னுடன் பரிவாரங்கள் சூழக் குதிரை வாங்கத் திருப்பெருந்துறைக்குப் போனார். அங்கு சிவஞானம் பெற்றார். சிவனை நினைந்து, தம்மை மறந்து, அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய பாடல்களைக் கேட்டவர்களும் மனம் உருகினர். மாணிக்கவாசகர் எனப் போற்றினார்கள்.

மாணிக்கவாசகர் குதிரை வாங்க வந்ததை மறந்தார். கொண்டு வந்த திரவியங்களை எல்லாம் சிவாலய திருப் பணிகளிலும் சிவனடியார்களிடமும் செலவு செய்தார். விபூதி, உருத்திராக்கங்களுடன் சிவனடியாராக விளங் கினார். பின் மதுரைக்கு வந்தபோது அரசன் அவரை வரவேற்றான். சில நாட்களில் அங்கு நல்ல குதிரைகள் வந்து சேர்ந்தன ; அரசன் மகிழ்ந்தான். அன்றிரவே குதிரைகள் எல்லாம் நரிகளாகி ஊளையிட்டன. அரசன் மாணிக்கவாசகரை சிறையில் இட்டான். வைகைநதி பெருக்கெடுத்தது. ஊர் மக்களை நதியைக் கட்டுப்படுத் தும்படி அரசன் கட்டளை இட்டான். சிவபெருமான் கூலியாளாக வந்து அடியும் பட்டார்.

நடக்கும் அற்புதங்களைக் கண்டு அரசன் மாணிக்க வாசகரை வணங்கினான். முதல் மந்திரியாக இருக்கும்படி வேண்டினான். சுவாமிகள் விரும்பவில்லை. சிதம்பரம் போய் பல அடியார்களுடன் பல பாடல்கள் பாடினார். புத்தரை வாதில் வென்றும், ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தும் பல அற்புதங்கள் செய்தார். அவருடைய பாடல்கள் திருவாசகம், திருக்கோவையார் என்ற பெய ருடன் சிதம்பரம் கோயில் வாசலில் இருக்கக் கண்டு எல்லோரும் அதிசயித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42
# மார்க்கண்டேயர்

முன் ஒரு காலத்தில் ' மிருகண்டு ' என்ற ஒரு முனிவர் இருந்தார். அவர் மிகவும் படித்தவர். குருகுல வாசத்தில் பல சாத்திரங்களும் கற்றார். நல் ஒழுக்கம் நிறைந்தவர். தவம் செய்ய விரும்பினார். பெரியோர்கள் அவரை விவாகம் செய்யும்படி கூறினர். நல்ல உத்தம குணம் உள்ள ஒரு பெண் கிடைத்தால் விவாகம் செய்யலாம். அல்லாவிட்டால் துறவறம் நல்லது என்று தீர்மானித்தார். பல ஊர்களுக்கும் சென்றார். 'அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு', என்ற நாலு நற்குணங்களும் உள்ள பெண் ணைத் தேடினார். சிவபெருமான் இடத்தில் மிகவும் அன்புள்ள ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணைக் கண்டார். அவளை மனைவி ஆக்கினார்.

கணவனும் மனைவியும் இனிய இல்லறம் நடத்தினர். தினம் தோறும் சிவனை வழிபட்டனர். விரதங்கள் இருந்தனர். ஏழைகளுக்கு உணவு கொடுத்தனர். ' நல்ல ஒரு மகன் கிடைக்க வேண்டும் ' எனக் கடவுளை வேண்டிக் கடும் தவம் செய்தார்கள். சிவபெருமான் கனவில் தோன்றினார். மிருகண்டு முனிவர் அவரை வணங்கினார். " முனிவரே ! உமக்கு ஒரு நல்ல மகன் பிறப்பான். பதினாறாவது வயதில் இறந்து விடுவான். நீர் விரும்பினால் ஒரு கெட்ட மகன், பல வருடங்கள் வாழக்கூடியவனைத் தரலாம். உமது மறுமொழியைக் கூறும் " எனக் கேட்டார். மிருகண்டு முனிவர் சிவனை வணங்கி " நல்ல மகன் தான் வேண்டும் ", என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகண்டுவின் நல்ல மகன் ' மார்க்கண்டேயர் ' என வளர்ந்தான். நல்ல கல்வி கற்றான். தந்தை, தாயைத் தெய்வமாக மதித்தான். சிவபெருமானிடத்தில் இடைவிடாத பக்தி கொண்டான். பதினாறு வருடங்களும் முடிகின்றதை முனிவர் உணர்ந்தார். மிருகண்டு முனிவர் உணவை மறந்தார். முகத்தில் கவலை கொண்டார். மார்க்கண்டேயரும் தந்தை தாயரை வணங்கி துக்க காரணத்தைக் கேட்டார். முன் நடந்த கதைகளைக் கேட்டு சிந்தித்தார்.

மார்க்கண்டேயர் தாய் தந்தையரை வணங்கினார். " கடவுள் எல்லாம் வல்லவர். நான் அவரை வணங்கி உய்யத்தான் வேண்டும். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் கோயிலுக்குப் போகிறேன் " என்றார். மார்க்கண்டேயர் சிவலிங்கத்துக்கு முன் தியானத்தில் அமர்ந்தார். அன்னம், ஆகாரம் இன்றி அமர்ந்திருந்த மார்க்கண்டேயருக்கு பதினாறு வயதும் முடிந்தது. யமன் நேரில் தோன்றி, உயிரைக் கவர முயன்றான். மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைக் கட்டித் தழுவினார். சிவபெருமான் யமனை உதைத்தார். மார்க்கண்டேயர் பதினாறு வயதுடன் இறைவன் காலடியில் இன்னும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43

## கண்ணப்பர்

கடவுளை எல்லோரும் வணங்குகிறார்கள். தான் வணங்கிய கடவுளை ஆறு நாளில் கண்டவரை உலகில் காண முடியாது. ஆறு நாட்களுக்குள் அந்தக் கடவுளுக்காகத் தன் கண்ணைப் பிடுங்கி அப்பினவர் கண்ணப்பர். அவர் வணங்கிய தெய்வத்தின் கண்ணில் இரத்தம் கண்டார். அன்பு மேலாகி அழுதார். நிலத்தில் விழுந்து புரண்டார். தமக்குத் தெரிந்த மருந்துகளைத் தடவினார். காட்டில் உள்ள இலைகளைப் பிழிந்தும் பார்த்தார். அப்பொழுதும் நிற்கவில்லை. ' ஊனுக்கு ஊன் உற்ற மருந்து ' என்ற சொற்கள் நினைவுக்கு வந்தது. தனது கண்ணை அம்பினால் தோண்டினார். வழிபடு தெய்வத்தின் கண்ணில் வைத்தார். இரத்தம் வடியவில்லை. ஆனந்தமாக ஆடினார், பாடினார், பணிந்தார். மறு கண்ணில் இரத்தம் பெருகியது. இரண்டாவது கண்ணையும் பிடுங்கி அப்ப, அம்பை எடுத்தார். மறு கண்ணைப் பிடுங்கிய உடன் கண் தெரியாதெனப் பயந்தார். தனது செருப்பு உள்ள காலை இறைவன் கண் அருகில் வைத்தார். " நில் கண்ணப்பா ! என் அன்புள்ள குழந்தாய் ! கண்ணப்பா ! " என ஒரு வசனம் கேட்டது. ' யார் இந்தக் கண்ணப்பர் ? ' என எல்லோரும் கேட்டனர்.

தென் இந்தியாவிலே திருக்காளத்தி என்ற மலை உண்டு. அங்கு உள்ள சிவனுக்கு குடுமித்தேவர் என்றும் பெயர். அங்குள்ள ஒரு நாடு பொத்தப்பி. அங்கு உடுப்பூர் என்ற கிராமத்தில் நாகன் என்ற வேடுவர் தலைவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தை என்ற மனைவியுடன் வசித்தான். முருகன் அருளால், அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. திண்ணன் எனப் பெயர் வைத்து, அன்புடன் வளர்த்தனர். வேடர் குல வழக்கப்படி திண்ணன் வேட்டைக்குச் சென்றான். தரும நெறி தவறாது வேட்டையாடிய போது ஒரு பன்றி எதிர்த்தது. வேடர் பன்றியைக் கொன்றனர். பன்றியைச் சுட்டுச் சாப்பிடமுன் காளத்தி மலைக்குச் சென்றனர். குடுமித் தேவரைக் கண்டதும் திண்ணன், பரவசமாகினன். 'பெருமானுக்கு உணவு இல்லை' என்று ஓடிச் சென்று இறைச்சியை எடுத்தார். ஆற்றில் உள்ள தண்ணீரை வாயில் நிரப்பி, வழியில் உள்ள இலைகளையும் கொண்டு சுவாமியை அணுகினார். வாய் நீரால் அபிசேகம் செய்து, இலைகளால் பூசை செய்தார். இறைச்சியை முன் வைத்தார். சுவாமிக்குப் பூசை செய்யும் பூசகர் அந்த நேரம் அங்கு வந்தார். ஒளித்திருந்து பார்த்தபோது, ஒரு அதிசயம் நடந்தது. சுவாமியினுடைய கண்களில் இருந்து இரத்தம் வடிந்தது. திண்ணனார் தன் கண்களை அம்பினால் எடுத்து அப்பி 'கண்ணப்பன்' ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44
# நம்மாழ்வார்

நம்மாழ்வார் கி. பி. 5 ம் நூற்றாண்டுக்குரியவர். அவருடைய திருவாய் மொழி ' தமிழ் உபநிடதம் ' எனப் போற்றப்படுகிறது. திருவிருத்தம், திருவாசிரயம், பெரிய திருவந்தாதி என்னும் நூல்களும் நம்மாழ்வாரால் ஆக்கப் பட்டன. இப்பெரியாரைப் பலர் சடகோபர் எனவும் அழைப்பார்கள். வைஷ்ணவர்கள் நம்மாழ்வாரைத் ' தெய் வக் குழந்தை ' என்பார்கள். கி. பி. 12 ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ இராமாநுஜர் திருவாய் மொழியைக் கோயில்களிலும், கழகங்களிலும் நெறிமுறையாகப் படிக்க வும் ஒழுங்குகள் செய்தார். செம்மை நலம் வாய்ந்த தமிழ்ச் சொற்களினாலே மேலான உண்மை அறிவை உணர்த் திய நூல் என்று எல்லோரும் பாராட்டுவார்கள். அவரு டைய அறிவுச் செல்வத்தை ஸ்ரீ இராமாநுஜர் தமது முதுமைச் சொத்தாக வைத்து ஒரு புது யுகம் தொடக் கினாரெனக் கூறுவர்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் தென்னிந்தியாவில் இந்து சமயம் வளர்த்தவர்கள். தமிழ் மொழியையும் அன்பு நெறியையும் ஒருங்கு சேர்த்தார்கள். வைஷ்ணவமும் சைவமும் ஒருங்கு வளர்ந்தன. ஆழ்வார்களுள் ஒருவரான மதுரகவி வட இந்தியாவில் யாத்திரை செய்தார். கங்கைக் கரையில் நின்ற பொழுது, ஒருநாள் தெற்குத் திசையில் ஒரு பேரொளி கண்டார். அதைத் தொடர்ந்து சென்று திருக்குருக்கூரை அடைந்தார். அங்கு திருநகரி என்ற ஊரில் ஒரு புளிய மரம் இருந்தது. அம்மரத்தின்கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தெய்வக் குழந்தை யோக நிலையில் இருக்கக் கண்டார். பதினாறு வயதுள்ளவராக இருந்தும், மௌனமாக இருந்தார். மதுர கவியார் கேட்ட கேள்வி களுக்கு மறுமொழி கிடைத்தன. எல்லோரும் அதிசயம் கொண்டனர். 'மதுர கவியார் கண்ட பேரொளி இந்த இளைஞன்' என உணர்ந்தார்.அவருடைய சிஷ்யர் ஆயினர். அவருடைய பாடல்களை ஏட்டில் எழுதினார். அவை பெருநூல்களாக வெளிவந்தன. அவற்றை உலகத் துக்குப் பரப்பியவர் நாத முனிவர். அன்பு கனிந்த திருவாய் மொழிப் பாடல்களினால் ஆண்டவனைத் தொழும்படி மக்களை வேண்டினர்.

அன்பு நெறியைப் பக்தி மார்க்கம் என்பர். அதைத் திருவாய் மொழி, தேவாரங்கள், திருவாசகம் என்பவற்றில் நிரம்பக்காணலாம். நம்மாழ்வாரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அன்பு ஊற்றை சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசக சுவாமிகள், மற்றும் சைவ நாயன்மார் களும் வைஷ்ணவ ஆழ்வார்களும் தென்னிந்தியாவில் நன்கு வளர்த்தார்கள். மக்கள் வாழ்க்கை நலமுறவும், சமரச நெறிகள் பரவவும் நம்மாழ்வார் தொடக்கிய அன்பு நெறி இன்றும் பெருமையுடன் விளங்குகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45

# ஆண்டாள் கதை

மார்கழி மாதம் தேவர்களுக்குரிய மாதம் எனக் கூறுவார்கள். 'மாதங்களில் நான் மார்கழி' என்பது ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய வாக்காகும். திருவெம்பாவை, திருப்பாவை என இரு வகைப் பாடல்களால் கன்னிப்பெண்கள் இம்மாதத்தில் இறைவனை வணங்குகிறார்கள். திருவெம்பாவை மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது. திருப்பாவை ஆண்டாளால் பாடப்பட்டது. சிவபெருமானை வழிபடுபவர்களால் திருவெம்பாவையும், விஷ்ணுவை வழிபடுபவர்களால் திருப்பாவையும் இன்றும் கோயில்களில் பாடப்படுகின்றன. பாடல்களின் தொகைகளில் வேறுபாடுகள் சில உண்டு. கன்னிப் பெண்கள் பக்தியை வளர்க்கவும், கடவுளை வணங்கவும் பாடல்கள் மிகவும் உதவுகின்றன. நல்ல கணவன் வாய்க்கவும், வீடும் குடியுமாக வாழவும், நாட்டில் மழை பெய்து, செழிப்பு உண்டாகவும், எல்லோரும் சிறப்புறவும் வாழ்த்தி வணங்குவார்கள்.

திருப்பாவை பாடிய ஆண்டாள் ஒரு இளம் பெண். சிறு பருவத்தில் தகப்பனாருடன் கோயில் தொண்டுகளில் ஈடுபட்டிருந்தார். தகப்பன் ஒரு விஷ்ணு பக்தன். வைஷ்ணவ பக்தர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்படுவார்கள். ஸ்ரீ வில்லி புத்தூரில் பெரிய ஆழ்வார் ஸ்ரீ கண்ணபிரானுக்கு பூ மாலைகள் கட்டுவார். மகள் அவருக்கு வேண்டிய உதவிகள் செய்து வந்தார். ஒரு நாள் பெரிய ஆழ்வார் சுவாமிக்குச் சூட்டிய பூ மாலையில் தலை மயிர் ஒன்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார். அவருக்கு ஐயம் தோன்றியது. அடுத்த நாள் பூ மாலை கட்டி வீட்டின் அறையில் வைத்தார். சிறிது கவனித்தார். தனது சிறு மகள் பூ மாலையை அணிந்து கண்ணாடியில் பார்த்து ஆனந்தப்படுவதை அவரால் பொறுக்க முடியவில்லை. மகளைக் கண்டித்தார். பூ மாலை கட்ட உதவ வேண்டாம் என்றார். தான் தனிய மாலை கட்டினார். சுவாமிக்கு அணிந்தார். அன்று இரவு கனவு கண்டார். அவருடைய மாலையை சுவாமி சூடவில்லை, மகள் கட்டும் மாலை சூடுவதில் பெருமான் விருப்பம் இருந்தது. அவள் சூடியபின் அனுப்பிய மாலை கண்ண பிரானுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆண்டாளைச் சூடிக் கொடுத்த நாச்சியார் எனவும் அழைப்பார்கள். திருப்பாவை காப்புச் செய்யுளில் இந்தக் குறிப்பைக் காணலாம்.

வைஷ்ணவ நெறியை வளர்த்தவர்கள் ஆழ்வார்கள். பொய்கை ஆழ்வார் முதல் பன்னிருவரும் சிறந்த விஷ்ணு அடியவர்கள். அவர்களுடைய பாடல்கள், 'நாலாயிரத்திவ் வியப் பிரபந்தம்' எனப்படும். இதனைத் தொகுத்தவர் நாத முனிவர். ஆண்டாள் கன்னிப் பெண்ணாகக் கண்ணன் காதலால் உள்ளம் உருகியவர். அவர் பாடிய பாடல்கள் கண்ணன் பெருமைகளைக் கூறும் திருப்பாவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46

## ஸ்ரீ ஆதிசங்கரர்

"பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் இந்துக்கள் போற்றும் ஒரு அவதார புருஷர். வேதங்கள், உபநிஷதங்கள், புராணங்கள் கூறிய அறிவுரைகளின் பயனை உலகத்துக்குக் கொடுத்தவர். இந்தியாவிலுள்ள இந்து மதப் பிரிவுகளையும், சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், குமாரம், சௌரம் என ஆறாக வகுத்து நிறுவியவர். கால்நடையாக கன்னியாகுமரியிலிருந்து இமயமலை வரை உள்ள இந்துக் கோயில்களைத் தரிசித்தவர். பதினாறு வயதுக்கிடையில் தமது எல்லா நூல்களையும் எழுதி முடித்த ஒரு அவதார புருஷன்" என சுவாமி விவேகானந்தரால் பாராட்டப்பட்ட பெரியவர்.

'ஆதிசங்கரர் தென் இந்தியாவிலுள்ள கேரளத்தில் கல்லடியில் கி. பி. 788 வரையில் பிறந்தார்', எனக் கூறுவர். 'சிவபக்தி நிறைந்த பிராமணக் குடும்பம், சக்தி வணக்கம் உள்ள குடும்பம்' எனப் பலவாறு சொல்லுகிறார்கள். சிறு வயதில் வேத சாஸ்திரங்கள் படித்தார். உலக அறிவு வரமுன் துறவியாயினார். தாயாருடைய மரணம் நெருங்கும் நேரத்தில் மீண்டும் வருவதாக கூறி வீட்டை விட்டுப் புறப்பட்டார். வட இந்தியாவில் உள்ள நர்மதா நதிக் கரையில் தமது குருநாதரைச் சந்தித்தார். குருவினுடைய பெயர் கோவிந்த பகவத்பாதர். அத்வைத வேதாந்தத்தை நிறுவுவதாகக் கூறிக் காசிக்குச் சென்றார். பல பண்டிதர்களுடன் கலந்து பேசினார். மிகவும் வல்லமையால் பலரை வென்று தமது கொள்கைகளை நிறுவினார். பல சீடர்கள் சேர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் பத்திரிநாத் முதல் பிரயாகை, ஹரித்துவாரம், ஸ்ரீ நகர், இருஷிகேசம், கௌமுகி முதலிய இடங்களையும் தரிசித்தார். பல இடங்களில் ஆசிரமங்களை நிறுவினார். உபநிஷதங்கள், கீதை, பிரம்ம சூத்திரம் முதலிய நூல்களுக்கு உரை எழுதினார். தெற்கில் சிருங்கேரி மடமும், மேற்கில் துவாரகையில் சாரதா மடமும், வடக்கில் பத்திராகாசிரமும், கிழக்கில் கோவர்த்தன மடமும் நிறுவினார். உருவ வணக்க முறைகளையும் வற்புறுத்தி வந்தார். ஒவ்வொரு மடத்துக்கும் ஒவ்வொரு வேதங்களையும் வகுத்து ஒவ்வொரு தெய்வங்களுக்கும் உரிய வணக்க முறைகளையும் இந்துக்களுக்கு வேண்டிய பல ஒழுக்க முறைகளையும் வகுத்து உதவினார். தாயாருக்குக் கொடுத்த வாக்கின்படி அவரது மரணக் கிரியைகளையும் செய்து முடித்து தனது முப்பத்திரண்டாவது வயதில் சமாதி அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

இந்தியாவில் பல வளங்களும் கொண்ட நாடு வங்காளம். அங்கு 'கமார்ப்புகூர்' என்னும் ஒரு கிராமம் உண்டு. ஸ்ரீ இராமபிரானிடத்தில் பக்தியுள்ள பிராமணர் குதிராம் சட்டோபாத்தியாயர். பொய் சொல்லத் தெரியாதவர். கள்ளம், கபடுகள் இல்லாதவர். அவருடைய மனைவி பெயர் சந்திரமணிதேவி. அழகு, பொறுமை, நேர்மை யுள்ள உத்தமி. இந்த இருவருக்கும் பிள்ளையாக ஸ்ரீ இராம கிருஷ்ணர் 1836 இல் அவதரித்தார். காயாவி லுள்ள கதாதரக் கடவுள் திருவருள் பெற்ற குழந்தை யாதலின் பெற்றோர் 'கதாதரர்' எனப் பெயர் வைத்தனர். கதாதரர் ஓர் அழகிய நல்ல குழந்தையாக வளர்ந்தார். அவர் படிக்க விரும்பவில்லை. கடவுள் சிந்தனையிலும், பூசைகளிலும், களிமண்ணில் விக்கிரகம் செய்வதிலும் அவரது நேரம் கழிந்தது.

ஒரு சிவராத்திரியின் பொழுது ஊரில் ஒரு நாடகம் நடந்தது. கதாதரர் சிவனாக நடித்தார். தன்னை மறந்து தியானத்தில் இருந்தார். மக்கள் அவரில் சிவனைக் கண்டனர். இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் பல பகுதிகளைப் படித்தார். மிகவும் இனிமையாகப் பக்திப் பாடல்களைப் பாடுவார். தட்சணேஸ்வரத்தில் இராசமணி அம்மையாருடைய காளிகோவிலில் தமையனுடன் பூஜைக்கு உதவியாக இருந்தார். காளிதேவிக்கு முன் தியானத்தில் இருப்பார். "அம்மா! எனக்கு முன் வாராயா?" என அழுவார். கண்டவர்கள் பைத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனர். காளி தேவியைக் கண்டார். தேவியுடன் கதைத்தார். பரவசமானார். அவருடைய வாழ்வு முழுவதும் காளியின் தரிசனமும் கிடைத்தது. பல அடியார்கள் அவரைத் தேடி வந்தனர். நரேந்திரன் என்ற இளைஞன் " கடவுளைக் கண்டீர்களா ? " என்று கேட்டவுடன் ' ஆம் ' என்றதுடன், ' உமக்கும் காட்டுவேன் ' என்றார். இந்த இளைஞன், சுவாமி விவேகானந்தர் என்ற பெயருடன் அவருடைய எண்ணங்களை உலகில் பரப்பினார்.

ஆங்கிலம் கற்ற பல இளைஞர்கள், ஸ்ரீ இராம கிருஷ்ணரிடம் வந்து சேர்ந்தனர். மிகவும் திறமைசாலிகளாகவும், அறிவாளிகளாகவும் சுவாமி விவேகானந்தரைப் போல குரு பக்தி உள்ளவர்களாகவும் விளங்கினர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து, ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் அமைத்தனர். " துறவு பூண்டு சேவை செய்வது மனிதனுடைய ஒரு கடமை " என்ற கொள்கையை உலகில் பரப்பினர். ஸ்ரீ இராமகிருஷ்ணர் 1886 இல் சமாதி அடைந்தார். சுவாமி விவேகானந்தரும், அவருக்குப் பின் சாரதா தேவியாரும் இளம் துறவிகளுக்கு நல்ல வழிகாட்டியானார்கள். எல்லோரும் இராம கிருஷ்ணரை 'குரு மகாராஜ்' என வணங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48
## சாரதாமணி தேவியார்

காளி தேவியை நேரில் கண்ட ஸ்ரீ இராம கிருஷ்ணர், காளி தேவியை நினைத்து, நினைத்து 'அம்மா' என அழுவார். அவருக்குப் பைத்தியம் என வைத்தால், பேசினர். அவருக்குக் கலியாணம் செய்து வைத்தால், 'பைத்தியம்' மாறிவிடும் என்றனர். பல இடங்களிலும் பெண் பார்த்தனர். ஈற்றில் ஐந்து வயதுப் பெண்ணான சாரதாமணியைக் கண்டனர். ஸ்ரீ இராம கிருஷ்ணருக்கு வயது இருபத்து மூன்று. சாரதாமணி அவருக்கு மாலை இட்டனர்.

வங்காளத்தில் ஜெயராம்பட்டிக் கிராமத்தில் இராமச்சந்திர முக்கர்ஜி என்று ஒரு பிராமணர் இருந்தார். அவருடைய மனைவி பெயர் சீயாமசுந்தரி. இருவரும் நல்லவர்கள். அம்பாள் ஒரு சிறு குழந்தையாகத் தங்களிடம் வருவதாக ஒரு முறை கனவு கண்டார்கள். 1853 ஆம் ஆண்டு சாரதாமணி அவர்களுக்குக் குழந்தை யாகப் பிறந்தார். ஜெயராம்பட்டிக்கு அருகில் உள்ள கிராமம் கமார்ப்புகூர். அங்குள்ள ஒரு கோயிலில் சாரதாமணி தேவியார் ஸ்ரீ இராமகிருஷ்ணரைச் சந்தித் தார். குழந்தையாக இருந்தும் சாரதாமணி ஸ்ரீ இராம கிருஷ்ணரை விரும்பினார்.

சாரதாமணியின் பெற்றோர் பணக்காரர் அல்லர். ஆயினும் நல்ல திருப்தியாக வாழ்ந்தவர்கள். அவர் களுடைய குழந்தையான சாரதா நல்ல பெண்ணாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தாள். அம்மாவுக்கு வீட்டு வேலைகளிலும், அப்பாவுக்கு வயலிலும் உதவியாக இருந்தாள். ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கும் சாரதாவுக்கும் 1859 இல் கலியாணம் நடந்தது. அதன் பிறகு 1872 இல் அவர்கள் தட்சணேஸ்வர ஆலயத்தில் சந்தித்தார்கள். " தெய்வீக வாழ்வா ; உலக வாழ்வா ; எது வேண்டும் " என்று கேட்கும் ஒரு பெரிய ஞானியைத் தமது கணவராகக் கண்டார். ஸ்ரீ இராமகிருஷ்ணரும் அம்மையாரில் தாம் வணங்கும் காளிதேவியைக் கண்டார். இருவரும் இல்லறம் நடத்தினர். ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஒருமுறை அன்னையாரை அம்பாளாக வணங்கினார். சாரதா தேவியாரும் அன்று தொடக்கம் தெய்வீக சக்தி பெற்றார். ஸ்ரீ இராமகிருஷ்ணருக்குப் பணிசெய்து வாழ்ந்தார்.

இருவரும் லௌகீக வாழ்வை நீக்கி வாழ்ந்தனர். ஸ்ரீ இராம கிருஷ்ணரின் சமாதிக்குப் பின் 1886 இல் இருந்து அவருடைய சிஷ்யர்களுக்கு அன்னை ஆயினார். இந்தியாவிலும் மேல் நாடுகளிலும் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் வளரத் தொண்டுகள் செய்தார். அவரை, " இனிமையின் உருவமென்று " மேல் நாட்டு சிஷ்யை, நிவேதிதா அம்மையார் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49
## சுவாமி விவேகானந்தர்

அமெரிக்காவில் சர்வ சமய மகாநாடு 1893 இல் நடந்தது. ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் அந்த மகா நாட்டு மண்டபத்தில் கூடி இருந்தனர். கிறிஸ்து சமயத்தைச் சார்ந்த போதகர்களும், புத்த சமய பிக்குகளும் இருந்த அந்தச் சபையில் ஒரு இந்து சந்நியாசியும் இருந்தார். அவர்களில் அறுபது பேர்வரை அந்த மேடையில் காணப்பட்டனர். தங்களுடைய சமயங்களை எடுத்துக் கூறினர். உலகத்தில் இவ்விதமான மகாநாடுகள் நடப்பது குறைவு. ஆனபடியால் மகாநாட்டில் இருந்தவர்கள் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டனர். அப்பொழுது மஞ்சள் நிறத் தலைப்பாகையும், மஞ்சள் நிறமான அங்கியும் அணிந்து, மேடையில் வீற்றிருந்த இந்து சந்நியாசி எழுந்தார். அவர் ஒரு அழகான வட்ட முகமுடைய இளைஞர். முகத்தில் ஒளி வீசியது. மேடையில் கம்பீரமாக நின்றார். கண்களைச் சிறிது மூடித் தியானித்தார். "அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே! " என்ற வீரமுழக்கம் கேட்டது. சபையோரின் கைதட்டுதல் ஓயவில்லை.

வங்காளத்திலே உள்ள கல்கத்தா நகரில் விசுவநாத தத்தருக்குக் குழந்தையாக 1863 இல் பிறந்த 'நரேந்திரன்' தான் இந்த இளைஞன் என்பது அப்பொழுது பலருக்குத் தெரியாது. காசிவிஸ்வநாதருடைய அருளினால் பிறந்த 'நரேன்' மிகவும் அழகும் நற்குணங்களும் உடையவர். அவர் உற்சாகம் மிகுந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் வயதில் நன்றாகப் படித்து, பலவித விளையாட்டு களும் பழகினார். இரக்கமுள்ள மனம் உடையவராய், உண்மை பேசுபவராய், விளங்கினார். தட்சணேஸ்வரம் காளி கோவிலில் இராமகிருஷ்ணர் என்ற முனிவரைக் கண்டார். அவர் "கடவுளைக் கண்டதாகவும் மற்றவர் களுக்கும் காட்ட முடியும்" என்றும் கூறினார். நரேன் ஸ்ரீ இராம கிருஷ்ணருடைய அன்பையும் பெற்றார். படிப்பையும் குடும்பத்தையும் விட்டுத் துறவியானார்.

ஸ்ரீ இராம கிருஷ்ணருக்கு காளி அருள் கிடைத்தது. நரேந்திரனிடத்தில் பேரன்பு கொண்ட குருநாதர், தமது ஞானத்தையும், திருவருளையும் கொடுத்து, அவரைச் சுவாமி விவேகானந்தர் ஆக்கினார். 1886 இல் குரு மகாராஜ் சமாதி அடைந்ததும், அவருடைய சிஷ்யர்கள் துறவிகளாகி இந்து சமயத்தை உலகெங்கும் பரப்பினர். அதற்கு உதவியாக அமெரிக்க மகாநாடு விளங்கியது. சுவாமிகள், இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார். ஸ்ரீ இந்திய நாட்டையும், இந்தியாவின் பெருமைகளையும், பழமையான சனாதன தர்மத்தையும் உலகில் பரப்ப ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் சுவாமிகளால் உண்டாக்கப் பட்டது. பல இளம் தொண்டர்களின் உதவியுடன் சங்கத்தை வளர்த்து 1902 இல் சுவாமிகள் சமாதி அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50

## தியாகராஜ சுவாமிகள்

தியாகராஜ சுவாமிகள் தென் இந்தியாவிலுள்ள திருவாரூரில் 1767 ஆம் ஆண்டில் பிறந்தார். தகப்பனார் இராமப்பிரம்மம், வடமொழியிலும் தெலுங்கிலும் புலமை பெற்றவர். தாயார் பெயர் சீதம்மாள். எல்லோரும் தினமும் இராமாயணப் பாடல்களைப் படித்து மகிழ்வார்கள். தந்தை, தாயாருடன் சேர்ந்து தியாகராஜரும் பாடுவார். அரசனுடைய சபையில் வடமொழியிலும் தெலுங்கிலும் பாடிய சிறுவனை எல்லோரும் பாராட்டினர். அரச சபை வித்துவானும் தமது சீடனாக அவரை ஏற்றுக்கொண்டு மகிழ்ந்தார். சிறு வயதில் அவர் இயற்றிய ராமநாத கீர்த்தனைகளைக் கேட்டு எல்லோரும் அதிசயித்தனர். 'நமோ - நமோ - ராகவய்யா' என்றது முதல் கீர்த்தனை. கீர்த்தனை. பின் அவர் ' தசரதகுமார ', 'நான் உன் அடிமை ', 'உன்னையே தேடுகின்றேன். ' உனக்கே நான் அடைக்கலம் ' எனவும் பாடி இசை மன்னர் ஆயினர்.

ஓர் ஆண்டிலேயே குரு, வேங்கடரமணய்யாவுக்குத் தெரிந்தவற்றை எல்லாம் கற்றார். குல வழக்கப்படி விவாகம் நடந்தது. ஆனால், தியாகராஜருடைய காதல் இராமனிடத்திலும், இசை இடத்தும் வளர்ந்தது. நாத வடிவினனான இறைவனை வணங்கிப் பல இசை ஏடுகள் பெற்றுப் படித்தார். புதுக்கோட்டை அரசர் முன்னிலையில் பல இசை மன்னர்கள் மெச்சும்படி பாடி உள்ளார். சங்கீத வன்மையால், ' ஜோதீஸ்வரூபினி' ராகம்பாடி விளக்கு எரியச் செய்தார். பக்தியுடன் இசை வளர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பது சுவாமிகளுடைய கருத்தாகும். தந்தையார் இராமப்பிரம்மமும் இறந்தார். காஞ்சிபுரம் ஹரிதாஸ் சுவாமிகளும் சந்தித்து, இராமநாமத்துடன் இசையைப் பரப்பி வந்தார்கள். "ஓம் இராமாய நம" என்ற நாமத்துடன் பிச்சை ஏற்று வாழ்ந்து வந்தார்கள். மாணவர்கள் வந்து சேர்ந்தனர்.

வடமொழியிலும் தெலுங்கிலும் சுவாமிகள் பாடுவதை மாணவர்கள் கேட்டு, பல்லவி, அநுபல்லவி, சரணம் எனக் குறித்து வந்தார்கள். தியாகராஜ சுவாமிகளுடைய பாடல்களை மெய்மறந்து, பல மணி நேரம் சங்கீத வித்வான்களும் கேட்பதுண்டு. சரபோஜி மன்னர், சுவாமிகளை மிகவும் மதித்தார். ஆனால், அவருக்கோ இராமனைவிட, மன்னரை மதிக்க முடியவில்லை. சிறிது காலம் ஆத்திரமடைந்த பின்னர், உண்மையை உணர்ந்த சரபோஜி மன்னர், சுவாமிகளை வணங்கினார். பொன்னையும் மன்னரையும் மதிக்காமல் இராமனைப் பாடியபடி திருவையாற்றில் துறவு பூண்டு பின் சமாதியானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51

# இராமலிங்க அடிகள்

“ அருட் பெருஞ் சோதி, தனிப் பெருங்கருணை ” என்று அழுது, அழுது கடவுளை வணங்கிய பெருமகன் இராமலிங்க அடிகள். திருஅருட்பிரகாச வள்ளலார் இந்தியாவிலுள்ள சிதம்பரம் என்னும் பெருங்கோயிலுக்கு அருகிலுள்ள மருதூரில் 5.10.1823 இல் பிறந்தார். தந்தையார் பெயர் இராமையாபிள்ளை. தாயார் பெயர் சின்னம்மையார். அக்காலத்தில் சென்னையில் சிறந்த தமிழ்ப் புலவர்கள் பலர் இருந்தனர். இராமலிங்கம் அவர்களிடம் பல தமிழ் நூல்களைக் கற்றார். நிலைக் கண்ணாடியில் முருகன் திரு உருவைக் கண்டபின், தனித்திருந்து, தாமே பல நூல்களையும் படித்தார். சிறு வயதில் இருந்து சுவாமிகளிடத்தில் பல நல்ல குணங்கள் தோன்றின.

ஐந்தாம் மாதத்தில், தில்லை நடராசர் முன், அவர் புன்முறுவல் பூத்தபோது, அவரில் அருட்சோதியைக் கண்டார்கள். ஒன்பது வயதிலே அவருக்கு முருகன் அருள் கிடைத்தது. திருவொற்றியூரில், ‘ எழுந்தருளும் பெருமான் மாலை ’. ‘ வடிவுடை மாணிக்க மாலை ’, என்னும் பாடல்கள் பாடினார். பின்னர், ‘ மனுமுறை கண்ட வாசகம் ’, ‘ சீவகாருண்ய ஒழுக்கம் ’ என்ற நூல்கள் வெளி வந்தன. “ மூன்றாம் வயதில் ” உமையம்மையாரால் பால் ஊட்டப்பட்டுத் “ தோடுடைய செவியன் ” பாடிய திரு ஞானசம்பந்த சுவாமிகளைத் தமது குருவாகக் கொண்டார். மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகம், திரு வள்ளுவர் எழுதிய திருக்குறள், திருமூலர் பாடிய திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் போன்ற நூல்களைக் கற்று மகிழ்ந்தார். சென்னையில் ஒரு புராணச் சொற்பொழிவில் " உலகெல்லாம் " என்ற சொல்லுக்கு நான்கு மணித் தியாலம் விளக்கமளித்தது கண்டு பலரும் போற்றினர்.

அடிகளார் திருமணம் செய்துகொண்டார். இல்லற வாழ்விலும் கடவுள் வழிபாட்டில் மிகவும் பற்றுடையவர். உயிர்களிடத்து அன்பும் இரக்கமும் உள்ளவர். உண்மையில் நம்பிக்கை உள்ளவர். சாதி, சமயம், இனம் என்பவற்றில் நம்பிக்கை இல்லாதவர். கடவுளை 'அருட் சோதி', உருவமாகக் கண்டவர். அவர் " சமரச சுத்த சன்மார்க்க சங்கம் " நிறுவினார். அதன் மூலமாகத் தரும நெறிகளைப் பரப்பினார். " சத்திய தருமசாலை " என்பதன் மூலமாகக் கணக்கற்ற மக்களுக்கு உணவு கொடுத்து வந்தார். வடலூரில் " சத்திய ஞான சபை "யை நிறுவி அருட்சோதி வழிபாட்டை வளர்த்தார். " கடவுள் ஒருவர் உண்டு, அவர் சோதி உருவானவர் " எனக் கூறுவார். அவருடைய பாடல்கள் திருவாசகம் போல மிகவும் இனிமையானவை. " அருட்பெருஞ்சோதி அகவல் " ஒரு பெரும் ஞானப் புதையல். "நால்வர் அருள் மாலை" அவருடைய தேவார திருவாசக அன்புக்கு ஒரு சாட்சி. அவருடைய கீர்த்தனைகளும் இசை உலகுக்கு ஏற்றன. தமிழ் மொழியும் சைவமும் வளர, இராமலிங்க அடிகள் வாழ்ந்தார். அவர் 31.1.1874 இல் இறைவன் அடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

திருவண்ணாமலை ஒரு புண்ணிய பூமி. பிரம்மாவும் விட்டுணுவும் அடியும் முடியுமு தேடிய இடமாகும். இந்தத் தலத்தில் பலர் மேலான நிலை அடைந்தார்கள். இருப தாம் நூற்றாண்டில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளும் திருவண்ணாமலையில் பெரும் ஞான ஒளியாக விளங்கி னார். அவருடைய பெயருடன் ஸ்ரீ ரமணாச்சிரமம் இன்றும் இருக்கிறது. பல அடியார்கள் இன்றும் அங்கு இருக்கிறார்கள்.

மதுரைக்கு அருகில் உள்ள கிராமம் ' திருச்சுழியல் '. அங்கு சுந்தரம் ஐயர் வக்கீலாக இருந்தார். அவருடைய தர்மபத்தினி அழகம்மையார். அவர்களுக்கு வெங்கட ராமன் 1879 இல் பிறந்தார். ராமன், என்ற பெயர் ' ரமணன் ' எனவும் சொல்லப்பட்டது. சிறு வயதில் ஓரளவு கல்வி பெற்றார். திருவண்ணாமலையில், ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயில் இருப்பதையும் அறிந் தார். வயது பதினாறு இருக்கும். ஒருநாள் இவருக்கு ' மரண பயம் ' வந்தது. தியானத்தில் இருந்தார். ' உடம்பு வேறு, ஆத்மா வேறு ' என்ற எண்ணம் உதித்தது. ' நான் யார் ? ' என்று ஆலோசித்தபடி திருவண்ணாமலை நோக்கிப் புறப்பட்டார். வீட்டாருக்குத் தமது நிலைமை களையும் விளக்கினார்.

திருவண்ணாமலையில் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயி லுக்குப் போனார். தலைமயிரை நீக்கி, பூணூலையும் துணிகளையும் களைந்தார். கௌபீனத்துடன் கோயிலுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள், தியானத்தில் அமர்ந்தார். மௌன விரதம் பூண்டு, வைராக்கியத்துடன் தவஞ் செய்த இளைஞரைப் பலரும் கண்டனர். சிலர் உணவும் கொடுத்தனர். திருவண்ணா மலையிலுள்ள பல குகைகளிலும் இருந்து, கடும் தவம் செய்தார். " அவரவர் வினைப்படி எல்லாம் நடக்கும் " என்று கூறி மகரிஷிகள் மௌனம் பூண்டார். "நான் யார் ?", "ரமணமாலை" என்ற நூல்கள் இக்காலத்தில் தோற்றியதாகக் கூறுவர். ஸ்ரீ ரமண மகரிஷிகளைச் சுற்றி ஒரு ஆச்சிரமம் வளர்ந்தது. தாயாரும் ரமணாச் சிரமத்தில் வாழ்ந்து சமாதியாயினர். மேனாடுகளிலிருந்து பல சிஷ்யர்கள் வந்தனர்.

ஆத்மசக்தி நிரம்பிய இந்த மகான் ஸ்ரீ ரமணாஸ் ரமத்தில் இருந்தார். அடியார்கள் கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழி கூறுவார். மௌனமாகப் பார்வையால் திரு வருள் கொடுக்கும் இந்த மகரிஷி முன் எல்லோரும் சாந்தி கண்டனர். அவருடைய பெயரால் ரமணகீதை, உள்ளது நாற்பது போல பல உபதேசங்களும், மொழிபெயர்ப்பு களும் அவருடைய சரித்திரங்களும் வெளிவந்துள்ளன. ஸ்ரீ ரமண மகரிஷிகள் 1950 இல் மகா சமாதி அடைந் தனர். திருவண்ணாமலை ஜோதிலிங்கத்துள் மறைந்த ஞான ஒளியாகப் பகவான் இன்றும் விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53

# ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர்

இராமாயணக் காலங்களிலிருந்து இலங்கையில் இந்துக்கள் வாழ்கிறார்கள். இந்துக்களில் பெரும்பாலானோர் தமிழர்கள். முன்னேஸ்வரம், திருக்கோணமலை, திருக்கேதீஸ்வரம், கதிர்காமம், சிவனொளிபாதமலை ஆகியன இந்துக்களுக்கு முக்கியமான இடங்களாகும். ஐரோப்பியரின் வருகைக்குப் பின் கிறிஸ்தவ மதமும் இலங்கையில் பரவியது.

போர்த்துக்கேசர், ஒல்லாந்தர் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பப் பெரிதும் முயன்றனர். நாட்டில் ஐரோப்பிய பழக்க வழக்கங்களைப் புகுத்தினர். கோயில்களை இடித்தும், மக்களை மதம் மாற்றியும், புத்த சமயத்தையும் இந்து சமயத்தையும் அழிக்க முயன்றனர். ஆங்கில ஆட்சியில் ஆங்கிலக் கல்வியையும், கிறிஸ்தவ சமயத்தையும் வளர்க்க உதவியாய் இருந்தது. அந்த நேரத்தில் 1822 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் தோற்றினார். அவர் ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்றார். இந்து மத நூல்களையும் படித்துப் பெரும் பண்டிதரானார். பார்சிவல் பாதிரியாருடைய வேண்டுகோட்படி பைபிளைத் தமிழில் எழுதினார். அப்பொழுது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். பின் இந்தியா சென்றார். பல புலவர்களுடன் பழகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய பேச்சு வன்மையை அறிந்து திருவாவடுதுறை ஆதீனம், அவருக்கு ' நாவலர் ' என்ற பட்டம் கொடுத்தது.

இந்தியாவிலும், இலங்கையிலும் சைவ சமயத்தையும் தமிழையும் வளர்த்த ஆறுமுக நாவலர் நன்கு மதிக்கப் பட்டார். சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினார். அச்சு இயந்திர சாலைகள் அமைத்து பல நூல்களைத் தமிழில் அச்சடித்தார். பழைய நூல்களைப் புதுப்பித்தும், புது நூல்கள் எழுதியும் பல பிரசங்கங்கள் செய்தும் தமிழ்த் தொண்டு செய்தார். விவாகம் செய்யாமலே வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு ஆற்றினார். வசன நடைக்கு அவரே தந்தை என்பர். யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் சைவத்தையும் தமிழையும் நன்கு பாதுகாத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54

# திருவள்ளுவர்

திருவள்ளுவர் திருக்குறள் என்னும் நூலை எழுதினார். உலகத்திலுள்ள சிறந்த நூல்களில் திருக்குறளும் ஒன்று. அதனால் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு," என்று பாரதியார் பாடி உள்ளார்.

திருவள்ளுவருடைய பாடல்கள் இரண்டு வரிகள். மிகவும் ஆழமான பொருள் உள்ளவை. சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்வரை படிக்கலாம். அறம், பொருள், இன்பம் என்ற மூன்று வாழும் முறைகளைக் கூறுவன. அறம் என்றால் இல்லறம், துறவறம் என இரண்டு. இல்லறம் என்பது கணவன் மனைவி வாழ்வு. துறவறம் என்பது கடவுளை நம்பிய வாழ்வு. வாழ்க்கைக்குப் பொருள் தேடுவது எப்படி எனவும், திருக்குறள் கூறும். மனிதன் இன்பமாக வாழும் வழிகள், அரசு எப்படி இருத்தல் வேண்டும், மந்திரிகள் எப்படி நடக்க வேண்டும், ஆண்கள், பெண்கள் இருக்க வேண்டிய நிலை, பிள்ளைகள் வளரும் முறை, எல்லாம் திருக்குறளில் உண்டு. திருவள்ளுவரின் கருத்துக்களை எல்லாச் சமயத்தவரும் போற்றுவர்.

திருவள்ளுவரின் மனைவி பெயர் வாசுகி. அவள் சிறந்த ஒழுக்கம் உள்ளவள். கணவன் சொல்லுக் கேட்ப வள். திருவள்ளுவரும் வாசுகியும் சிறந்த வாழ்க்கை வாழ்ந்தனர். திருவள்ளுவர் 'நெசவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மையையும் உழவையும் விரும்பினார் ' என்றுங் கூறுவர். அவருக்கு ஏலேலசிங்கன் என்ற ஒரு பிரபுவும் நண்பராய் இருந்தார். அவருடைய பல கதைகளையும் கூறும் நூல்கள் கபிலர் அகவல், திருவள்ளுவ மாலை என்பனவாகும். திருவள்ளுவரின் மனைவி இறந்த பொழுது அவர் மிகவும் வருந்தினாராம். " அடிசிற்கு இனியாளே, அன்புடையாளே, படி சொல்தவறாத பாவாய், அடிவருடிப் பின்தூங்கி முன் எழும் பெண்ணே, எப்படி நான் இரவு நித்திரை செய்வேன் " என அவர் கூறியதாக ஒரு பாடல் உண்டு. பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு உண்டு. தமிழ் வேதம், பொய்யா மொழி, தெய்வ நூல், பொதுமறை எனப் பல பெயர்கள் கூறுவர். திருக்குறளின் சிறப்பால் திருவள்ளுவர் உலகப் புகழ் பெற்றார். தமிழும் தமிழர்களும் பெரும் சிறப்புப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 55

# ஔவையார்

ஔவைக் கிழவி பழங்கிழவி. தமிழை நன்கு அறிந்த ஒரு சிறந்த பெண். மிக இளமையாக இருக்கும் பொழுது பிள்ளையாரை வணங்கி முதுமையை பெற்றார். " பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் நான் தருகிறேன். எனக்கு இயல், இசை, நாடகம் என மூன்று தமிழையும் தா " என விநாயகரை வணங்கினார். தமிழில் சிறந்த அறிவு பெற்றவர். தமிழ் அறிந்த கிழவியாக ஊர் எல்லாம் சென்று பாடித்திரிந்தார். தமிழ் நாட்டில் ஒன்றுக்கு மேலும் ' ஔவை ' கள் இருந்தார்கள். ஔவையார் "கூழ் உணவைக் குடித்து மக்களை வாழ்த்தினார் " எனக் கூறுவர். ஔவையாரை சேரன், சோழன், பாண்டியன் என்ற மூன்று தமிழ் மன்னர்களும் வாழ்த்தினர். அவர் மிகவும் பண்பும் கடவுள் மேல் அன்பும் கொண்ட உத்தமி. முருகன் இடத்திலும் மிகவும் அன்பு உள்ளவர். முருகனையும் பிள்ளையாரையும் வணங்கிப் பல பாடல்களும் பாடி உள்ளார். ஆத்திசூடி, நல்வழி, கொன்றை வேந்தன், மூதுரை என்பன ஔவையாருடைய பாடல்கள்.

ஔவையாருடைய ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஒரு வரிப் பாடல், சிறந்த அறிவு தரும் பல பாடல்களும் உண்டு. ' தருமம் செய்ய நீ ஆசைப்படு ' என்ற கருத்தில் ' அறஞ்செய விரும்பு ' என்றார். இப்படி நூறுக்கு மேலான சிறு பாடல்கள் உள்ளன. உலகம் உள்ளவரை அவர் பாடல்கள் இருக்கும். அம்பாளின் வடிவமாகத் தமிழ் நாட்டில் உலாவினார். ' இளமையிற் கல் ' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' தந்தை தாய் பேண், நன்றி மறவேல், வஞ்சகம் பேசேல். தெய்வம் இகழேல், நூல் பல கல், நெற் பயிர் விளை ' இங்ஙனம் அவரின் அருள் மொழிகள் கருத்துச் செறிந்தவை.

ஔவையாருடைய நாலு வரிப் பாடல்களை நல்வழி, மூதுரை எனக் கூறுவார்கள். ' சாதி இரண்டு தான் ' எனவும், ' உழுது உணவைத் தேடு ' எனவும் ' சிவாயநம ' என வணங்கு, ' கடவுள் செயல்தான் நடக்கும், பயப்படாதீர்கள் ', எனவும் கூறிய ஔவைக் கிழவியும் பயப்படாதவர். ' படிக்காத பிள்ளை, அயல் வீட்டுப் பகைமை, செலவான மனைவி, அட்டமத்துச் சனி போலக் கேடுள்ளவை" என்று கூறுவார். அன்புடன் உபசரித்து வழங்கப்படாத விருந்து நஞ்சு போன்றது, இவை போன்ற நல்ல கருத்து உள்ள பாடல்களை ஔவையார் பாடி உள்ளார்.

தமிழ் மொழி சிறக்கப் பாடிய ஔவையாரைத் தமிழ் மன்னர்கள் வணங்கினர். அதிகமான் சாகாமல் காக்கும் நெல்லிக்கனியை வழங்கினார். பாரி மன்னன் மாரி போலப் பணம் கொடுத்தான். முருகனும் ஔவையாருக்கு நாவற்பழம் கொடுத்து விளையாடினாராம். அவருடைய கேள்விக்கு மறு மொழியாக ஔவையார் பாடியதாகக் கதைகள் உண்டு. அவற்றிலும் பல அறிவுரைகளை ஔவையார் வழங்கி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 56

# இராசராச சோழன்

இந்தியாவின் தென் பகுதியில் சேரர், சோழர், பாண்டிய மன்னர்கள் தமிழையும் சைவ சமயத்தையும் வளர்த்தவர்கள். வட இந்திய மன்னர்களையும் அயல் நாட்டு மன்னர்களையும் போரில் வென்று, பெரிய இராச்சியம் நடத்தி உள்ளனர். அவர்களுடைய கப்பல்கள் கடல் கடந்து போய் வியாபாரம் செய்தும் தமிழையும் சைவத்தையும் பரப்பியும் தேசங்களைக் கைப்பற்றியும் இருக்கின்றன. ஒரு ஆயிரம் வருடங்களுக்கு முன் அத்தகைய இராச்சியம் நடத்திய பெருமன்னருள் சிறந்தவன் இராசராச சோழன்.

இராசராச சோழன் தந்தையான பராந்தகச் சோழனுக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் ஆதித்த கரிகாலன், அருள்மொழி வர்மன், குந்தவை என அழைக்கப்பட்டார்கள். ஆதித்த கரிகாலன் பெரும் வீரன். பல யுத்தங்களில் பாண்டிய மன்னர்களை வென்றான். அவன் இள வயதில் இறந்தான். அருள்மொழி வர்மன் இளவரசன் ஆயினான். சிறு வயதில் கடலில் தவறியபோது, காப்பாற்றப்பட்டமையால், 'பொன்னியின் செல்வன்', எனவும் அழைக்கப்பட்டான். தமையனுடன் சேர்ந்து பாண்டியப் படைகளை வென்றான். பின் இலங்கை மீது படை எடுத்துச் சென்றான். சகோதரி குந்தவையின் காதலனான வந்தியத் தேவனுடன் இலங்கையில் படை நடத்திப் பல வெற்றிகள் பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசன் மகிந்தனை வென்றான். பெரிய கப்பல் படையுடன் இலங்கை சென்றான். மகிந்தனைக் கொல்லக்கூடிய வசதிகள் இருந்தும் கொல்லாமல், தப்பி ஓடவிட்ட பெருந்தன்மையை எதிரிகளும் மெச்சினர். பராந்தகச் சோழன் இறந்தான். பெரியவர்களுடைய ஆலோசனைப்படி சிறிய தகப்பன் உத்தமச் சோழன் அரசனானான். அவன் இறந்த பின் இராசராச சோழன் முறைப்படி சிங்காசனம் ஏறினான். தஞ்சாவூரைத் தலை நகராகக் கொண்டு பல காலம் ஆண்டான். அவனுடைய இராணியின் பெயர் வானதி. சகோதரி குந்தவைக்கு வந்தியத் தேவன் என்ற வீரனையும் விவாகம் செய்து வைத்தான்.

தென் இந்திய அரசர்களுள் சிறந்தவனாக இராச ராச சோழன் மதிக்கப்பட்டான். அவனுடைய தரைப் படையும் கடற்படையும் இலங்கை, பர்மா, தாய்லாந்து, கம்போடியா முதல் பல நாடுகளையும் வென்று, சோழ இராச்சியத்துடன் சேர்த்தன. அவனும் அவன் மகன் இராசேந்திரச் சோழனும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கப்பாடுபட்டனர். அவர்கள் கட்டிய சிவன் கோயில் கள் இன்றும் கலைச் செல்வங்களாக விளங்குகின்றன. " தேவாரங்களைச் சீர்செய்து, இசையுடன் கோயில்களில் படிக்க ஓதுவார்களை நியமித்தான். எதிரிகளை ஒடுக்கி, நண்பர்களை மதித்து, நேர்மை தவறாத சைவத் தமிழ் மன்னனென " இவனைச் சரித்திரம் போற்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 57

# சுப்பிரமணிய பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் தமிழ் மொழி மூலமாக இந்தியரைத் தட்டி எழுப்பிய பெருங் கவிஞர். இவரை "வரகவி, தேசியகவி, மகாகவி, புதுயுகக் கவி" எனவும் கூறுவர். ஆங்கில அரசாங்கம் அவருடைய பாடல்களைக் கேட்டு நடுங்கியது. புத்தகத்தையும் தடை செய்தது. பாரதியாரின் எண்ணங்கள் பல இடங்களிலும் பரவின. குழந்தைகள் முதல் எல்லோருடைய குரலிலும் ஒலித்தன. பண்டிதர்களும் புலவர்களும் பெரும் புலவனெனப் பாரதியாரைப் போற்றினர்.

தென் இந்தியாவில் எட்டயபுரத்தில் அவருடைய நினைவான ஆலயம் உண்டு. தகப்பனார் சின்னச்சாமி ஒரு பிராமண உத்தமர். தமிழும் ஆங்கிலமும் தெரிந்த ஒரு ஆசிரியர். அவருடைய முதல் மனைவி இலட்சுமி இடத்தில் 1882 ஆம் வருடம் பாரதியார் பிறந்தார். சிறு வயதில் தாயார் இறக்க, சின்னச்சாமி ஆசிரியர் தந்தையும் தாயும் ஆனார். பிராமணருக்கு உரிய முறையில் வளர்க்கப்பட்டார். சிறு வயதிலேயே பாட்டுக்கள் இயற்றும் வல்லமை உடையவர். அதனால் புலவர்கள் அவரைப் பாரதியார் என அழைத்தனர். பதினைந்தாவது வயதில் செல்லம்மாளை விவாகம் செய்தார். தகப்பனார் இறந்ததும் சீனியர் வகுப்பில் படித்த பாரதியாரின் படிப்பும் முடிந்தது. பல புலவர்களுடனும் வித்துவான்கள், பண்டிதர்களுடனும் உரையாடி நேரம் கழித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள், காந்திமதிநாதன் என்ற புலவர் இளைஞர் பாரதியாரைக் கேலி செய்யக் கருதினார். ' பாரதி சின்னப் பயல் ' என்று கடைசியில் வர ஒரு வெண்பா பாடும்படி கூறினார். பாரதியார் சொன்னவருடைய பெயரையும் வைத்து " காந்திமதிநாதனைப் பார் அதி சின்னப்பயல் " என ஒரு வெண்பா இயற்றிவிட்டார். புலவர்கள் எல்லோரும் மெச்சினர். 1901 ஆம் வருடம் காசி சர்வகலாசாலையில் வடமொழி கற்றார். பின்பு எட்டயபுரம் வந்து அரச சபையில் புலவராக இருந்தார். மதுரையில் ஆசிரியராகவும் பணி செய்தார். சென்னையில் சுதேசமித்திரன், பாலபாரதம், இந்தியா முதலிய தேசிய பத்திரிகைகளையும் நடத்தினார். தமது கவிதைகளின் மூலம் புதிய ஆவேசத்தையும் உண்டாக்கினார். அரசாங்கம் சிறை பிடிக்க முயன்றது. அதனால் இவர் புதுச்சேரிக்குப் போனார். அங்கு விடுதலை வீரர் பலருடைய நட்பும் கிடைத்தது.

பாரதியாருக்கு நோய் பிடித்ததால், இளம் வயதிலேயே உடம்பு கெட்டுவிட்டதால், சென்னைக்குச் சென்றார். சுதேசமித்திரனில் வேலை செய்து 1921 இல் திருவல்லிக்கேணியில் இறந்தார். பாரதியார் குழந்தைகள், பெண்கள், சமூகம், தமிழ், சமயம் என்ற தலைப்புகளில் பாடி உள்ளார். பல கதைகளும், கட்டுரைகளும், வசனப் பகுதிகளும் எழுதி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 58

# மகாத்மா காந்தி

இருபதாம் நூற்றாண்டில் உலகம் போற்றிய உத்தமன் மகாத்மா காந்தி. உயிர்களிடத்தில் அன்பு, நாட்டுப்பற்று, மக்கள் ஒற்றுமை, ஒழுங்கு, கட்டுப்பாடு, எல்லோருக்கும் தொழில், எல்லோரும் சமமாக வாழுதல், எல்லோரும் வீரமாகச் சுயமரியாதையுடன் இருத்தல், போன்ற பல நல்ல எண்ணங்களை இந்தியாவில் வளர்த்தார். இந்திய மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டினார். அன்பு வழியில், உண்மைவழி நின்று, ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவைச் சுதந்திரம் பெறத் தொண்டு செய்தார்.

மகாத்மாகாந்தி இந்தியாவில் 1869 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 ஆம் நாள், குஜராத்திலுள்ள போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். தகப்பன் காபாகாந்தியும் தாயார் புத்லிபாயும் மிகவும் நல்லவர்கள். காந்தி இளமை யிலேயே அன்பு, அடக்கம், இரக்கம், உண்மை நிறைந்த சிறுவனாக வளர்ந்தார். தாய், தகப்பன் சொற்கேட்டு நடந்தார். அவர் இளமையில் நாடகங்கள் பார்த்தார். ஒரு நாடகத்தில் தாய், தந்தையரைச் சுமந்துகொண்டு, தீர்த்த யாத்திரை செய்த சிரவணனைக் கண்டார். அரிச்சந்திரன் நாடகத்தில், உண்மைக்காகக் கஷ்டப்பட்ட அரிச்சந்திரனை யும் மெச்சினார். அவர்களைப் போலத் தானும் வாழவிரும்பினார். சட்டம் படிக்க இங்கிலாந்து சென்றார். போகும்போது தாயாருக்குச் சில உறுதி மொழிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். "மாமிசம் சாப்பிடுவதில்லை, மது குடிப்பதில்லை, தீய செயல்களில் ஈடுபடுவதில்லை" என்று மூன்று உறுதிமொழிகளையும் காத்து வாழ்ந்தார்.

பெரிய சட்ட நிபுணராக இந்தியா திரும்பிய மகாத்மா காந்தி வழக்கு வேலையாகத் தென் ஆபிரிக்கா சென்றார். அங்கு இந்தியர்களின் உரிமைக்காகப் பேசிக் கஷ்டங் களை அனுபவித்தார். இந்தியா திரும்பி, இந்திய தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். நாட்டு விடுதலைக்கு உழைத்து பலமுறை சிறை சென்றார். ஏழைகளில் ஒருவராகத் தானும் வாழ்ந்தார். மக்களுக்குத் தினமும் வழிகாட்டி வந்தார். அவருடைய பேராற்றலையும், சத்திய வழி யையும் மக்களுக்குள் இருந்த மதிப்பையும் கண்டு உலகம் புகழ்ந்தது. கதர் இயக்கம், ஒத்துழையாமை, உப்புப் போர், கல்வித் திட்டங்கள், தொழில் வளர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு எல்லாம் அவருடைய தலைமையில் இனிது நடந்தன. சிறையில் இருக்கும் போது அவர் மனைவி கஸ்தூரிபாயும் இறந்தார். ஆங்கில அரசாங்கம் 1947 இல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்தது. மகாத்மா காந்தி தான் தொடங்கிய பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். கொடியவன் ஒருவனால் 1948 இல் கொலை செய்யப்பட்டார். 'தேசத் தந்தை, உலக உத்தமன்' என இன்றும் காந்தி மகான் போற்றப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிட்டோர் ஸ்பாட்டன் கிரபிக்ஸ் பிரைவேட் லிமிடெட் கொழும்பு-13. தொலைபேசி : 323638

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org